உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்.



# வல்வெட்டித்துறை

# ஊரின்னிசை

ஆசிரியர்கள்:
ந. க. முத்துக்குமாரசாமி B. A. (Burma Pensioner)
செ. வயித்தியலிங்கம்பிள்ளை (F. M. S. Railway)

V. Nithyanandan

5/12/'83

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.



# வல்வெட்டித்துறை ஊரின்னிசை.

❋

ஆசிரியர்கள்:


பூ. க. முத்துக்குமாரசாமி B. A. (*Burma Pensioner*)

செ. வயித்தியலிங்கம்பிள்ளை (*F. M. S. Railway*)


❋

# பொருளடக்கம்.

1 நூன்முகம்

2 முன்னுரை

3 வல்வெட்டித்துறைக் கோயில்கள்

4. திருச்சிற்றம்பலப் பிள்ளையார் கோயில்

5. முத்துமாரியம்மன் கோயில்

6. சிவன் கோயில்

7. கல்வி வசதிகள்

8. வைத்திய வசதிகள்

9. தொழில் முறைகள்

10. 19-ம் 20-ம் நூற்றுண்டின் கப்பல்கள்

11. பழக்க வழக்கங்கள்

12. சுகாதாரம் - பட்டினசபை, நகரசபை

13. தற்கால நிலை

14. சில முக்கிய குறிப்புகள்

15. வருங்காலத்திற்கான சில யோசனைகள்

16. முடிவுரை

## 1. நான் முகம்

இற்றைக்குச் சில மாதங்களுக்கு முன் நண்பர் செ. வயித்தியலிங்கம்பிள்ளை என்னுடன் உரையாடிக்கொண்டிருந்தபோது எங்கள் ஊரில் முற்காலத்தில் எவ்வளவோ கப்பல்கள் ஓடிக்கொண்டிருந்தனவென்றும், அவைகளெல்லாம் இன்று ஒழிந்து போயினவென்றும். அவைகளின் விபரங்களையெல்லாம் தான் சேகரித்துவைத்திருப்பதாகவும் இவ்வூர்க்கடலோடிகளின் அருமை பெருமைகள் பின் சந்ததியாருக்குத் தெரியாமல் மறைந்து போய் விடுமேயெனவும் சொல்லி வருத்தப்பட்டார்கள்.

எனக்கும் எங்கள் ஊரைப்பற்றி சிலபல விபரங்களை வரலாற்று முறையாக எழுதவேண்டுமென ஒரு விருப்பம் இருந்து வந்தது ஆகவே நண்பரின் உரையாடல் ஒரு தூண்டுகோலாகி என் விருப்பம் நிறைவேறக்கூடிய காலமும் கைகூடியிருக்கிறது. நண்பர் செ. வ. அவர்கள், வாலிபமிடுக்குடன் நான் கேட்கும் விடயங்கள் எல்லாவற்றையும், அப்போதைக்கப்போதே, சேகரித்துத் தந்துதவியும், ஆங்காங்கே யோசனைகள் சொல்லியும் வந்தார்கள்.

இந் நூலின் கோப்புமுறையும், வாசகங்கள் வருணனைகள் விளக்கங்கள் யாவும் என்னுடையவை. இவைகளிலுள்ள பிழைகள், குறைகள் குற்றங்கள் யாவும் என் அறியாமையால் உண்டானவை. இலங்கையிலுள்ளவரும் பிறரும் பல விடயங்களை அறிந்திருப்பார்கள். ஆனல் வல்வெட்டித்துறை கடவுட்பக்தி நிறைந்துள்ள ஊரென்றும், கோயில்களை மிகவும் துப்பரவாகவும், தூய்மையாகவும், வைத்திருப்பவர்களென்றும், பூசைக் காலங்களிலோ, திருவிழாக் காலங்களிலோ, ஒரு ஒழுங்குமுறையைக் கடைப்பிடித்து, ஆண்கள், பெண்கள் சிறுவர்கள் சுவாமிதரிசனஞ் செய்யச் சில நியதிகளை முற்காலந் தொடக்கம் ஏற்படுத்தியுள்ளார்களென்றும் சிலரே அறிந்திருக்கக் கூடும். ஆகவே வல்வையின் கோயில்களைப் பற்றி முடிந்தவரை விபரமாக எழுதியிருக்கிறேன். மேலும் எவ்வளவோ குறிக்கப்பட வேண்டியவைகள் விடுபட்டிருக்கக்கூடும் இவைகளை நிறைவு செய்வது இளைய வல்வையின் கடமை.

கப்பல்களின் விபரங்கள் சேகரிப்பின் திரு. அருளம்பலம் அம்பலவாணன் அவர்களும் திரு. கந்தசாமி காத்தலிங்கம் அவர்களும் உதவியாயிருந்தார்கள். இவர்களுக்கு நண்பர் செ. வ. அவர்களினதும் எனதும் நன்றி. மற்றும் பலர் யோசனைகள் சொல்லியும் பிற உதவிகள் செய்தும் ஊக்கமளித்தார்கள். இவர்கள் யாவருக்கும் நன்றி.

இந்நூலை நல்லமுறையிலும் துரிதமாகவும் அச்சேற்றி தந்த பருத்தித்துறை குமார் அச்சகத்தாருக்கும், அதன் உரிமையாளராகிய நண்பர் ச. காந்திதாசன் அவர்கள் செய்த பலவித உதவிகளுக்கும் என் மனமார்ந்த நன்றி.

என் ஊராகிய வல்வெட்டித்துறையின் இன்னிசையை இவ்வளவாவது எழுதுவதற்கு அருள்புரிந்த எம்பிரானை வந்தித்து வாழ்த்தி வணங்குகின்றேன்.

வல்வெட்டித்துறை. சி. ச. வை. கு. க. மு

1—10—1982

## 2. முன்னுரை

### 1. வல்வெட்டித்துறையின் எல்லைகள்.

வல்வெட்டித்துறை இலங்கைத் தீவின் வடபாலில் உள்ள ஒரு கடற்கரைப் பட்டினம். இது கிழக்கே கடற்கரைத் தீர்த்த மண்டபத்திலிருந்து மேற்கே சிதம்பராக் கல்லூரிவரை உள்ளதும், வடக்கே கடலாலும் தெற்கே வல்வெட்டி, கம்பர்மலைக் குறிச்சிகளாலும் அடக்கப் பெற்ற ஏறத்தாழ இருநூற்றைம்பது ஏக்கர் விஸ்தீரணமுள்ளதுமான ஒரு சிறிய பட்டினம்–இதுதான் ஆதி வல்வெட்டித்துறை.

ஆனல், இன்ரு கந்தவனக் கடவை தொடக்கம் செல்வச் சந்நிதி ஈருகவும், ஏறக்குறைய மூன்றரை மைல் நீளமும் சராசரி அரைமைல் அகலமுமுள்ள நகரசபைப் பட்டினமாகப் பரந்திருக்கிறது.

ஆதி வல்வையிலுள்ள யாவரும் ஒரே இனத்தவர்கள்–நகரசபையிலுள்ளவர்கள் பல இனத்தவர்கள்–ஆகவே, அவர்களுக்குள் கொள்வனவு, கொடுப்பனவு அநேகமாகக் கிடையாது. ஆனல், யாவரும் சிநேகபாவத்துடனேயே வாழ்ந்து வருகிருர்கள்.

### 2. வல்வையின் தோற்றம்.

ஆதி வல்வையின் தோற்றம் எந்தக் காலம் என்று நிர்ணயிக்க முடியவில்லை–ஒரு கால் சோழ பாண்டிய படையெடுப்புகளுடன் வந்த சேன வீரர்கள் சிலர் இங்கு தங்கியிருக்கலாம், சிலர் சற்று முந்திப் பிந்திக் குடியேறியிருக்கலாம். இவர்கள் இங்கே கடற்ருெழிலை மேற்கொண்டு நெடுங்காலமாகச் சீவித்திருக்கவேண்டும் இற்றைக்கு நான்கு ஐந்து நூற்ருண்டுகளுக்கு முன் இந்தியாவுடன் நெருங்கிய தொடர்புகொண்டு ஆதி வல்வையின் மேற்குப் புறத்திலும் பார்க்கக் கிழக்குப் புறத்திலுள்ளவர்கள் தங்கள் சொந்த முயற்சியாலோ அல்லது அறிவாளிகளின் தொடர்பாலோ அல்லது கல்வியாலோ வளர்ந்திருக்கிருர்கள். அதன் நிமித்தமாக அவர்கள் சிறுதோணிகள், படகுகள், வத்தைகள், சிறு கப்பல்கள் கட்டி, தென்னிந்தியாவின் இரு கரைகளிலும் வியாபாரம் செய்தார்கள்.

### 3. வல்வையின் வளர்ச்சியின் தொடக்கம்.

நாளாவண்ணம் செல்வமும் நாகரிகமும் பெருகிவந்தன. அப்புறம் காலம் செல்லச் செல்ல பெரும் கப்பல்களைக் கட்டியும் தென்னிந்தியாவின் கிழக்குக் கரையில் தமிழ் நாட்டிற்கு வடக்கேயுள்ள தெலுங்கு நாட்டின் பட்டினங்களாகிய வந்தேறு, காக்காநாடு முதலிய பட்டினங்களிலுள்ள வியாபாரிகளுடன் தொடர்பு கொண்டார்கள். இத் தொடர்பால் தெலுங்கு நாட்டுக் கப்பல்களிலும் கிழக்கு வல்வையார் தண்டையல்களாகி, கல்கத்தா, அக்கியாப், இறங்கூன், மோல்மீன் முதலிய பர்மா கடற்கரைப் பட்டினங்களுக்கும் சென்றுவரத் தொடங்கினார்கள்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியளவில் இந்தக் கடல் வாணிபமும் தொழிலும் மிகவும் விருத்தியடைந்துவிட்டது. இதன் தொடர்பாக இவ்வூரவர்களிற் சிலர், தங்களுக்குச் சொந்தமாக பெருங்கப்பல்கள் கட்டியும் வாங்கியும் கப்பல் முதலாளிமார்கள் ஆனார்கள்.

கிழக்கு வல்வை செழித்தது; வளர்ந்தது; பண்பில் உயர்ந்தது; கடவுள் வழிபாட்டில் சிறந்தது, அன்றியும் மலையாளம், தமிழ்நாடு, தெலுங்குநாடு ஆந்திரா, வங்காளம், அரக்கன், பர்மா முதலிய இடங்களிலிருந்து பலவிதமான உணவுப் பொருட்கள், நூதனப் பொருட்கள், அலங்காரப் பொருட்கள் வந்து குவிந்தன.

### 4. வளர்ச்சியின் தேக்கம்.

ஆனால், இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னும் இரண்டாவது உலகமகா யுத்தத்தின் பின்னும் அரசாங்கத்தினால் இக் கடல்கடந்த வாணிபமும் தொழிலும் முற்றாகவே ஒழிக்கப்பட்டு விட்டன.

சட்டப்படி ஒழிந்தாலும் இலங்கையில் உணவு பற்றாக்குறையும் உடை பற்றாக்குறையும் தாண்டவமாடிக் கொண்டிருந்தன. ஆகையால் முக்கியமாக வல்வையாரும், மற்றும் தீவுப்பகுதி, மன்னார்ப் பகுதியிலுள்ளவர்களும் இத் துன்பங்களைத் தவிர்க்க தென்னிந்தியாவிலிருந்து பல உணவுப் பொருள்களையும் உடைகளையும் கொண்டு வரும் பொழுது அரசு இத்தடை உத்தரவை கண்டும் காணாமலும் விட்டுக்கொடுத்தது. பின்னால் சில காலம் மிகவும் கடுமையாகத் தடுப்பு முறைகளைக் கடைப்பிடித்தார்கள். ஆனால், அச்செயல் திருப்தியளிக்காமையால் இன்றைய அரசாங்கம் இலங்கையிலுள்ள எவரும் இந்தியா சென்று விரும்பிய பொருட்களைக் கொண்டுவரலாமென்று அனுமதித்தது.

இதன் காரணமாக தற்போது இந்தியாவுக்கு வாரம் மும் முறை சென்றுவரும் கப்பல்களில் இலங்கைக்குத் தேவையான சகல பொருட்களும் வந்து நிரம்பிக்கொண்டிருக்கின்றன.

## 5. வல்வை கிழக்கும் மேற்கும்.

மேற்கு வல்வையார் நெடுகிலும் கடல் தொழிலே செய்து வருகிறார்கள். ஆனால், இப்பொழுது சில காலமாகக் கடல் தொழில் மிகவும் விருத்தியடைந்துள்ளது' முற் காலத்தைப்போல் காற்றின் உதவியைக்கொண்டு மட்டும் தொழில் செய்யாமல் இயந்திரம் பொறிக்கப் பெற்ற வள்ளங்களிலும், கட்டுமரங்களிலும் நூதனமான யப்பானிய வலைகளை உபயோகித்தும் கடற்றொழிலை ஊக்கத்தோடு செய்து பெரும் இலாபங்கள் அடைந்து கிழக்கு வல்வையாரைப்போல் செல்வத்தில் கிட்டத்தட்டச் சரிசமமாக வளர்ந்துவிட்டார்கள்—பிறநாடுகளின் தொடர்புகளில் அவர்கள் பங்கு கொள்ளாவிட்டாலும் கிழக்கு வல்வையாரைப் போல நடையுடை பாவனைகளில் சமமாக நாகரிகத்திலும் பண்பிலும் செழித்தோங்கி வருகின்றார்கள்.

## 6. குடிப் பெருக்கத்தின் காரணம்.

வல்வையின் சனப்பெருக்கத்துக்கு ஒரு காரணம் இரண்டாம் உலக யுத்தத்தின் பின் கடல் கடந்த கப்பல்களின் போக்குவரத்து மிகவும் குறைந்து விட்டதனால் வல்வையார் மாதக்கணக்காக வெளியூர்களுக்குப் போய்வர முடியாமற் போய்விட்டது. கடல் கடந்த கப்பல்களில் தொழில் செய்பவர்கள் ஆவணி மாதத்தில் ஊரைவிட்டுச் சென்றால் அடுத்துவரும் சித்திரை மாதக் கடைசி வரையில் ஊரில் தங்கமுடியாமல் கப்பலிலே வாழ்க்கையை நடத்தினார்கள். ஆனால், கடல் கடந்த கப்பல் வாணிகம் அரசாங்கரீதியில் நிறுத்தப்பெற்றபடியால் ஊரவர்கள் யாவரும் தொடர்பாக ஊரிலே இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. உடை உணவுப் பஞ்சத்தால் வியாபார நிமித்தமாக இந்தியாவுக்குப்போய் அவைகளைக் கொண்டுவருவதாயிருந்தாலும் அவர்கள் இரண்டு மூன்று நாட்களுக்குள் ஊருக்குத் திரும்பிவிடுவதுண்டு. குடும்பரீதியாக அவர்கள். ஊரிலே இருத்தற்குச் சமமாயிற்று.

பணம், பொருள், பண்டம் நிரம்பியும் இருந்தன. ஆகவே யாவரும் மக்களைப் பெற்றுக் குடும்பங்கள் பல்கிப் பெருகின. இன்று

வல்வையாரில் அநேகர் முப்பது வயதிற்குட்பட்டவர்களாக இருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. குடும்பப் பெருக்கத்தாலும் வல்வையார் பொதுவாக வெளியூர்களுக்குச் சென்று குடியேருத தாலும் தற்போது இவ்வூர் ஜனநெரிசலுள்ள ஒரு ஊராக வந்து வந்துவிட்டது.

இலங்கையில் சனநெருக்கத்துக்குப் பேர்பேனது கிழக்கு மகாணத்தில், மட்டக்களப்புக்குப் பக்கத்திலே உள்ள காத்தான் குடியாகும். இன்று வல்வை இரண்டாவது சன நெருக்கடியுள்ள பட்டினமாக இருக்கிறது.

## 7. வளர்ச்சியின் முடிவு.

பொதுவாக யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ளவர்களுக்கும் சிறப்பாக வல்வையிலுள்ளவர்களுக்கும் இந் நூற்ருண்டின் முன் அறுபது ஆண்டுகள் வரையில் அரசாங்க உத்தியோகங்களே வருமானம் கொடுக்கக் கூடியனவாக இருந்தன. 1960 க்குப் பின் இலங்கையின் பல பாகங்களிலும் கல்வி வளர்ச்சியால் தங்கள் பகுதிகளின் சன விகிதாசாரப்படி உத்தியோகங்களைப் பெற்று யாழ்ப்பாணத்தார் அரசாங்க உத்தியோகங்களைப் பெறுவது மிக வும் அருகிவிட்டது.

தற்போது வருமானம் பெறக்கூடிய வேறு வழிகளை வல்வையார் தேடி வெளிநாட்டுக் கப்பல்களில் வேலை பெற்றுச் சென்றும், பெரிய படிப்புப் படித்தவர்கள் ஆபிரிக்கா முதலிய வெளிநாடுகளுக்குச் சென்றும், அரபு நாடுகளில் பலவகையான தொழில்களுக்குச் சென்றும் பணம் சம்பாதிக்கத் தொடங்கினர்கள். இந்த வகையிலும் இலங்கையில் பல பாகங்களிலும் உள்ளவர்கள் கடும் போட்டி போட்டு இவ்வூர் வருமானம் குறையத் தொடங்கலாயிற்று.

## 8. வரலாற்றுக் கதைகள்.

இது இவ்வாருக, யாழ்ப்பாணத்தில் தமிழ்மக்கள் குடியேறியதைப் பற்றி இன்னும் பலர் எழுதியிருக்கிருர்கள். உதாரணமாக யாழ்ப்பாணத்தில் அரசாட்சி செய்து கொண்டிருந்த ஓர் அரசனைப் புகழ்ந்து தமிழ் நாட்டிலிருந்து வந்த ஓர் அந்தகக் கவி பாடினரென்றும் அந்தப் புலவனுக்கு வெற்றிடமாக இருந்த ஒரு பெரிய நிலப்பரப்பை வேறு பல வெகுமதிகளுடன் அந்த அரசன்

அளித்தானென்றும், அப் புலவன் தமிழ்நாடு சென்று, பல குடி களைக் கூட்டிவந்து, இங்கு குடியேற்றினனென்றும் அதுவே யாழ்ப் பாணமென்னும் பட்டினத்தின் தொடக்கமென்றும் ஒரு வரலாற் றுக் கதையுண்டு.

இக் குடியேற்றங்கள் வல்வெட்டித்துறைக்கு எட்டியிருக்கு மென்று நம்புவதற்கு அறிகுறிகள், காரணங்கள் இல்லை.

வல்லிபுரக் கோவிலுக்கு வடக்கேயுள்ள நீண்ட மணற்பரப் பில் பல நூற்றாண்டுகளுக்கு முன் ஒரு தமிழரசு பலகாலமாகச் சிங்கை என்ற பட்டினத்தில் இருந்து வந்ததெனவும், அவ்விடம் சிறிது சிறிதாக மணலால் மூடப்பெற்றதென்றும், அவ்வரசன் யாழ்ப்பாணத்து நல்லூரில் குடியேறி, தன் அரசை நிலைநிறுத்தின னென்றும் இன்னொரு வரலாற்றுக் கதையும் இருந்து வருகிறது.

மண்ணால் மூடப்பெற்ற இடங்களில் முன்னொரு காலம் ஒரு பட்டினம் இருந்ததற்குப் பல அறிகுறிகள், சான்றுகள் உண்டெ னப் பேசப்பட்டும் வருகின்றது. இவை நிற்க, தமிழ்நாட்டில் உள்ள ஓர் அரசகுமாரி, குதிரை போன்ற முகம் உள்ளவளாக இருந்தா ளென்றும், அவளின் பெயர் மாருதப்பரவீகவல்லியென்றும், அவள் ஒரு பெரியவரின் அறிவுரைக்கிணங்கி, தமிழ்நாட்டிலிருந்து இலங் கைக்கு வந்து, கீரிமலையில் உள்ள புண்ணிய தீர்த்தத்தில் தீர்த்த மாடி தனது முகத்தோற்றம் குணமடைந்தாரென்றும், அதற்கு அறிகுறியாக அவள் வாழ்ந்து வந்த இடம் மாவிட்டபுரம் எனப் பெயர் பெற்றதென்றும் இன்னொரு வரலாற்றுக் கதை இருந்து வரு கிறது.

**9. பழங்கால யாழ்ப்பாணம் என்னும் நூல்.**

இக் கர்ணபரம்பரை வரலாறுகளெல்லாம் ஒருபுறம் இருக்க "பழங்கால யாழ்ப்பாணம்" (Ancient Jaffna) என்ற ஒரு பெரும் ஆராய்ச்சி நூல் திரு. கே. இராசநாயகம் என்ற பெரியாரால் எழு தப்பெற்றிருக்கிறது. அவர்கள் சங்க இலக்கியங்களாக எட்டுத் தொகை, பத்துப் பாட்டு, இறையனார் அகப்பொருள், சிலப்பதி காரம், மணிமேகலை, முத்தொள்ளாயிரம் முதலியவற்றிலிருந்தும் இராமாயணம், மகாபாரதம், கந்தபுராணம் முதலியவற்றிலிருந்தும் பல ஆதாரங்கள் காட்டி முற்கால யாழ்ப்பாணத்தைப் பற்றி எழுதி

யிருக்கிறார்கள். இந் நூலில் வல்வெட்டித்துறையில் கப்பல் கட்டும் தொழில் நடைபெற்றிருப்பதாகக் குறித்திருக்கிறார்கள்.

மேலும் "யாழ்ப்பாண வைபவமாலை" என்னும் நூல் ஒல்லாந்தர் காலத்தில் மாதகல் மயில்வாகனப் புலவர் அவர்களாலும், "யாழ்ப்பாண வைபவ கௌமுதி" என்னும் நூல் கல்லடி திரு K. வேலுப்பிள்ளை அவர்களாலும் இன்னும் வேறுபல நூல்கள் ஆங்கிலத்திலும் தமிழிலும் யாழ்ப்பாணத்தைப் பற்றியும் இலங்கையைப் பற்றியும் பலபெரியோர்களால் எழுதப்பெற்றிருந்தாலும் வல்வெட்டித்துறைப் பட்டினத்தைப் பற்றிய குறிப்புகள் மிகமிகக் குறைவு அநேகமாக இல்லையென்றே சொல்லலாம்

இவைகள் யாவற்றையும் பெரும் ஆராய்ச்சியாளர்களுக்கு விடுத்து. இப்போது நாம் வல்வெட்டித்துறைப் பட்டினத்தைப் பற்றியும் அதன் விபரங்கள், குறிப்புகளைப்பற்றியும் எழுதப்புகுவோமாக

## 10. வல்வையின் கோயில் நாகரிகம்.

வல்வை மக்களின் நாகரீகம், ஒழுக்கம், பண்பாடு, கடவுட் பக்தி, பழக்க வழக்கங்கள் யாவும் கோயில்களைச் சார்ந்தேயிருக்கின்றன அவர்களின் இன்ப துன்பக் காரியங்களும், கோயில்களின் குருக்கள்மாருடன் தொடர்புடையனவாக இருக்கின்றன. வல்வை மக்களின் பெரும் பகுதியினர் ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் உட்பட கோயில் தரிசனத்தில் ஆர்வம் உள்ளவர்கள். இவ்வூரின் முக்கிய கோயில்களாகிய பிள்ளையார் கோயில், அம்மன் கோயில், சிவன் கோயில்களில் ஆண்டு முழுவதுமே திருவிழாக்கள், விசேட உற்சவங்கள், விசேட பூசைகள் நடந்து கொண்டேயிருக்கின்றன. ஆகவே இந்த மூன்று கோயில்களைப்பற்றியும் சற்று விரிவாக எழுதுவோமாக.

பிள்ளையார் கோயில் பெரியதுமில்லை; சிறியதுமில்லை நீளம் 161 அடி, அகலம் 131 அடி. இரண்டு பிராகாரங்களைக் கொண்டது. அம்மன் கோயிலும் அதேவிதமே நீளம் 171 அடி அகலம் 139 அடி இரண்டு பிராகாரங்களைக்கொண்டது சிவன் கோயில் பெரியகோயிலாகும் நீளம் 350அடி அகலம் 265அடி. மூன்று பிராகாரங்களைக் கொண்டது மூன்று கோயில்களிலும் நந்தவனங்கள் இருக்கின்றன. பிள்ளையார் கோயில் மேற்கு வீதியும், அம்மன் கோயில் வடக்கு

வீதியும் பருத்தித்துறை புன்னாலைக்குச் செல்லும் பெரும் வீதியாகவே அமைந்து விட்டன.

## 3. வல்வெட்டித்துறைக் கோயில்கள்.

1. திருச்சிற்றம்பலப் பிள்ளையார் கோயில்
2. முத்துமாரியம்மன் கோயில்
3. சிவன் கோயில்
4. புஷ்கரிணிப் பிள்ளையார் கோயில்
5. வைகுந்தப் பிள்ளையார் கோயில்
6. உலகுடைய பிள்ளையார் கோயில்
7. நறுவிலடிப் பிள்ளையார் கோயில்
8. கப்பலுடைய பிள்ளையார் கோயில்
9. தில்லையன் மடத்து வைரவர்
10. வில்லை பத்திரி வைரவர்
11. சடையாண்டி வைரவர்
12. ஆதிகோயில் வைரவர்
13. மீனாட்சி அம்மன் கோயில்
14. சுந்தரேசப் பெருமான் கோயில்

வல்லையின் எல்லையிலுள்ள கோயில்கள்.

1. வீரகத்திப் பிள்ளையார் கோயில்
2. முருகையன் கோயில்
3. நெற்கொழு வைரவர் கோயில்
4. வண்ணிச்சி அம்மன் கோயில்
5. பெரிய காத்தவராயர் கோயில் (பராசக்தி அம்மை)
6. சின்னக் காத்தவராயர் கோயில்

இக்கோயில்களுள் ஆண்டுதோறும் பெருந் திருவிழாக்கள் நடப்பவை:

1. திருச்சிற்றம்பலப் பிள்ளையார் கோயில்
2. முத்துமாரி அம்மன் கோயில்
3. சிவன் கோயில்
4. வீரகத்திப் பிள்ளையார் கோயில்

மேலும் ஆண்டுதோறும் சிறிய அளவில் 10 நாள் திருவிழா நடப்பவை

1. நெற்கொழு வைரவர் கோயில்
2. கப்பலுடைய பிள்ளையார் கோயில்
3. புட்டணி என்று அழைக்கப்படும் புஷ்கரிணிப் பிள்ளையார் கோயில்

மற்றும் சில கோயில்களில் ஒருகால, இருகாலப் பூசைகள் நடைபெறுகின்றன. சில கோயில்களில் விசேட நாட்களில் வேள்விகள், குளிர்த்திகள், பொங்கல்கள் அப்போதைக்கப்போது நடைபெறுகின்றன.

## 4. திருச்சிற்றம்பலப் பிள்ளையார் கோயில்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்க ஆண்டுகளில் பிள்ளையார் வயிரவர் என்று அழைக்கப் பெற்ற ஒரு சைவ ஆசார சீலர் தற்போதய கோயில் தெற்கு வீதியில் அமைக்கப் பெற்றிருந்த மடத்தில் பிள்ளையாரை எழுந்தருளச் செய்து, சில காலத்திற்குள் வேதாரணியத்திலிருந்து கணபதி ஐயர் என்று பெயருடைய ஒரு சைவக் குருக்களை அழைத்து வந்து பூசை புனஸ்காரங்கள் நடப்பித்து வந்தாரெனத் தெரிய வருகிறது. இவருக்கு வாரிசுகள் இல்லை ஆனால், பூசைகள் கிரமமாக சிவஸ்ரீ கணபதி ஐயர் அவர்களாலும் அவர் காலத்தின் பின், அவருடைய மகன் சிவஸ்ரீ தியாகையர் அவர்களாலும் நடத்தப்பெற்று வந்தன.

அக்காலங்களில் கப்பல் வாணிபம் தொடங்கப்பெற்று செவ்வனே நடந்து வந்தகால். கப்பற்றொழில் சம்பந்தப்பட்ட எல்லோரிடமிருந்தும் மகமைகள் வசூலிக்கப்பெற்று, கோயிலுக்குச் சேர்க்கப்பெற்று வந்தன 1—2—1846ல் பிரசித்த நொத்தாரிசு கதிர்காமர் சிதம்பரநாகர் முன்னிலையில் எழுதப்பெற்ற உறுதியாலும், 6—5—1868ல் பிரசித்த நொத்தாரிசு K. கணபதிப்பிள்ளை முன்னிலையில் எழுதப்பெற்ற உறுதியாலும், மகமைத் தொகையில் என்ன விழுக்காடு, நெடியகாடு திருச்சிற்றம்பலப் பிள்ளையார், கோயிலுக்கு கொடுக்கப்பட வேண்டுமென்கிற விபரம் தெளிவாகக் காட்டப்பெற்றிருக்கிறது இவ்வுறுதிகள் ஊரிலுள்ள பல பெரியார்கள் முடித்துக் கொடுத்திருக்கிறார்கள் மகமைகள் வசூலிப்பதும் செலவு செய்வதும் பெரியவர் திருமேனியார் வெங்கடாசலப் பிள்ளை உட்பட ஐவர் கொண்ட ஒரு குழுவினரிடம் ஒப்படைக்கப்பெற்றது

அப்போது பிள்ளையார் கோயிலுக்கு ஆறுமுகம் முருகுப்பிள்ளை யென்னும் பெரியார் மணியமாயிருந்தார்.

1867ம் ஆண்டு சிவன் கோயில் சங்குத் தாபனம் செய்யப் பெற்ற இரண்டொரு ஆண்டுகளில் திரு. வெங்கடாசலம்பிள்ளை சிவன்கோயில் திருப்பணியோடு ஒன்றிவிட்டமையால், அவர் பிற கோயில்களின் வேலைகளிலிருந்து விலகி விட்டார்கள். (விபரம் முத்துமாரியம்மன் கோயில் சரித்திரப் பகுதியைப் பார்க்கவும்.),

இக்கால கட்டத்தில் கந்தக்குட்டியார் வேலுப்பிள்ளை யென்னும் சைவ ஆசாரசீலர். பிள்ளையார் கோயில் மேற்பார்வை யாளரானார். உடனே இவர் பிள்ளையாரை, முடிந்தவரை ஆகமவிதி களுக்கமைவாகக் கட்டப்பெற்ற கோயிலில் எழுந்தருளச் செய்ய வேண்டுமென உறுதி பூண்டார் சிறிது சிறிதாக மூலத்தானம், தம்ப மண்டபம், மதில் முதலியவை கட்டி, பிள்ளையாரை மூலத் தானத்தில் எழுந்தருளச் செய்து, 1884ல் பிரதிட்டா அபிடேகம் செய்வித்தார்கள். இவருக்கு ஆண்பிள்ளைகள் இல்லாமையால், தன் சகோதரி மகளின் கணவன் சண்முகர்பிள்ளையை, தன்னுடைய திருப்பணி வேலையில் சேர்த்துக் கொண்டார்கள் இவர்களும் திருப் பணி வேலைகளைத் தொடர்ந்து தம்பம், நிறுத்தித் தேரும் செய் வித்து 1892-1912ம் ஆண்டுகளுக்கிடையில் ஆண்டுப் பெருந் திரு விழாவைத்தொடக்கி வைத்தார்கள். எந்த ஆண்டில் பெருந் திரு விழா தொடங்கியதென்பதை அறிய முடியவில்லை

இவர்கள் 1912ம் ஆண்டளவில் கந்தக்குட்டியார் கதிரிப் பிள்ளை நடராசா என்னும் பெரியாரிடம் கோயில் மேற்பார்வையை ஒப்படைத்தார்கள். இவரின் காலமாகிய 1892-1918 ஆண்டுகளி லும் கோயிற் காரியங்கள் சிறப்புற நடந்தன. குருக்களும் காலமாகி விடவே அவர் மகன் செல்லையாக் குருக்கள் பிரதம பூசகரானார். க. க. நடராசா அவர்கள் தம்பமண்டபம் கோபுரத்தோடு ஒட்டிய மண்டபத்தையும் கட்டி முடித்தார்கள். திருச்சிற்றம்பலப்பிள்ளை யார் ஊஞ்சல் பராக்கு, எச்சரிக்கை முதலிய பாக்களைக் கொண்ட ஒரு சிறு நூலையும் 1916ம் ஆண்டு மதுரையில் பதிப்பித்தார்கள். 1918ம் ஆண்டில் கோயில் பரிபாலனம் இவரின் தமையனார் க. க. அருளம்பலம் அவர்கள் வசம் சேர்ந்தது.

இவர்கள் தம் கப்பல்களின் வியாபார இடங்களை முக்கிய மாகக் கவனித்து வந்தமையால் கோயில் பரிபாலனத்தையும் பணி

களையும் செவ்வனே செய்யமுடியாத நிலையில் ஊரவர்களிடம் பரிபாலனம் மாறிவிட்டது. 1918 – 1928ம் ஆண்டுகளில் கோயில் பணிகள் ஒன்றும் விசேடமாக நடைபெறவில்லை. அப்போது திருவாளர் வி. இராசமாணிக்கம் அவர்கள் கோயிற் பரிபாலகர் ஆனார். இவர்களுடைய காலமாகிய 1928 – 1930ம் ஆண்டுகளில், இவர்களுடைய முயற்சியால் ஒரு புனராவர்த்தன சம்புரோட்சண கும்பாபிடேகம் 1929ல் நடந்தது. இவ்வாறு கும்பாபிடேகம் நடந்த பின் 1930 – 1933ம் ஆண்டுகளில் திருவாளர்கள் செல்லையா தில்லையம்பலமும், ஆறுமுகம் விசுவலிங்கமும் ஒருவர் பின் ஒருவராய் கோயிலைப் பரிபாலித்து வந்தார்கள்.

அப்பால் திரு க. க. அருளம்பலம் அவர்களால் கோயிற் பரிபாலன உரிமைப் பேச்சு எழுந்ததன் காரணமாக ஒருவிதமான ஒற்றுமை ஏற்பட்டு, அருளம்பலம் அவர்கள் மணியமாகவும், அவர் நியமிக்கும் இரு உறுப்பினர்கள், ஊர்ப் பொதுமக்கள் நியமிக்கும் நான்கு உறுப்பினர்கள் ஆகிய எழுவர் கொண்ட ஒரு குழு மூலம் கோயிற் பரிபாலனத்தை மேற்கொள்வது, பருத்தித்துறை நீதிமன்றத்தின் 4ம் இலக்க வழக்கில் முடிவாகியது. இந்த ஒழுங்கு 1933 – 1937ம் ஆண்டுகள் வரையிருந்தாலும், அதுவும் செவ்வனே நடைபெறாத வகையில் திருவாளர் ம. சாம்பசிவம் அவர்கள் மணியம் ஆனார்கள். இவர் காலத்தில் சுற்றுமதில் வேலை பூர்த்தியடைந்தது. 1915ம் ஆண்டளவில் திரு ம. சாம்பசிவம் அவர்கள் விலகிக்கொள்ள, திருவாளர் பொ. தங்கவேலாயுதம் அவர்கள் மணியமானார்கள். இவர் காலத்தில் கோபுரத்தின் கீழ்ப் பகுதி கார்த்திகேசுவாலும் பெண் ஞானசுந்தலையம்மாவாலும் திருப்திருப்பணி வேலையாகக் கட்டிமுடிக்கப் பெற்றது. அப்பால் இவரும் விலகிக் கொள்ள, 1950ம் ஆண்டளவில் திருவாளர் நா. செல்வமாணிக்கம் அவர்கள் மணியமாகி, இன்றளவும் இருந்து வருகிறார்கள்.

மணியம் செல்வமாணிக்கம் அவர்கள் கோயில் தொண்டில் தம்முடைய முழுச் சிந்தனையையும் செயலையும் அர்ப்பணித்தார்கள். 1950 – 1970ம் ஆண்டுகள் வல்லை பொருளாதாரத்திலும் சிறந்திருந்தது. இந்தச் சிறப்பையும் வளர்ச்சியையும் அவர்கள் நன்கு பயன்படுத்திக் கொண்டார்கள். கோயில் கட்டிடங்கள் யாவற்றையும் திருப்பணி வேலைகளாகவே முடிக்க எண்ணங்கொண்டு செயலாற்றத் தொடங்கினார்கள். மூலத்தானத்தையும், திருச்சபையையும் கற்கரை வேலையாகக் கட்டத் தொடங்கினார்கள். வள்ளி தெய்வ

யானை சமேதராக முருகக் கடவுளுக்குப் புதிய கோயில் கட்டப் பெற்றது. நாகதம்பிரான் கோயில் மேலுள்ள பதுமபீடம் விமான வேலையாய் முடிக்கப்பெற்றது. தீர்த்தக் கிணறு திருப்பணி வேலை யாய் புதுப்பிக்கப் பெற்றது. கிழக்குத் தெற்குப் பிரகாரங்கள் புதுப்பிக்கப் பெற்றன' வெளிக் கோபுரம் முழுமையும் கட்டி முடிக் கப்பெற்றது கொடித் தம்பம், தம்ப மண்டபம், மணிக் கோபுரம், வயிரவர் கோயில், சண்டீசுரர் கோயில், கிழக்குப் பிரதான வாச லின் அலங்கார மண்டப முகப்பு, தெற்கு வாசல் முகப்பு, வன்னி மரத்தடியில் ஒரு சிறு பிள்ளையார் கோயில் ஆகிய சகல வேலைக ளும் மிகவும் சிறப்பாகவும் அலங்காரமாகவும் முடிக்கப்பெற்றன. இப் பணிகள் யாவையும் முடிக்க ஊர்ப் பெரியவர்களையும், பொது மக்களையும் அப்போதைக்கப்போது கண்டு பேசி, பணம் திரட்டும் வேலையில் அயராதுழைத்த பணி, மணியம் செல்லமாணிக்கத்தைச் சார்ந்ததாகும்.

இவை யாவும் கவினுறச் செய்யப்பெற்ற பின் புனருத் தாரண சம்புரோட்சண கும்பாபிஷேகம் 7 – 6 – 1970ல் சிறப்புற நடந்தேறியது.

இனிக் கோயில் தற்போதிருக்கும் நிலைக்கு எவ்வாறு வளர்ந்திருக்கிறது என்பதை அறிவோமாக.

| கோயிலின் பகுதி | திருப்பணி செய்தவர்கள் |
|---|---|
| 1. கர்ப்பக் கிரகம் | ஆ. செல்லத்துரையும் பெண் தங்கரத்தினமும் |
| 2. திருச்சபை | வ. வ. இராமசாமியும் பிள்ளைகளும் |
| 3. நிருத்த மண்டபம் | (1) வ. வ. இராமசாமியும் பெண் இராசம்மாளும் |
| | (2 நா. செல்வமாணிக்கமும் பெண் வள்ளிநாயகியம்மாளும் |
| 4. நாகதம்பிரான் | க பொன்னம்பலமும் பெண் அன்னப்பிள்ளையும் |
| 5. 1968-70ல் புதிதாய்க் கட்டப்பெற்ற முருகையா | (1 அ. துரைராசாவும் பெண் இராசேசுவரியும் |

| | | |
|---|---|---|
| | | (2) அ. சிற்றம்பலமும் பெண் பார்வதிப்பிள்ளையும் |
| 6. | யாகசாலை | ம. சாம்பசிவமும் பிள்ளைகளும் |
| 7. | வயிரவர் | சரவணப்பெருமாளும் பெண் பொன்னன் அம்மா |
| 8. | வசந்த மண்டபம் | வே. இராம. வேலுப்பிள்ளையும் பெண் இராசரத்தினமும் |
| 9. | பூந்தோட்டக் கிணறும் தண்ணீர்த் தொட்டியும் | செ. காஞ்சிமாவடிவேலும் பெண் சவுந்தரியம்மாளும் |
| 10. | மணிக்கூட்டுக் கோபுரம் | சு. வயிரமுத்துவும் பெண் நாகபூவுணியம்மாளும் |
| 11. | தீர்த்தக் கிணறு | (1) அ. மாரிமுத்துவும் பெண் நாகம்மாளும் |
| 12. | மடப்பள்ளிக் கிணறு | மு. மா. பாலசிங்கம் |
| 13. | பூங்காவன மண்டபம் | (1) செ வி. நடராசா<br>(2) சி. பரஞ்சோதி<br>3 ஐ. காத்தாமுத்து |
| 14. | 1978ல் கட்டப்பெற்ற மோர் மடம் | தியாகராசா தேவசிகாமணி. |
| 15. | உட்பிரகாரத்தின் ஒரு பகுதி | திருமதி நாகரத்தினம். |
| 16. | கோயில் முகப்பு | நா. அ. மார்க்கண்டு சகோதரர்கள் |
| 17. | இராச கோபுரம் | அடிப்பாகம் ச. கார்த்திகேசுவும் பெண் ஞானசகுந்தலாவும், மேல் பாகம் செ. கந்தசாமித்துரையும் ஊர்ப் பொது மக்களும். |
| 18. | வன்னிமரப் பிள்ளையார் | 1979ல் நா. செல்லமாணிக்கம் |

| | | |
|---|---|---|
| 19. | பஞ்சமுகப் பிள்ளையார் | 1979ல் பூ. க. முத்துக்குமாரசாமியும் பிள்ளைகளும் |
| 20. | தேர்முட்டி | அ. சி. விஷ்ணுசுந்தரம் |
| 21. | வெளிக் கிணறு | சா. வனிதா ஞாபகார்த்தம் உபயம்: தா. சண்முகதாஸ் |
| 22. | கிழக்குவீதி மடம் | ஓவசியர் கனகசபை பொன்னம்பலம் |
| 23. | நவக்கிரகங்கள் | சவுதி அரேபியா வல்வைப் பெரியவர்கள் |

## திருச்சிற்றம்பலப் பிள்ளையார் கோவில் பரிவார மூர்த்திகள்.

1. வள்ளி தெய்வயானை சமேத முருகப்பெருமான்
2. வயிரவர்
3. நாகதம்பிரான்
4. சண்டேசுரர்
5. வன்னிமரத்தடிப் பிள்ளையார்
6. நவக்கிரகங்கள்

## திருச்சிற்றம்பலப் பிள்ளையார் கோவில் சிலா விக்கிரகங்கள்.

| | | |
|---|---|---|
| 1. | ஆதிப் பிள்ளையார் | கந்தக்குட்டியார் வேலுப்பிள்ளை |
| 2. | வள்ளி தெய்வயானை சமேத முருகப் பிரான் | பொ. தங்கவேலாயுதம் |
| 3. | எழுந்தருளிப் பிள்ளையார் | ஆ. செல்லத்துரைத் தண்டையல் |
| 4. | பஞ்சமுகப் பிள்ளையார் | பூ. க. முத்துக்குமாரசாமியும் பிள்ளைகளும் |

## திருச்சிற்றம்பலப் பிள்ளையார் கோவில் குருக்கள் பரம்பரை

| | | | |
|---|---|---|---|
| 1. | வேதாரணியம் | — | கணபதி ஐயர் |
| 2. | மகன் | — | தியாகையர் |
| 3. | மகன் | — | செல்லையாக் குருக்கள் |
| 4. | தம்பி மகன் | — | முத்துவையர் என்ற சோமசுந்தரக் குருக்கள் |

5. மகன் — பொன்னுவையர் என்ற நந்தகோபால் குருக்கள்.

## திருச்சிற்றம்பலப் பிள்ளையார் கோயில் பூசைக் கிரமங்கள்.

1. காலைப் பூசை. வைகறையில் அபிடேக ஆராதனைகள் நடந்து, 6 மணியளவில் பிரசாதம் வழங்கப்பெறும்.

2. நண்பகல் பூசை. 10 - 30 மணிக்கு அபிடேகம் நடந்து அலங்கார பூசைகள் நடந்து பிரசாதம் வழங்கப்பெறும்.

3. இராப் பூசை. மாலை 6 மணிக்கு அபிடேகம் நடந்து, அலங்கார பூசைகள் 6 - 30 மணிக்குத் தொடங்கி 7-30 மணியளவில் பிரசாதம் வழங்கப்பெறும்.

4. மாதப் பிறப்புத் தினங்களிலும், வெள்ளிக்கிழமைகளிலும் முதற் குடமுழுக்கு முதலிய விசேட நாட்களிலும், உருத்திரா அபிடேகம் முதலானவை நடந்து, அலங்கார விசேட பூசைகள் நடைபெறும். பக்த கூட்டங்கள் பெருந்தொகையாகக் கூடுவார்கள்

5. வன்னிமரத்துப் பிள்ளையாருக்கு பொங்கல் பூசைகள் அநேக நாட்களில் நடைபெறும்.

## தற்போது இக்கோயிலில் நடைபெறும் விழாக்களின் விபரமானவை:-

1. ஒவ்வொரு மாதமும், வளர்பிறைச் சதுர்த்தி உற்சவம், விசேட அபிடேக ஆராதனைகள் செய்யப்பெற்று இரவில் சுவாமி வீதிவலம் வருகிறார்.

2. ஒவ்வொரு மாதமும், கார்த்திகை உற்சவம் விசேட அபிடேக ஆராதனைகள் செய்யப்பெற்று, இரவில் வள்ளி தெய்வயானை சமேத முருகப் பெருமான் மயில் வாகனத்தில் நிவர்ந்து, வீதியுலாக் காட்சி நடைபெற்று வருகிறது.
இது 1979ல் திரு. வ. வேலும்மயிலும் அவர்களால் தொடக்கப் பெற்றது.

3. ஒவ்வொரு ஆண்டும் ஆவணி மாத வளர்பிறை ஆறும் நாளிலிருந்து ஆண்டுப் பெருவிழா நடைபெறுகிறது. இத் திருவிழாக்களில் அப்போதைக்கப்போது நாதசுரக் கச்சேரி களும், நடனக் கச்சேரிகளும், சங்கீத கதாப் பிரசங்கங்களும் நடைபெறுகின்றன. கடைசித் திருவிழாவாகிய ஆவணி மாத முழுமதி நாளில், பிள்ளையார் ஊரணி தீர்த்தக் கடற்கரையில் தீர்த்தமாடி, நேரே சிவன்கோயில் சென்று, தங்கியிருந்து, இரவு அம்மன் கோயில் மோர் மடத்தில் 9 மணியளவில் வந்து சேர்ந்து, அங்கு மோர் மடத்தாரால் செய்விக்கப்பெறும் நாத சுர, மேளக்கச்சேரிகள் முதலியன அதிகாலை 2 மணியளவில் நடந்து முடிந்த பின், சுவாமி கோயிலுக்குத் திரும்பிய பின், கொடியிறக்கமும், அதன் தொடர்பான பூசைகள் வீதிவலமும் நடைபெற்று முடிவுபெறும்.

4. ஒவ்வொரு ஆண்டும் கார்த்திகை மாதத்தில் காப்புக்கட்டும் பூசை தொடங்கப்பெற்று 21 நாட்களும், ஒவ்வொரு நாளும் பிள்ளையார் கதை முழுமையும் படிக்கப்பெற்று விசேட அபி டேக ஆராதனைகள் பூசைகள் செய்து கொண்டாடப்பெறு கிறது.

5. ஒவ்வொரு ஆண்டும் கந்தசட்டி விரதமாகிய ஆறு நாட்களும் வள்ளி தெய்வயானை முருகப் பெருமானுக்கு விசேட அபிடேக ஆராதனைகள் பூசைகள் செய்து கொண்டாடப்பெறுகிறது.

6. ஒவ்வொரு ஆண்டும் கசமுக சம்காரமாகிய சூரன்போர் நடந்து, பிள்ளையார் அலங்காரம் செய்யப்பெற்ற விமானத்தில் நிவர்ந்து சிவன்கோயில் வரை சென்று, திரும்பும் வைபவம் சிறந்பாக நடைபெறுகிறது.

7. வைரவ சுவாமிக்கு சித்திரை மாதப் பரணிநாளிலும், ஐப்பசி மாதப் பரணிநாளிலும், தைமாத முதற் செவ்வாய்க்கிழமை யிலும் விசேட அபிடேக ஆராதனைகள், பூசைகள் நடைபெறு கின்றன. மேலும் ஆவணிமாதப் பெருந்திருவிழா முடிந்த பின் வரும் செவ்வாயோ, வெள்ளிக் கிழமைகளில் வைரவர் மடையென்னும் அலங்காரப் பூசை விசேட அபிடேக ஆராதனை களுடன் சிறப்பாக நடைபெறுகிறது.

8. ஆண்டுதோறும் மார்கழி மாதத்தில் வரும் திருவெம்பாவைப் பூசை மிகவும் அலங்காரமாகவும், சிறப்பாகவும் கொண்டாடப் பெறுகிறது. இந்தப் பத்து நாட்களுக்குள் திருவாதவூரடிகள் புராணபடனம் தொடங்கி முடிவுபெறும். இப் புராணத்தைப் படிப்பதற்கும், பயன்சொல்லி விளக்குதற்கும் அநேகர் காத்திருந்து புராண படனம் செய்வார்கள். ஆண்களும் பெண்களும் இளங்காளையர் கன்னிமார்கள் கூட்டமாக வந்திருந்து கேட்பார்கள். முக்கியமாகத் திருப்பெருந்துறைச் சுருக்கத்தைப் பக்தி சிரத்தையுடன் மனமுருகிக் கேட்பார்கள். மண் சுமந்த சுருக்கத்தில் வரும் பிட்டுக்கு மண் சுமந்த கதைப் பகுதியையும், மாணிக்கவாசக சுவாமிகள் எம்பெருமான் திருவிளையாடலை நினைந்து உருகிப் பிரலாபிப்பதாகிய கதைப் பகுதியையும் படித்து விளக்கிப் பொருள் சொல்வதையும் கேட்கும் போது படிப்போரும் கேட்போருமாகிய இருபகுதியாரும, தாங்களும் மனம் நெக்குநெக்குருகி, பக்திப் பரவசமடைந்தவர்களாகி கண்ணீர் கலுழ்வதையும் காணலாம். திருவம்பலச் சுருக்கத்தைப் படித்து, திருவாசகப் பகுதிகளையும், விளக்கங்களையும் கொடுக்கும் போதும், திருவடி பெற்ற சுருக்கத்தைப் படித்து, எம்பெருமான் எழுந்தருளி வந்து திருவாசகம் முழுமையையும் தம் திருக்கையால் ஏட்டில் பொறித்த கதையையும், திருக்கோவையாரை மாணிக்கவாசக சுவாமிகளைக் கொண்டு பாடச் செய்து ஏட்டில் பொறித்த விபரங்களையும், படித்து விளக்கிப் பொருள் சொல்லும் போது பரமபக்தியோடு கேட்டு ஆனந்தக் கடலில் ஆழ்ந்து பரவசப் படுவதும் வல்வையின் பண்பாடாகும்.

## தற்போதைய நிருவாக முறை.

| | | |
|---|---|---|
| நிருவாகக் குழுவின் தலைவர் | — | நா. செல்லமாணிக்கம் |
| உப தலைவர் | — | ந. பாலசுப்பிரமணியம் |
| செயலாளர் | — | இ. வல்லிபுரம் |
| பொருளாளர் | — | இ. சிவகுரு |

இன்னும் ஏழு உறுப்பினர்கள்

தேவை ஏற்படும்போதெல்லாம் நிருவாகசபை கூடி, திருச்சிற்றம்பலப் பிள்ளையார் கோயில் சகல காரியங்களும் செவ்வையான முறையில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. பிரதம குருக்கள் பொன்னுவையரும் செயலாளர் இ. வல்லிபுரம் அவர்

களும், பொருளாளர் இ. சிவகுரு அவர்களும் மிகவும் பக்தி சிரத்தையுடன் தொண்டாற்றி வருகிறார்கள்.

## 5. முத்துமாரியம்மன் கோயில்.

ஆசிரியர் வே. வ. சிவப்பிரகாசம் அவர்கள் "வல்வை முத்துமாரிஅம்மன் கோவில் சரித்திரம்" என்னும் பெயருடன் ஒரு சிறிய ஆராய்ச்சி நூல் எழுதியிருக்கிறார்கள். இந்நூல் மேற்படி கோவில் மணியம் வ. வ. இராமசாமிப்பிள்ளை அவர்களால் 24—4—1963ல் வெளியிடப் பெற்றிருக்கிறது.

இந் நூலில் ஆரியச் சக்கரவர்த்திகள் யாழ்ப்பாணம் நல்லூர் வந்த காலமாகிய 1048ம் ஆண்டுக்குப் பின்னும், பறங்கியர் யாழ்ப்பாணம் வந்த காலமாகிய 1617ம் ஆண்டுக்கு முன்னும் இக் கோயில் உண்டாகியிருக்கலாம் என அபிப்பிராயம் வெளியிட்டிருக்கிறார். மேலும் கோயில் முதலில் ஒரு கொட்டகையாயிருந்திருக்கலாமெனவும், காலா காலங்களில் சாந்துக் கட்டிடமாய் வளர்ந்திருக்கவேண்டுமெனவும், கற் கட்டிடமாயிருந்தால் பறங்கியரால் கட்டாயமாக அழிக்கப்பட்டிருக்குமெனவும், கூறுகிறார்கள்.

இது இங்ஙனமாக, தற்காலம் ஈராக் ஈரான் என்று அழைக்கப்பெறும் பழைய சுமேதிய நாட்டில் பல்லாயிர வருடங்களுக்கு முன் வாழ்ந்த சுமேதிய மறவர்களென்ன, அதன்பின் சில ஆயிரம் வருடங்களுக்கு முன் வாழ்ந்த 'முகிழ்ந்த தரை' (Moherjo Daro) மறவர்களென்ன, இவர்களுக்குப் பல நூறு சந்ததிகளுக்குப் பின் வந்த ஆரியச் சக்கரவர்த்திகளாகிய மறவர்களென்ன, இவர்களெல்லாம் தங்கள் பாதுகாவல் தெய்வமாய் பெண் தெய்வத்தையே வணங்கி வந்தார்கள். வள்ளுவப் பெருந்தகைக்கு உடன் பிறந்தாளாகக் கூறப்படுபவரோ அல்லது இடைக்காலத்தில் வாழ்ந்தவரோவாகிய ஒளவையாரும் தாம் பாடிய ஆத்திசூடியில் "தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை" என்று தானே அருளிப் போந்தார்கள். நல்லூர் வீரமாகாளியம்மன் கோயில், பருத்தித்துறை பத்திரகாளி கோயில், கோட்டடிச் சாமுண்டியம்மை கோயில் வல்வெட்டித்துறை முத்துமாரியம்மன் கோயில், தொண்டமானாறு வீரமாகாளியம்மன் கோயில், இடைக்காடு, மாதகல், அராலி, நயினாதீவு நாகபூஷணியம்மை ஈருக எங்கும் அம்மன் கோயில்களே முதலில் உண்டாகியிருக்க வேண்டும்.

மேலும் ஆசிரியர் சிவப்பிரகாசம் அவர்கள் நூலிற்கண்டவை:-

1. 1796ல் எடுக்கப்பெற்ற அரசினர் இடாப்பில் இக்கோயில் காட்டப்பெற்றிருக்கிறது. அப்போது புண்ணிய மணியகாரன் தான் மணியமாயிருந்திருக்க வேண்டும்

2. 1—2—1846ல் பிரசித்த நொத்தாரிசு கதிர்காமர் சிதம்பரநாதர் முன்னிலையில் இராசிந்தான் முத்துமாரியம்மன் கோயில் நெடியகாடு திருச்சிற்றம்பலப் பிள்ளையார் கோயில்களுக்கு மகமை எப்படி கொடுக்கப்பட வேண்டும் என வல்வையார் முடிவு செய்திருக்கிறார்கள்.

3. 1864ல் எழுதப் பெற்ற அரசினர் அறிக்கையிலும் புண்ணிய மணியகாரனால் அம்மன் கோயில் கல்லால் கட்டப்பெற்றதென்றும் சித்திரை மாதத்தில் 15 நாட்கள் திருவிழாக்கள் நடந்ததெனவும் குறிக்கப்பெற்றிருக்கிறது.

4. 6—5—1868ல் பிரசித்த நொத்தாரிஸ் K கணபதிப்பிள்ளை முன்னிலையில் மகமைகள் எவ்வாறு அம்மன் கோயில் பிள்ளையார் கோயில் புட்டணிப் பிள்ளையார் கோயில் வைகுந்தப் பிள்ளையார் கோயில்களுக்கு கொடுக்கப்பட வேண்டும் என முடிவு செய்திருக்கிறார்கள்.

5. சில ஆண்டுகள் திருமேனியார் வெங்கடாசலம் மணியமாயிருந்து திருப்பணிகளும் செய்திருக்கிறார்கள். அப்பால் பெ கதிர்காமத்தம்பி மணியம் அப்பால் சு க தம்பிப்பிள்ளை மாணிய மாயிருக்கும் போது 1904ம் ஆண்டில் ஒரு புனராவர்த்தன சம்புரோட்சண கும்பாபிடேகம் நடந்திருக்கிறது. கும்பாபிடேக காலத்தில் மட்டும் ஆ நாகமுத்து மணியமாயிருந்தார்கள்.

சு. க தம்பிப்பிள்ளை மணியமாகத் தொடர்கிறார்:-
சி க தம்பிப்பிள்ளை மணியமாகத் தொடர்கிறார்.
நா. கனகசுந்தரம்
ஆ. வேலுப்பிள்ளை

இவர்காலத்தில் ஊரவர்களால் உள்வீதி சுற்றுக் கொட்டகை போடப்பெற்றது.

வி. ச. செல்வவிநாயகம்
இ. மூத்துவேலு
வி. ச. சோமசுந்தரம்
வ. வ. இராமசாமிப்பிள்ளை

வ. வ. இராமசாமிப்பிள்ளை 1933ம் ஆண்டு மணியமாக நியமனம் பெற்றவுடன் பழைய கட்டிடங்கள் யாவும் இடிக்கப்பெற்று, எல்லாம் அலங்காரமாகவும், கற்கட்டிடங்களாகவும் சட்டப்பெற்றன. இங்ஙனமாகப் புதிதாகவும், புதுப்பித்தும் கட்டப்பெற்றவற்றின் விபரங்களாவன:

(மேலே கண்டவைகள் யாவும் ஆசிரியர் வே. வ. சிவப்பிரகாசம் அவர்களால் எழுதப் பெற்ற வல்லை முத்துமாரியம்மன் கோயில் சரித்திரத்தில் உள்ளன. இப் புத்தகம் தேவைப்படுவோர் தற்போது மணியமாயிருக்கும் வ. வ. இராமசாமிப்பிள்ளை அவர்களுக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம். இந்தச் சரித்திரத்திற் கண்ட உறுதிகள் யாவும் அவர்வசம் இருக்கலாம்.)

| கோயில் பகுதிகள் | திருப்பணி செய்தவர்கள் |
| --- | --- |
| 1. கர்ப்பக் கிரகமும், அர்த்த மண்டபமும். | சி. செல்லத்துரையும், பெண் வள்ளியம்மாளும். |
| 2. பிள்ளையார் | பொ. தங்கவேலாயுதமும் பெண் இராசரத்தினமும் |
| 3. முருகையா | சி. ஆனந்தமயிலும் பெண் விசாலாட்சியும் |
| 4. வயிரவர் | வ. இ. வைத்திலிங்கமும் பெண் செளந்தரி அம்மாளும் |
| 5. சண்டேசுவரி | ஆ. செல்லத்துரையும் பெண் தங்கரத்தினமும் |
| 6. தீர்த்தக் கிணறு | தா. சின்னத்தம்பியும் பெண் தங்கப்பொன்னுவும் |

| | | |
|---|---|---|
| 7. | பூந்தோட்டக் கிணறு | வல்லைப் பொது மக்கள் |
| 8. | மின் வெளிச்ச அறை | சி. வேலும்மயிலும் ஐயர் |
| 9. | வசந்த மண்டபம் | வே. வ. சிவப்பிரகாசம், மு. விசுவ லிங்கம் |
| 10 | யாகசாலை | வீ. செல்லவிநாயகமும் பெண் விசாலாட்சிப்பிள்ளையும் |
| 11. | திருச்சபை | வ. இராமசாமிப்பிள்ளையும் பெண் இராசம்மாளும் |
| 12. | மகாமண்டபம், தரிசன மண்டபம். | வல்லைப் பொதுமக்கள் |
| 13. | நந்தி, பலிபீடம் | மா. இராசா |
| 14. | உள்வீதிக் கொட்டகையிலோர் பகுதி | வல்லைப் பொதுமக்கள் |

இவ் வேலைகள் முடிந்து 1935ம் ஆண்டு யுவ வருடம் ஆனி மாதம் 24ம் திகதி வேதாரணியம் சிவஸ்ரீ ச சோமசுந்தரக் குருக்கள் அவர்களால் சம்புரோட்சண கும்பாபிடேகம் ஆகம விதிப்படி செய்யப்பெற்றது.

1943ம் ஆண்டு மணிக் கோபுரமும் மணியும் வல்லைப் பொது மக்களால் செய்யப்பெற்றன.

தேர் முட்டி, பழையதாயும் வெடித்துப்போயுமிருந்ததால் அதை நல்ல முறையில் புதிதாக சி விஷ்ணுசுந்தரம் அவர்கள் கட்டுவித்தார்கள்.

பூங்காவன மண்டபம் பொது மக்களால் கட்டப்பெற்றது.

1957ம் ஆண்டில் 12ம் உற்சவகாரர் கேள்விக்கிணங்க இராச கோபுரம் இடிக்கப்பெற்று, கீழ்ப் பகுதி வைரக்கல், கருங்கற்களினால் கட்டப்பெற்று இராசகோபுர மேல் பகுதியும் நல்ல அலங்கார மான முறையில் கட்டிமுடிக்கப்பெற்றது.

இத் திருப்பணிகளெல்லாம் சிறப்பாகவும், சம்பிரமமாகவும் நடந்து முடிவுபெற்ற பின் 26—1—1967ம் ஆண்டு பராபவ வருடம் தைமாதம் 13ம் திகதியில் புனராவர்த்தன சம்புரோட்சண கும்பாபிடேகம் இனிது நடந்தேறியது. வேதாரணியம் சிவ ஸ்ரீ. வே. தியாகராசாக் குருக்கள் நடத்திவைத்தார்கள்.

1960ம் வருடத்தின் முன்பின்னாக யாழ்ப்பாணக் குடாநாட்டிலேயுள்ள பல கோயில்களில், இது காலவரையில் ஓடிக்கொண்டிருந்த தேர்களை விட்டு, சித்திரத் தேர்கள் செய்யப்பெற்றன. முத்துமாரியம்பாளுக்கும் அவ்வாறே தேர் செய்யவேண்டுமென்று முடிவு செய்ததில், ஊரவர்களே பணம் சேகரித்து 1979ம் ஆண்டு வரும் பெருந் திருவிழாவுக்குமுன் அம்பாளுக்குத் தேர் செய்வித்து முடித்தார்கள். அப்பால், பிள்ளையாருக்கும், முருகையாவிற்கும் அம்பாளுடைய தேரிலும் பார்க்கச் சற்றே சிறிதாக 1981ம் ஆண்டு சித்திரை மாதத்தில் வரும் பெருந் திருவிழாவிற்கு முன் செய்யப்பெற்றுவிட்டன.

அம்பாளும், பிள்ளையாரும், முருகையாவும் சித்திரத் தேர்களில் பவனிவரும் காட்சியைப் பார்த்துப் பரவசமடைந்தனர்.

அம்பாள் சித்திரத்தேர் வெள்ளோட்டத்திற்கு ஒரு சிறப்பு மலரும் வெளியிடப் பெற்றது. அம் மலரில் பல அருமையான சமயக் கட்டுரைகளும் கோயிலைப்பற்றிய விஷயங்களும் நிரம்பியிருக்கின்றன.

இச் சிறப்பு மலர் தேவைப்படுவோர் தர்மகர்த்தா சபைத் தலைவரும் மணியமுமாகிய வ. வ இராமசாமிப்பிள்ளை யவர்களுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

இக் கோயில் பூசைகள் திருவிழாக்கள் எல்லாம் மிகச் சிறப்பாகவும், அலங்காரமாகவும் நடைபெற்று வருகின்றன.

தொன்று தொட்டே இக் கோயிலில் சைவக் குருக்கள்மாரே பிரதம குருக்களாக இருந்து வருகிறார்கள். இப்போது 16—1—63 தொடக்கம் சிவ ஸ்ரீ. சோ. தண்டபாணி தேசிகர் அவர்கள் (J. P. அகில இலங்கை) பிரதம குருக்களாக இருந்து சிறப்பாகவும் நிறைந்த பக்தியுடனும் தொண்டாற்றி வருகிறார்கள்.

### முத்துமாரியம்மன் கோயில் பரிவார தெய்வங்கள்

(1) விக்னேசுவரர்
(2) சுப்பிரமணியர்
(3) காத்தலிங்கசாமி
(4) சண்டேசுவரி

### முத்துமாரியம்மன் கோயில் பூசாக்கிரமங்கள்

| | | |
|---|---|---|
| (1) | உதய பூசை | 6 மணியளவில் |
| (2) | காலைப் பூசை | 9 மணியளவில் |
| (3) | உச்சிக்காலப் பூசை | 11-30 மணியளவில் |
| (4) | இரவு பூசை | 7-30 மணியளவில் |

## 6. அருள்மிகு வாலம்பிகை சமேத வைத்தீசுவரர் (சிவன்) கோயில்

வல்வெட்டித்துறையிலுள்ள மூன்று பெரிய கோயில்களுள் கர்ண பரம்பரைக் கதைகளிலிருந்து திருச்சிற்றம்பலப் பிள்ளையார் கோயிலும், முத்துமாரியம்மன் கோயிலும் இவ்வூரவர்களாலேயே தோற்றுவிக்கப் பெற்று, இன்றும் ஊர்ப் பொது மக்களுக்குச் சொந்தமாயும் அவர்களாலேயே பரிபாலிக்கப்பட்டும் வருகின்றன. முற்காலத்தில் கொட்டகையாகவேயிருந்து, அப்பால் மடத்திலிருந்து, 18ம் நூற்றுண்டுக் கடைசியில் சாந்துக் கட்டிடமாகவும் வளர்ந்திருக்கின்றன. இவ்விருபதாம் நூற்றுண்டின் தொடக்கத்திலிருந்து, ஆகம முறைப்படி திருப்பணி வேலையாக நிறுவப்பெற்றிருக்கின்றன.

வல்வை மக்களின் பொருளாதாரமும், கல்வி வசதியும் வளர வளர, கோயில்களும் நன்கு வளர்ந்து, இன்றுள்ள சிறப்பான நிலையில் இருக்கின்றன.

சிவன் கோயில் வெங்கடாசலப் பிள்ளை என்னும் பெரியாரால் தோற்றுவிக்கப் பெற்று, அவருடைய ஆண் சந்ததியினரால் பரிபாலிக்கப் பெற்று வருகிறது. இப் பெரியவர் தமக்குப் பரம்பரையாக வந்த தோட்டங்கள், வயல்களைப் பயிரிட்டும் பரிபாலித்தும் முதன் முதலாக ஊரில் ஓடிய கெச்சுக் கப்பலையும் பல சிறு கப்பல்களையும் வைத்துக் கடல் கடந்த வாணிபஞ் செய்து செல்வத்தைப் பெருக்கினர். இவரும், இவர் தம்பிமாராகிய குழந்தைவேற்பிள்ளையும், இராமசாமிப்பிள்ளையும் தங்கள் செல்வமெல்லாவற்றையும் செலவு செய்து, கோயில் பணியே செய்திருக்கிருர்கள்.

முதன் முதலாகப் பெரியவர் முத்துமாரியம்மன் கோவிலுக்குத் தெற்கேயுள்ள 60 பரப்புக் காணியை விலைக்கு வாங்கினர். இக் காணி கல் நிரம்பியதாயும், கரடுமுரடானதாயும், பற்றையும் செடிகளும் நிரம்பியதாயும் இருந்தது. பெரியவர். அம்மன் கோவிலுக்குத் தென் கிழக்கேயுள்ள மடத்திலேயிருந்து கொண்டு மேற்படி காணியை துப்பரவு செய்து கொண்டு. அருள்மிகு வாலாம்பிகா சமேத அருள்மிகு வைத்தீஸ்வரப் பெருமானுக்குக் கோயில் கட்டுவதற்காக 1867ம் ஆண்டு ஒரு நல்ல நாளில் சங்குத்தாபனம் செய்வித்தார்கள். அப்பால் சிறிது சிறிதாகக் கோயில் கட்டப் பெற்றது. அக் காலத்தில் பிரபுவாயிருந்த விசுவநாதர் என்னும் பெரியார், காசிக்குச் சென்று, அங்கிருந்து சிவலிங்கத்தைக் கொண்டுவந்து சேர்த்தார்கள்.

கோயில் கட்டத் தொடங்கிய காலமாகிய 1867ம் ஆண்டு தொடக்கம் 1900ம் ஆண்டு வரை கோயில் எசமானர்களுக்குக் கோயில் கட்டுவதற்கும் பூசா கிரமங்களுக்கும் வேண்டிய அறிவுரைகளையும், சரீர உதவியையும் இப் புண்ணிய காரியத்திற்கு வல்வைப் பெரியாராகிய இயற்றமிழ்ப் போதகாசிரியர் சங்கரப்பிள்ளை வயித்தியலிங்கப்பிள்ளை அளித்து வந்தார்கள்.

தமிழ் நாட்டிலிருந்து சிற்பிகளும், பலவகைக் கம்மியர்களும் பெரியவரால் வரவழைக்கப்பட்டு கோயில் வேலைகளைக் கவின்பெறச் செய்தனர். இவ்வாறு கோயில் கட்டிடங்கள் ஒருவாறு உருவாக்கப்பட்ட பின், சுபானு வருடம் வைகாசி மாதம் 8-6-1883ல் பிரதிட்டா கும்பாபிடேகம் பிரமஸ்ரீ நா. குமாரசாமிக் குருக்கள் அவர்களால் மிகச் சிறப்பாக நடந்தேறியது.

கோயில் தொடங்கப் பெற்றதிலிருந்தே ஆறுகாலப் பூசைகளும் நடைபெறலாயின. முதன் முதலிலே புலோலி பிரமஸ்ரீ சண்முகக் குருக்கள் என்னும் பிராமணோத்தமர் பிரதம பூசகராயிருந்து வந்தார்.

பிரதிட்டா கும்பாபிஷேகம் நடந்த பின்னும் பெரியவர் கோயில் எஜமானகப் பத்து வருடங்கள் கோயிற் காரியங்களைப் பரிபாலித்து வந்தார்கள்.

பெரியவருக்குப் பின் அவருடைய தம்பியார் குழந்தைவேற் பிள்ளை கோயில் எஜமானாகி (1892—1905) பரிபாலித்து வந்தார்கள். இவருடைய காலத்தில் வட்டுக்கோட்டை சித்தங்கேணி கா. வைத்தியலிங்கம்பிள்ளை அவர்கள் வசந்த மண்டபத்தைக் கல்லால் சமைப்பித்தார். அப்பால் இவர் தம்பியார் இராமசாமிப் பிள்ளை (1905—1912) கோயில் மேற்பார்வையாளர் ஆனார் இவர் காலத்திலும் திருப்பணி வேலைகள் தொடர்ந்து நடைபெறலாயின.

திருமேனியார் குழந்தைவேற்பிள்ளை தம் பொருளையும் கொடுத்ததுமல்லாமல், கொழும்பு நகரத்திலே முன் செக்கடித்தெரு என்று அழைக்கப்பட்டதும், தற்பொழுது கதிரேசன் வீதியென்று அழைக்கப் பெறுவதுமான வீதியில் தம் தனிப் பொருளைக் கொண்டே கதிரேசன் கோயிலை இயற்றுவித்தவருமாவர்.

இராமசாமிப்பிள்ளைக்குப் பின், பெரியவரின் மகன் திருமேனிப் பிள்ளை (1912—1921) எஜமானனானார். இவர் காலத்திலும் கோயிற் திருப்பணிகள் குறைவின்றி நடந்தன. கடல் கடந்த கப்பல் வாணிபத்தில் தொடர்பு கொண்டவரான இந்தியா தெலுங்குதேச வாசியான காரஞ்சேடு ஏர்லக் கட்டர் அரங்க நாயுடுகாரு என்னும் தெலுங்குப் பிரபு முன்வாயில் மண்டபத்தையும், இராஜ கோபுரத்தின் அடிப் பாகத்தையும் இயற்றுவித்தார். வல்வைப் பிரபுவாகிய விசுவநாதர் சரவணமுத்து, நடராசர் மண்டபத்தை இயற்றுவித்தது மட்டுமன்றி, கோயில் வாயில் பெருவீதிக்கும் தமக்குச் சொந்தமான ஒரு பகுதி நிலத்தையும் உதவினார். கம்பர்மலை வள்ளல் வல்லியப்பர் வேலுப்பிள்ளையும் பெண் பாறுவதிப்பிள்ளையும் சில முக்கிய திருப்பணிகளைச் செய்தனர்.

இவர் காலத்தில் கோப்பாய் பிரமஸ்ரீ கார்த்திகேசக் குருக்கள் கோயிலின் பிரதம பூசகரானார். அவருடைய பரம்பரையினராகிய பிரமஸ்ரீ பரமேசுவரக் குருக்கள் தற்போதய பிரதம ஆசாரியராயிருந்து கோயில் பூசா காரியங்களைப் பக்திசிரத்தையோடு 1954ம் ஆண்டு தொடக்கம் நடத்தி வருகின்றார்கள்.

1919ம் ஆண்டு, அமிர்தானந்த சுவாமிகள் என்னும் அந்தணர் பெருமான் வல்வைக்கு வந்து, இவ்வூரிலும், அயல் ஊர்களிலுமுள்ள பெரியவர்களின் பொருளுதவியோடு, இரண்டாவது கும்பாபிஷேகத்தைச் சிறப்புற நிகழ்த்தினுர்கள். இவ்வூர் திரு. ச. செல்வவிஞயகம், திரு. ஆ. வேலுப்பிள்ளை முதலிய பெருமக்களும் இக் கும்பாபிஷேகத்துக்கு உறுதுணையாயிருந்து பேருதவி புரிந்தார்கள்.

1921ல் வெங்கடாசலம்பிள்ளை அருணுசலத்தின் மூத்த மகன் வெங்கடாசலம் சில ஆண்டுகள் எசமாஞக இருந்து தன் தம்பியாராகிய அரு. சபாரத்தினம் அவர்களிடம் கோயில் நிர்வாகத்தை ஒப்படைத்தார். இவர் தன்னுடைய தமையனுரின் அனுசரணையுடன் கோயிலை 1923—1956 வரையில் திறம்பட நிர்வகித்தார். இக்காலத்தில் நிகழ்ந்த சில முக்கிய திருப்பணிகள்: இராச கோபுரம் மேற்பகுதியை வல்வைப் பெரியார் சி. செல்லத்துரைப் பிள்ளையவர்களும், தேவி வாசல் மண்டபம் ஆசிரியர் வே. வ. சிவப்பிரகாசம் அவர்களும், மணிக்கூட்டுக் கோபுரம் திரு. ச. துரைராசா அவர்களும், வசந்த மண்டபம் பூச்சுவேலை வல்வை திரு சி. குமாரசாமி அவர்களும் நிறைவேற்றி முடித்தார்கள்.

இது இவ்வாருக, கோயிலின் மேற்கேயுள்ள மடத்தையும், அதற்குச் சேர்ந்தவைகள் எல்லாம் நா. வேலுப்பிள்ளை என்ற கெச்சுத் தண்டையல் அவர்களாலும், மற்றப் பெரிய மடம் அரு. தெட்சணமூர்த்திச் செட்டியார் அவர்களாலும், கோயிலின் கிழக்கேயுள்ள மடம் வல்வைப் பெரியார் பொ. தங்கவேலாயுதம் அவர்களாலும், சிறிய மடம், வல்வைப் பெரியார் சி. சந்திரசேகரம் அவர்களாலும் நிறுவப் பெற்றன. இவைகளில் தெட்சணமூர்த்திச் செட்டியார் அவர்கள் கட்டியதும், சி. சந்திரசேகரம் அவர்கள் கட்டியதுமாகிய மடங்கள் இரண்டும் தற்போது பராமரிப்போரில்லாமல் அழிந்த நிலையில் இருக்கின்றன.

கோயில் மேற்குக் கோபுரம் வல்வைப் பெரியார் தா. சி. நாகரத்தினம் அவர்களால் கட்டப்பெற்று, முடிவுருத நிலையில் தற்போது காட்சியளிக்கிறது.

கெச்சுத் தண்டையல் என்னும் நா. வேலுப்பிள்ளை அவர்கள் ஒரு பெரிய தோட்டத்தை கோயில் பெயரால் எழுதி வாங்கி, அதன் வருமானத்திலிருந்து கட்டிய மடத்தை பரிபாலித்து, சுவாமிகள் எழுந்தருளி வரும் காலமெல்லாம் அந்த மடத்தில் நிறைகுடம் வைத்து, அர்ச்சனைகள் செய்யவேண்டுமென்றும் வைத்தீசுவரரது மகோற்சவத்தில் 6ம் திருவிழாவையும் முத்துமாரியம்மன் கோயில் மகோற்சவத்தில் 6ம் திருவிழாவையும் எக்காலமும் நடத்திவர வேண்டும் என்றும் ஒரு நிபந்தம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இத் திருப்பணிகள் இன்றைய வரையில் செவ்வனே நடந்து வருகின்றன. கெச்சுத் தண்டையலின் வாரிசுகள் இந்த இரண்டு பெருந் திருவிழாக்களிலும் சுவாமிகள் புறப்படும் பொழுது தேங்காய் உண்டாக்கி காளாஞ்சி மரியாதை பெற்று வருகிறார்கள்.

1956ம் ஆண்டு தொடக்கம், பெரியாரின் ஆண்வாரிசுகள் எண்மர்களுக்காக, அவரின் நான்காம் தலைமுறையிலுள்ள சபாரத்தினம் சின்னத்துரை அவர்கள், கோயில் எசமானாகி, கோயிலைப் பரிபாலித்து வருகிறார்கள்.

கோயில் கும்பாபிடேகம் நடத்தக் காலந் தாழ்த்தியதால் எசமானும், வல்வை முக்கிய பிரபுக்களாகிய சி. விஷ்ணுசுந்தரம் அவர்கள், அ. துரைராசா அவர்கள் ஆகிய இருவரும், மற்றும் பல சிவநேயப் பிரபுக்களும், செல்வர்களும் கூடித் திருப்பணிக்குரிய ஆயத்தங்களைச் செய்து 25—4—1966ல் பாலத்தாபனம் செய்யப்பெற்றது. அப்பால் பலவகையான புனராவர்த்தன வேலைகள், திருப்பணிகள் செய்து முடிந்து, புனராவர்த்தன சம்புரோட்சண கும்பாபிடேகம் பிலவங்க வருடம் வைகாசி மாதம் 28ம் திகதியான 11—6—1967ல் வெகு சிறப்பாகவும், பக்தி சிரத்தையுடனும் நடந்தேறியது.

கும்பாபிடேகத்தை முன்னிட்டு, கோயில் முன்னால் பெருந் தெருவை இணைக்கும் "வைத்தீஸ்வரன் வீதி" பல பிரமுகர்களுடைய உதவியால் திறக்கப் பெற்றது.

இக் கும்பாபிடேகத்தை முன்னிட்டும், கோயில் தொடங்கப் பெற்ற நூற்றுண்டின் ஞாபகார்த்தமாகவும் வல்வையிலுள்ள சில தொண்டர்களால் ஒரு குடமுழுக்கு விழா மலர் வெளியிடப்பெற்றது. இதில் பல விசேடமான கட்டுரைகள், விபரங்களுடன் இக் கோயிலில் நடந்துவரும் சகல உற்சவங்களின் விபரங்களும் நாளாந்த பூசைக்கிரமங்களின் விபரங்களும், குருக்கள் பரம்பரையின் விபரமும் தெளிவாகக் காட்டப் பெற்றிருக்கின்றன.

வசந்த மண்டபம் வாசலுக்குத் தெற்கேயுள்ள பகுதியையும் அம்மன் வாசலையும் இணைத்து, இரண்டாம் வீதியையும் இணைத்து வல்வைப் பெரியார் வி. சுப்பிரமணியம் அவர்களும், அவர் மைத்துனர் S. S. சண்முகம் அவர்களும் நல்ல முறையில் மூடிக் கட்டிய திருப்பணியை 1970ம் ஆண்டில் நிறைவேற்றினார்கள்.

திருவாளர் மாணிக்கவாசகம் குமாரசாமி அவர்கள் ஓர் ஆறுமுகசாமி விக்கிரகத்தையும், வள்ளி தெய்வயானை விக்கிரகங்களையும் பஞ்சலோகத்தில் அழகாகச் செய்வித்து நடராசர் மண்டபத்தில் 1977ம் ஆண்டுத் தைப்பூச தினத்தில் ஆகமவிதிப்படி, பிரதிட்டை செய்தலாகிய திருப்பணியை நிறைவேற்றினார்கள்.

சிவபிரானுக்கும், இராஜ ராஜேஸ்வரி அம்பாளுக்கும் வாகனாதிகளும் புதுப்பித்தும், புதிதாகச் செய்தும் வைக்கப் பெற்றிருக்கின்றன. வல்வைப் பெரியார் சுப்பிரமணியம் வைரமுத்து எம்பெருமானுக்கு, வெள்ளி இடபவாகனம் சிறந்த முறையில் அமைத்து வைத்திருக்கிறார்கள்.

## சிவன் கோயிலிலுள்ள பரிவார மூர்த்திகள்

| | | |
|---|---|---|
| நிர்த்தன கணபதி | தெட்சணாமூர்த்தி | அண்ணாமலை ஈசுவரர் |
| பிரமா | துர்க்கை | திருஞானசம்பந்த மூர்த்திநாயனார் |
| திருநாவுக்கரசு நாயனார் | சுந்தரமூர்த்தி நாயனார் | மாணிக்கவாசக சுவாமிகள் |
| மகாவிஷ்ணு | விநாயகர் | தண்டாயுதபாணி |
| பிருதிவி லிங்கம் | அப்பு லிங்கம் | ஆகாச லிங்கம் |
| தேயு லிங்கம் | வாயு லிங்கம் | சோமஸ்கந்தர் |
| முருகையா | சனீஸ்வரன் | கஜலெட்சுமி |
| நவக்கிரகங்கள் | நடேசர் | சிவகாமி அம்மை |
| ஆறுமுகசாமி | திருப்பள்ளி | வைரவர் |
| நாகேஸ்வரர் | சந்திரன் | சூரியன் |
| கிருஷ்ணர் | சண்டேசுவரர் | சரசுவதி |

### நாளாந்தர பூஜாக் கிரமம்

1. உஷத் காலம் (அதிகாலைப் பூஜை 5-45)
2. கால சந்தி (காலைப் பூஜை 9-30)
3. மாத்தியானிகம் (மத்தியானப் பூஜை 11-45)
4. சாயரட்சை (மாலை முதற் காலம் 6-00
5. சாயரட்சை (மாலை இரண்டாம் காலம் 7-30)
6 அர்த்த சாமம் (8-30

## 7. வல்வையின் கல்வி வசதிகள்

இருபதாம் நூற்றாண்டு தொடக்கம் வரையில், முறையான பாடசாலைகள் இருந்ததாகத் தெரியவில்லை. ஆனால், செல்வம் உபாத்தியார் என்ற வைத்தியலிங்கனார் மூத்தமகன் சங்கர நமச்சிவாயம், வேதவனம் உபாத்தியாயர் முதலியவர்கள் திண்ணைப் பள்ளிக்கூடம் வைத்து, தமிழ் மொழியையும் ஆரம்ப கணிதத்தையும் கற்பித்து வந்தார்கள்.

இதற்கு மேல் படிப்பதாயிருந்தால் பருத்தித்துறைக்குப் போக வேண்டும். மெதடிஸ்ற் பாதிரிமார், பருத்தித்துறையில் 1885ம் ஆண்டளவில் ஆண்பிள்ளைகளுக்காக ஓர் ஆங்கிலப் பாடசாலை நிறுவி நடத்திவந்தார்கள். அக்கம் பக்கமுள்ள ஊர்களிலிருந்து ஆங்கிலம் படிக்க விரும்புவோர் அங்கேதான் வரவேண்டும். இந்த நூற்றாண்டு தொடக்க வருடங்களில் அந்தப் பாடசாலையின் பெயர் Wesleyan Mission Boys English School என்று வழங்கியது. பெண் பிள்ளைகளுக்கும் சிறிது தூரத்தில் கடற்கரையோரத்தில் ஒரு பாடசாலை நிறுவப்பெற்றிருந்தது. இப் பாடசாலைகள் இரண்டிலும் இங்கிலாந்திலுள்ள Cambridge Junior, Cambridge Senior வகுப்பு வரைக்குமே கற்பித்துவந்தார்கள். அதற்கு மேல் படிக்க விரும்புவோர் யாழ்ப்பாணம் St. Patricks ல்

கல்கத்தா சர்வகலாசாலையுடன் இணைக்கப்பெற்ற First in arts என்ற F. A. மட்டுமே படிக்கலாம். 1856ல் இந்தியாவில் கல்கத்தா, பம்பாய், சென்னை ஆகிய இடங்களில் சர்வகலாசாலைகள் ஏற்பட்டன. இலங்கையிலிருந்து சென்னை, கல்கத்தா சர்வகலாசாலைகளுக்கு சென்றும் படிப்பை மேற்கொண்டவர்களுமுண்டு.

## தற்போதுள்ள பாடசாலைகள்

1. அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை 1880 அளவில்
2. றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை 1889 அளவில்
3. சிதம்பராக் கல்லூரி ஆலடியில் 1896 ஊரிக்காட்டில் 1912 அளவில்
4. சிவகுரு வித்தியாசாலை ஆலடியில் 1913 தற்போதிருக்கும் இடம் 1925 அளவில்
5. மகளிர் மகா வித்தியாலயம் 1972.

## 1. அமெரிக்கன் மிஷன் கலவன் பாடசாலை.

இது 1880ம் ஆண்டளவில், தற்போதிருக்கும் கொன்றைக் கட்டை பெரிய வீதிக்கருகில் நிறுவப் பெற்றது. முன்னர் அது பெரிய கொட்டகையாயிருந்தது. சில காலத்தில் உடுப்பிட்டியிலிருந்து அரியகுட்டி என்னும் ஒருவர் தலைமையாசிரியராக வந்து சேர்ந்து, பல வருட காலம் சேவை செய்தார். அவர் அப் பாடசாலையை வளர்த்த கதையைப் பற்றி இப்பொழுதும் கதை கதையாகச் சொல்வார்கள். காலையில் வந்தவுடன் பாடசாலைக்கு வராத பிள்ளைகள் வீட்டிற்குப் பிள்ளைகளை ஒருவர் இருவராக அனுப்பியும், சில இடங்களுக்குத் தானே நேரிற் சென்றும், பின்னேரம் வரையில், படிக்கும் வயதுள்ள பிள்ளைகளிருக்கும் பெற்றோர்களை நேரிற் கண்டு பேசியும், பாடசாலையை வளர்த்தார். பாடசாலையும் வளர்ந்தது. தற்போது அது கற்கட்டிடமாகவும், ஐந்தாம் வகுப்பு வரையுள்ள பாடசாலையாயும் வளர்ந்திருக்கிறது. கீழ் வகுப்புகளில் இரண்டு பிரிவுகளும் உள்ளன.

| | |
|---|---|
| வகுப்புகள் | 5ம் வகுப்புவரை |
| படிக்கும் பிள்ளைகள் | 186 |
| அரசினர் சம்பளம் பெறும் ஆசிரியர்கள் | 5 |
| வசதிக் கட்டணத்திலிருந்து சம்பளம் பெறும் ஆசிரியர்கள் | 2 |

## 2. றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை

இது 1889ம் ஆண்டு நிறுவப் பெற்றது. அதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்னே 1720ம் ஆண்டளவில், வல்வையில் ஸ்தாபிக்கப் பெற்ற அர்ச் செபஸ்தியார் ரோமன் கத்தோலிக்க தேவாலயத்தில் திண்ணைப் பள்ளிக்கூடமாகச் சில காலம் இருந்து அப்பால் கோயில் வளவிலே ஒரு சிறு கட்டிடத்தில் நடைபெற்று வந்தது.

தற்போது இது, கோயில் வளவிற்கு வெளியே முன் பல காலம் அரசினர் மருந்தகமாயிருந்து, வல்வைப் பெரியார் ஒருவரால் இந்திராணி வைத்தியசாலை கட்டப்பெற்ற பின் வெறுமனே யிருந்த பொது இடத்திற்கு மாற்றப்பெற்றுவிட்டது. தற்போது பிள்ளைகள் அதிகமாக உள்ளதால் அரசினர் உதவிப் பணத்துடன் மேல் மாடியும் கட்ட ஏற்பாடாகி வருகிறது.

வல்வைக் குடிசனங்கள் ஏறக்குறைய பத்தாயிரத்துக்கு மேற்பட்டு வளர்ந்தும் இவ்வூரில் ஏறக்குறைய இருபது கிறிஸ்தவ குடும்பத்தினரே வாழ்கின்றனர். அப்படியிருந்தும் இந்த இரு ஆரம்ப பாடசாலைகளும் முன் கிறிஸ்தவ மிஷன்களால் தொடங்கப் பெற்ற வகையில் கிறிஸ்தவப் பெயர்களுடனேயே நிலவி வருகின்றன.

| | |
|---|---|
| வகுப்புகள் | 5ம் வகுப்புவரை |
| படிக்கும் பிள்ளைகள் | 150 |
| அரசினர் சம்பளம் பெறும் ஆசிரியர்கள் | 3 |
| வசதிக் கட்டணத்திலிருந்து சம்பளம் பெறும் ஆசிரியர்கள் | 3 |

## 5. சிதம்பராக் கல்லூரி.

இவ்வாங்கில வித்தியாசாலை வல்லையிலுள்ள ஒரு பெரியாராகிய கு. சிதம்பரப்பிள்ளையவர்களால் 1896ல் தொடங்கப்பெற்று வல்லை ஆலடியில் நடைபெற்றுக் கொண்டிருந்தது. இப் பாடசாலை தொடங்குவதற்கு முதல்நாள் மாலை திரு. சிதம்பரப்பிள்ளையவர்கள் வல்லையிலுள்ள பெற்றோர்களை நெடியகாட்டுத் திருச்சிற்றம்பலப் பிள்ளையார் கோயிலிலே ஒரு கூட்டத்திற்கு அழைத்து, உருக்கமான ஒரு சொற்பொழிவில் தான் ஒரு சிறிய குடும்பத்தைச் சேர்ந்தவரென்றும், ஆங்கிலம் படிக்க ஆசைப்பட்டும் இவ்வூரில் அந்த வசதியில்லாததால், பருத்தித்துறைக்கு ஒவ்வொரு நாளும் காலையில் ஐந்து கல் நடந்து சென்று, மதிய உணவிற்குச் சந்தையில் கிடைக்கும் மரவள்ளிக்கிழங்கை இரண்டு சதத்திற்கு வாங்கிச் சாப்பிட்டு, மாலையிலும் நடந்து வந்து, மிகவும் கஷ்டத்தோடு, ஆங்கிலம் கற்று அரசாங்க வேலையிற் சேர்ந்ததாகவும், தான்பட்ட கஷ்டம் மற்றவர்கள் படக் கூடாதென்பதற்காக இவ்வூரில் ஆங்கில வித்தியாசாலை தொடங்குவதாகவும், ஊரவர்கள் அதை ஆதரிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டாராம். அவருடைய புனிதமான பரோபகார எண்ணம் பலித்து, இப்போது அவ் வித்தியாசாலை சிதம்பராக் கல்லூரியாக வளர்ந்திருக்கிறது.

1912ம் ஆண்டு, பள்ளிக்கூட வளர்ச்சியினால், இடம் போதாமை காரணமாக ஆலடியிலிருந்து ஊரிக்காட்டுக்கு மாற்றப் பெற்று எல்லாம் கற் கட்டிடங்களாக வளர்ந்திருக்கிறது.

1896க்கும் 1912க்கும் இடையில் கு. சிதம்பரப்பிள்ளை அமரராகிவிடவே பாடசாலையின் முகாமைத்துவம் திரு. ஞானசேகரம்பிள்ளை தையல்பாகர் அவர்களுக்கு வந்து சேர்ந்தது. இவர்களின் மேற்பார்வையில் 1925ம் ஆண்டளவில் திருவாளர் வானமாமலை ஐயங்கார் அவர்கள் B. A. (Madras அதிபராக நியமிக்கப்பெற்றார். சிறிது காலத்திற்குள், அவர் திருவாளர் கிருஷ்ண ஐயங்கார் B. A. (Madras) அவர்களையும் ஒரு ஆசிரியராகச் சேர்த்துக்கொண்டார். பாடசாலை அதி துரிதமாக வளரத் தொடங்கியதும் வருடம் ஒரு வகுப்பாக உயர்ந்து, 1948ம் ஆண்டளவில் சிதம்பர வித்தியாசாலை என்ற பெயரும் மாற்றப்பெற்று சிதம்பராக் கல்லூரியாகியது. அப்போது திருவாளர் சிவசைலம் ஐயர் B. A. (Madras) அவர்களும், திருவாளர் பூ. க. முத்துக்குமாரசாமி B. A. (Rangoon) அவர்களும், திருவாளர் அரியரத்தினம்

B. A. Madras அவர்களும், திருவாளர் V. நடராசா B. A. (Londan) அவர்களும், திருவாளர் இ. வல்லிபுரம் B. Sc. (Ceylon) அவர்களும், திருவாளர் ச. சத்தியமூர்த்தி B. Sc. (Ceylon) அவர்களும் ஆசிரியர்களாகச் சேர்ந்ததில் பாடசாலை வெகு துரித வளர்ச்சியடைந்தது. 1948 தொடக்கம் 1960 வரையில் S. S. C. வகுப்பில் சித்தியடைந்த சகல மாணவர்களும் உடனுக்குடன் அரசாங்க வேலைகளில் சேர்ந்து விட்டார்கள். அவர்கள் யாவரும் பெரிய வேலைகளிலிருந்து ஓய்வு பெற்றவர்களும் ஓய்வு பெறப் போகின்றவர்களுமாக இருக்கின்றார்கள்.

இதற்கிடையில் இரண்டு பெரிய மாற்றங்கள் உண்டாயின. இலங்கை முழுமைக்குமே இலவசக் கல்விச் சட்டம் நிறைவேறியது. இலங்கையின் சகல பாகங்களிலும், பாடசாலைகள் ஏற்பட்டதில் அரசாங்க வேலைகளுக்குச் சிங்கள மக்கள் போதியவர்கள் இல்லையென்றும், குடிசன விகிதாசாரப்படி அவர்கள் வேலையில் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டுமென்றும் நியாயமான குரல்கள் பிறந்தன. இது ஒருபுறமிருக்க, 1956 அளவில், அமரர் பண்டாரநாயக்காவின் அரசாங்கம் ஏற்பட்டவுடன் அரசாங்க காரியாலயங்கள் யாவற்றிலும் புரட்சிகரமான மாறுதல்கள் ஏற்பட்டன. காரியாலய வேலைகள் யாவும் எங்கும் சிங்கள மொழியிலே நடக்கத் தொடங்கின. ஆங்கில மொழி தேவையே இல்லாமற் போய்விட்டது. ஆங்கில மொழி, பாடசாலைகளில் கட்டாயமில்லாமற் தள்ளும்படி செய்யப்பட்டது.

இவைகளின் காரணமாக, தமிழ்ப் பிள்ளைகள் அரசாங்க வேலைகளில் சேர்வது அபூர்வமாகி விட்டது. அதனால் தமிழ்ப் பாடசாலைகளில் ஒரு பெரிய மந்தநிலை ஏற்பட்டது.

பள்ளிக்கூட மேல் வகுப்புகளில் சித்தியெய்தினாலும் சிங்கள மொழியின் கட்டாய தேவையால் அரசாங்க வேலைகள் கிடைப்பது அரிதாகிவிட்டதால், வல்வை வாலிபர்கள் வேறு மார்க்கங்களைத் தேடுவதில் ஈடுபட்டார்கள்.

இக் கல்லூரியில் தற்போது ஆறும் வகுப்பிலிருந்து G. C. E. Adv. Level வரையில் வகுப்புகள் இருக்கின்றன. அரசாங்கச் சம்பளம் பெறும் ஆசிரியர்கள் 12 பேர்கள் மட்டுமே இருக்கிறார்கள். மாணவர்களின் தொகை 349.

## 1. சிவகுரு வித்தியாசாலை.

1896ம் ஆண்டில் கு. சிதம்பரப்பிள்ளையவர்கள் வைத்தீஸ்வரன் கோயிலுக்குரிய காணியில் தொடங்கிய ஆங்கிலப் பாடசாலை சிதம்பராக் கல்லூரியென்ற பெயருடன் ஊரிக்காட்டிற்கு மாற்றப்பட்டபொழுது, ஆலடியில் வைத்தீஸ்வரன் கோயிலுக்குரிய காணியில் முன்னர் பாடசாலையிருந்த இடத்திலேயே திரு. ஞா. தையல்பாகர் அவர்களால் "சிவகுரு வித்தியாசாலை" என்ற பெயருடன் ஒரு தனித் தமிழ்ப் பாடசாலை தொடங்கப்பெற்றது. 1926ம் ஆண்டு வரை ஆரம்ப பாடசாலையாக இயங்கி வந்த பாடசாலை, பின் ஆறும் வகுப்பிலிருந்து ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு வகுப்பாகக் கூடி, பின் S. S. C. வகுப்பு வரை கற்பிக்கும் பாடசாலையாகவும் 700 மாணவர் வரை கல்வி கற்கும் பாடசாலையாகவும் இருந்து வந்தது. பின் சில வருடங்கள் ஆரம்பப் பாடசாலையாகவும் நடைபெற்று, பின் மறுபடியும் க. பொ. த வகுப்பு வரை கல்வி கற்பிக்கும் பாடசாலையாக இயங்கி வருகின்றது.

ஆலடியில் நடைபெற்ற பாடசாலை, சில வருடங்களுக்குப் பின் இடம்போதாமை காரணமாக தற்போதிருக்கும் இடத்தில் திரு ஞா. தையல்பாகர் அவர்களது முயற்சியால் புதிய கட்டிடங்கள் கட்டப்பெற்று, 1942ம் ஆண்டு விஜய தசமித் தினத்தில் இயங்க ஆரம்பிக்கப்பெற்றது.

1961ம் ஆண்டில் வீசிய புயலால் பாடசாலைக் கட்டிடத்தின் ஒரு பகுதி சேதமுற்றபோது, ஓலைக் கூரையாகவிருந்து வந்த பாடசாலை ஓட்டுக் கூரையாக மாறியது.

தற்போது இவ் வித்தியாசாலை, கடற்கரை ஓரமாய் நல்ல சூழலில் இயங்கி வருகின்றது. வல்வையின் வளர்ச்சியுடனும், பெற்றோர்களின் பொருளாதார வளர்ச்சியுடனும், ஆசிரியர்களின் அயரா முயற்சியாலும், திறமையாலும் நன்கு வளர்ந்து வருகின்றது. இங்கு பாலர் வகுப்புத் தொடக்கம் க. பொ. த. (சாதாரண) வகுப்புவரை வகுப்புகள் உண்டு.

மாணவர் தொகை 1060

அரசினர் சம்பளம் பெறும் ஆசிரியர்கள் 27

வசதிக்கட்டண, தொண்டர் ஆசிரியர்கள் 4

## 5. வல்வை மகளிர் மகா வித்தியாலயம்.

மேலே குறிப்பிட்ட நான்கு பாடசாலைகள் இருந்தாலும், பெண் பிள்ளைகளுக்கு மட்டும் ஒரு பாடசாலை இருக்கவேண்டுமென, கிழக்கு வல்வையிலுள்ள சில பெரியார்கள் விரும்பினர். நெடிய காட்டுத் திருச்சிற்றம்பலப் பிள்ளையார் கோயிலுக்கும், வல்வை இந்துக்கள் இடுகாட்டிற்கும் இடையிலேயுள்ள 16 பரப்பு வெற்றுக் காணியில் திருவாளர் ஆ. செ. யோககுரு அவருடைய தம்பிமார் இருவருஞ் சேர்ந்து, எட்டு வகுப்புகள் நடத்தக் கூடியதும், அதிபர் காரியாலயமாக ஓர் அறையுமுள்ள பெரிய மண்டபத்தைக் கட்டிக் கொடுத்தார்கள்.

பாடசாலை 1972ம் ஆண்டு தைமாதம் முறையாக திருமதி கோ. அரியரத்தினம் B A (London) தலைமை உபாத்தியாயினியாகவும் 334 பிள்ளைகளையும், 3 தொண்டர் ஆசிரியர்களையும் கொண்டு தொடங்கப்பெற்றது. இரண்டொரு ஆண்டுகளுக்குள் இப் பாடசாலை அதிக வளர்ச்சியடைந்தது. அரசாங்க உதவியுடன் ஒரு சிறு கட்டிடம் அமைக்கப்பெற்றது திருமதி அரியரத்தினம் மாற்றப்பெற்று வேறு பாடசாலை செல்ல, உடுப்பிட்டியைச் சேர்ந்த திருமதி M இராஜரத்தினம் சில ஆண்டுகள் அதிபராகப் பணியாற்றி, வித்தியாசாலையின் வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாக விருந்து பணியாற்றினர்கள் இதன் வளர்ச்சியை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் கிழக்கு வல்வைப் பெரியார்களாகிய திருவாளர்கள் சி. விஷ்ணுசுந்தரம், அ துரைராசா, மு. கா. பாலசிங்கம், ஐ. காத்தாமுத்து முதலானவர்கள் பாடசாலையின் நாற்புறச் சுற்று மதில்களையும், முந்திய இரு கட்டிடங்களை இணைக்கும் மாடிக் கட்டிடமான வகுப்பறைகளையும், மற்றும் சில்லறை வேலைகளையும் பூர்த்தி செய்து கொடுத்தார்கள். திருமதி M. இராஜரத்தினம் இளைப்பாறியதும், ஆரம்பத்தில் அதிபராகப் பணியாற்றிய திருமதி கோ. அரியரத்தினம் மறுபடியும் அதிபராக நியமிக்கப்பெற்றார்கள். வித்தியாசாலை வெகு துரிதமாக வளர்ச்சியடைந்து வருகின்றது. தற்போதுள்ள பிற விபரங்கள்.

பிள்ளைகளின் தொகை - 944

வகுப்புகள் பாலர் வகுப்பு தொடக்கம் G. C. E Adv Level வரை

அரசாங்க சம்பளம் பெறும் ஆசிரியர்கள் 21

வசதிக் கட்டணத்தில் ஊதியம் பெறும் ஆசிரியர்கள் 10

# 8. வைத்திய வசதிகள்

19ம் நூற்றுண்டின் நடுப்பகுதியளவில், வல்லைக் கடற்கரைப் பகுதியில் ரேவு (Customs Office)க்குப் பக்கத்தில் ஒரு மருத்துவ நிலையம் அரசாங்கத்தினரால் நிறுவப்பெற்றது. இது நோயாளரைப் பார்வையிட்டு மருந்து மட்டும் கொடுக்கும் இடம். இங்கே நோயாளர்கள் தங்கிச் சிகிச்சை பெறவோ, இராக் காலங் (களில் வைத்திய வசதி பெறவோ முடியாது. இந்த நிலையே Dispensary) இருபதாம் நூற்றுண்டு முற்பகுதியளவில் இருந்தது.

இந்த வசதியையும் பெற்றுக்கொள்ள முடியாதவர்கள், தமக்குத் தெரிந்த கைமருந்து மூலிகைகளாலும், உள்ளூர் அயல் கிராமங்களிலுள்ள சித்த வைத்தியர்களிடம் மருந்துகளைப் பெற்றும் காலத்தை ஒப்பேற்றினர்கள்.

அப்பொழுது வல்லையிலுள்ள ஒரு பெரியாராகிய முகாந்திரம் அப்புக்குட்டியாபிள்ளை, தமது சொந்தச் செலவிலே ஊறணியில், ஒரு மருத்துவ நிலையத்தைக் கட்டி, அரசாங்கத்திடம் ஒப்படைத்தார்கள். இங்கே நோயாளர்கள் தங்கிச் சிகிச்சை பெற, ஆண்களுக்கும் பெண்களுக்கும் புறம்பு புறம்பாகவும், பெண்களின் பிரசவத்திற்கென ஒரு சிறு பகுதியும் கட்டப்பெற்றிருந்தன. அரசாங்கமும் ஒரு வைத்திய கலாநிதி, ஒரு வைத்தியர், மருந்து கலப்போர் காயங்களைக் கவனிப்போர் முதலான மற்றும் சிப்பந்திகளையும் ஏற்படுத்திக் கொடுத்தது.

சில வருடங்களுக்குப் பின் அரசாங்கம் ஒரு பெரிய கட்டிடம் கட்டியதில், தற்போது நோயாளர் காத்திருக்கும் இடம், டொக்டர் நோயாளிகளைப் பார்வையிடும் அறை முதலிய பல வசதிகளைக் கொண்டதாய் அமைந்திருக்கிறது. இரவிலும் வரும் நோயாளிகளைக் கவனிப்பதற்காக உள்ள உதவி வைத்தியருக்கு ஒரு குடியிருப்பு வசதிக் கட்டிடமும் கட்டிக்கொடுக்கப் பெற்றிருக்கிறது.

வல்லைப் பெரியார் அ. சி. விஷ்ணுசுந்தரம் அவர்கள் தமது தாயாரின் ஞாபகார்த்தமாக, பெரும் பொருட் செலவில், ஒரு மாடிக் கட்டிடப் பிரசவ விடுதியைக் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். அயற் குறிச்சிகளிலிருந்தும் சிகிச்சைக்காகவும், பிள்ளைப் பேறுக்காகவும் பெருந் தொகையினர் தற்போது இந்த மருத்துவ நிலையத்தை நாடிவந்து பயன்பெற்றுச் செல்கின்றனர்.

இவ்வரசாங்க மருத்துவ நிலையத்தின் சேவை ஒருபுற மிருக்க, ஊருக்குள்ளும் இளைப்பாறிய மருத்துவர்கள் ஆங்காங்கே மருத்துவ நிலையங்களை உண்டாக்கிச் சேவை செய்து வருகின்றனர். ஓர் இளைப்பாறிய வைத்திய கலாநிதி. இரண்டு மூன்று இளைப்பாறிய உதவி வைத்தியர்கள் ஆங்கில முறைப்படி வைத்தியஞ் செய்து வருகின்றனர் ஒருவர் இன்னொரு முறையைக் கையாண்டு (Hemeopathy) ஒட்டகப்புலத்திலிருந்து சமத்தர் ஒருவர் வீக்கம், நோ, முறிவு முதலியவற்றிற்கு வைத்தியஞ் செய்து வருகின்றார்

# 9. தொழில் முறைகள்

இலங்கையின் வடக்கேயுள்ள கரையோரப் பட்டினங்களாகிய பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, காங்கேசன்துறை, மாதகல், ஊர்காவற்துறை, பண்ணைத்துறை முதலாகிய பட்டினவாசிகள் பன்னெடுங் காலமாகக் கடலோடிகளாகவே யிருந்திருக்க வேண்டும் ஆகவே, இவர்கல் பக்கத்திலேயுள்ள இந்தியாக் கரைப் பட்டினங்களாகிய முத்துப்பேட்டை, அதிராம் பட்டினம், நாகபட்டினம், கடலூர், புதுச்சேரி, காரைக்கால் முதலாகிய கிழக்குக் கரைப் பட்டினங்களுடனும், மேற்குக் கரைப் பட்டினங்களாகிய கொல்லம், மங்களூர் முதலான இடங்களுடனும் தொடர்பு வைத்து, வியாபாரம் செய்திருக்கவேண்டும். இவர்களின் தொடர்பெல்லாம் பண்டமாற்று முறையிலேயே நடந்திருக்க வேண்டும் இந்தியா செல்வோர் முக்கியமாக கிறுவல் கற்கள், பனை மரங்களுடனும், பனம் பொருட்களுடனும் சென்று, அங்கிருந்து உழுந்து, பயறு, எள், கொள் முதலாகிய பலவகைக் கூலப் பொருள்களையும், நல்ல இன அரிசி, சீனி, சர்க்கரை முதலானவற்றையும், மத்தாப்பு, மான்புள்ளி, பட்டினம் சேலைகள், வேட்டிகள், சால்வைகள் முண்டுகள் முதலான புடைவை வகைகளையும், சட்டி, பானை, குடம், தாதை, கூசா முதலிய மட்பாண்டங்களையும். ஓடு வகைகளையும் கொண்டு வந்து, அக்காலங்களுக்குத் தகுந்த வியாபாரங்களைச் செய்து, வந்திருக்க வேண்டும். இந்த வகை வாணிபம் எல்லாளன் காலத்திலிருந்தே தொடர்ந்து நடந்தும், சோழப் படையெடுப்புக்குப் பின் மிகுதியாயும் நடந்திருக்க வேண்டும்.

மேலும் கி. மு. மூன்றாம் நூற்றாண்டில் புத்த மதம் இலங்கைக்கு வந்த காலத்திலும், எல்லாளன் என்ற சோழ இளவரசன் இலங்கைக்குப் படையெடுத்து வந்து, இலங்கையரசனை வென்று, இலங்கையைப் பலவருட காலம் ஆண்டிருந்த காலம் எல்லாம் சோழ நாட்டுப் பட்டினங்களாகிய காவிரிப்பூம் பட்டினம், நாக பட்டினம், கடலூர், வேதாரணியம் முதலிய பட்டினங்களுடன் நெருக்கிய தொடர்பு இருந்திருக்க வேண்டும்.

மேலும், சங்க இலக்கியங்களிலிருந்தும், ஐம்பெருங் காப்பியங்களிலிருந்தும், ஈழத்துணவு காவிரிப்பூம் பட்டினத்தில் இறக்குமதி செய்யப்பெற்றதென்றும், கண்ணகி தெய்வமாகிய பின், அவளுக்குக் கோயில் எடுத்த சேரன் செங்குட்டுவன், பலதேச அரசர்களை அழைத்திருந்தாரென்றும், அவ்வழைப்பை ஏற்று, அப்போது இலங்கையை ஆட்சி செய்த கடல்சூழிலங்கைக் கயவாகு மன்னன், கண்ணகியம்மன் கோயிற் பிரதிட்டைக்குச் சென்றிருந்தது மட்டுமின்றி, கண்ணகியம்மனை இலங்கையிலும் பிரதிட்டை செய்து வழிபட, நாடு செழித்துள்ளதென்றும் காணக்கிடக்கின்றது. இது கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் நிகழ்ந்தது.

இனி கி. பி. பதினொராம் நூற்றாண்டளவில் சோழ தேசச் சக்கரவர்த்திகளான முதலாம் இராஜராஜன் படையெடுத்து வந்து, இலங்கையைக் கைப்பற்றிப் பல வருடங்களாகப் புலஸ்திய நகரை இராசதானியாக்கி ஆண்டு வந்தார்களென்றும் சரித்திரம் கூறுகிறது. புலஸ்திய நகர் இன்று "பொலநறுவை" யாகப் பரிணமித்தாலும் சைவ மதம் பேணும் சோழர்களாற் பிரதிட்டை செய்யப் பெற்ற வானவன் மாதேவி ஈச்சரமுடையார் சிவன் கோயில் இன்றும் அழிந்த நிலையில், புழர் பொருள் பரிபாலிக்கும் பகுதியினால் இலங்கை அரசாங்கத்தால் காக்கப்பெற்று வருகிறது.

அப்பாலும் சோழ சாம்ராச்சியம் மறைந்து பாண்டிய சாம்ராச்சியம் ஏற்பட்ட காலத்திலும், பாண்டியர்களுக்கும், இலங்கை அரசர்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருந்திருக்கின்றது. அதன் காரணமாக ஆரியச் சக்கரவர்த்திகள் என்ற பெயருடன் தற்போது வல்லிபுரக் கோயில் இருக்கும் பகுதிக்கு வடக்கேயுள்ள இடத்தில் சிங்கை என்ற பட்டினத்தில் இருந்துகொண்டு தமிழ் அரசர்கள் ஆண்டு வந்தார்கள் என்றும் அவர்கள் தங்கள் பட்டினம், காற்றின் உக்கிரத்தால் காலா காலங்களில் மண்ணால் மூடப்பட்டு

வந்ததால் தங்கள் இராசதானியை யாழ்ப்பாணத்து நல்லூருக்கு மாற்றி விட்டார்களென்றும் கர்ண பரம்பரைச் செய்திகளால் தெரிய வருகிறது. நல்லூரிலிருந்து அரசாண்ட கடைசி அரசனைப் போர்த்துக்கேயர் போரிற் தோற்கடித்து யாழ்ப்பாண இராச்சியத்தைக் கைப்பற்றினார்களெனச் சரித்திரம் கூறுகிறது.

இருபத்தைந்து நூற்றாண்டுக்கு முன் இந்தியாவில் சோழ நாட்டை ஆண்டு வந்த சக்கரவர்த்தி கரிகாலன் என்பவன் அப்போதே செழிப்புடனும், சீருடனுமிருந்த இலங்கை அரசனை வென்று, இங்கிருந்து பல நூற்றுக் கணக்கானவர்களைச் சிறை பிடித்துச் சென்று, அவர்களைக் கொண்டுதான் காவிரி ஆற்றுக்கு ஒரு பெரிய கல் அணை கட்டுவித்தானென்றும் வரலாற்றுச் செய்தியால் தெரிய வருகின்றது. இதுவுமன்றி கி. பி. ஏழாம், எட்டாம், ஒன்பதாம் நூற்றாண்டுகளில் மன்னாருக்குப் பக்கத்திலேயுள்ள மாந்தை என்னும் பெரிய கடற்கரைப் பட்டினம் நல்ல நிலையிலே இருந்ததென்றும், அப்படி வளர்ந்தோங்கியிருந்த காலத்திலே அப்பட்டினம் மேற்கேயுள்ள பெரிய இராச்சியங்களாகிய கிரேக்க ரோம ராஜ்யங்களுடனும், கிழக்கேயுள்ள சீன ராஜ்யத்துடனும் வாணிபத் தொடர்பு கொண்டிருந்ததென்றும், அப்போது அந்த மாந்தையிலே திருக்கேதீச்சரம் என்னும் பெரிய சிவஸ்தலம் இருந்ததென்றும் கிழக்கேயும் கோணேஸ்வரம் என்ற ஒரு பெரிய சிவஸ்தலம் இருந்ததென்றும் சைவ சமய ஆசாரியர்களாகிய திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரங்களால் அறியக் கிடக்கின்றது.

பிற்காலப் பாண்டிய அரசர்கள் இந்த இரு பெரிய தேவாரம் பாடப்பெற்ற கோயில்களையும் கண்ணும் கருத்துமாய்ப் பரிபாலித்திருப்பார்கள். கோணேச்சரத்தை அவ்வண்ணம் பரிபாலித்து கோட்டைகள் கட்டி. தங்கள் மீன் கொடி அடையாளத்தையும் பொறித்திருந்தார்கள் அந்த அடையாளம் தெய்வாதினமாகப் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர்களுடைய பார்வையினின்றும் தப்பி இன்றளவும் மிளிர்ந்து கொண்டிருக்கிறது. இதே மாதிரியாக அப்பாண்டிய மன்னர்கள் மாந்தை திருக்கேதீச்சர ஆலயத்தையும் பரிபாலித்து தங்கள் மீன் அடையாளத்தைப் பொறித்திருக்கக்கூடும் ஆனால் போர்த்துக்கேயர் இலங்கைக் கரையோரங்களைக் கைப்பற்றிய போது மன்னாரையும் கைப்பற்றினார்கள். அப்

பால் மன்னாரிலே கோட்டை கட்டுவதற்குத் திருக்கேதீச்சர ஆலயத்தை தரைமட்டமாக்கி, இந்தக் கற்களைத் தம் பாவனைக்கு எடுத்துச் சென்றார்கள். ஸ்ரீகௌரி அம்பாளின் சிலை மடுமாதா கோயிலிற் சேர்க்கப்பெற்றதென்றும், அக்காலந் தொட்டே பெருந்தொகையான சைவ மக்கள், மடுமாதா கோயிலிற்குத் தரிசனத்துக்குப் போய் வருகிறார்களென்றும் ஒரு கர்ண பரம்பரை செய்தி இருக்கிறது.

எம்பிரான் திருவருளால் 1950ம் ஆண்டிற்கு அடுத்த ஆண்டுகளில் இத் திருப்பணிச் சபைக்கு அரசாங்க சேவையில் பல காலமிருந்து பெரிய உத்தியோகங்கள் வகித்து இளைப்பாறிய சேர் கந்தையா வைத்தியநாதன் தலைவரானார். அவர் திருக்கேதீச்சரத்திலே குடியிருந்து இத் தலத்திற்கு ஆற்றிய அரும்பெருஞ் சேவையையோ அவர் அமரரான பின் தற்போதிருக்கும் திருப்பணிச் சபையின் தொண்டினையோ விபரிக்க முனைந்தால் அது ஒரு பாரதமாகிவிடும்.

இங்கு நாம் சொல்லப் புகுந்தது, இலங்கையின் வடபாலுள்ள பட்டினங்களில் வாழ்ந்தவர்கள் யாவரும் கடலோடிகள் என்பதையேயாம். பெரிய நிலப்பரப்பை உடைமையால் தோட்டங்களைப் பரிபாலிக்கும் நிலப்பகுதியை நோக்கியே பண்ணைத்துறையிலிருந்து, காங்கேசன்துறை வரையிலுள்ள கடற்கரை வாசிகள் வாழ்ந்து வாழ்க்கொண்டிருந்தார்கள். பருத்தித்துறை இருப்பிடமாகக் கொண்டவர்கள் வத்தைகளையும் சிறு கப்பல்களையும் கொண்டு வைகாசி மாதம் முதல் ஐப்பசி மாதம் வரையில் இலங்கையின் கிழக்குக் கரையிலுள்ள முல்லைத்தீவு திருகோணமலை, மட்டக்களப்பு முதலிய பட்டினங்களிலும் வியாபாரஞ் செய்து வரலானார்கள். மாரி காலத்தில் ஓய்ந்திருந்தும் ஊர்காவற்றுறையில் கப்பல்கள், வத்தைகளைப் பழுதுபார்த்தும் தை பிறந்தவுடன் தென்னிந்திய பட்டினங்களுடன் வியாபாரஞ் செய்து வந்தார்கள். இந்நிலை 1950 அளவில் நடைபெற்றது. அப்பால் லொறிகள் வந்து பெருகி, அவர்களின் கரையோர வியாபாரத்தை அடியோடு அழித்து விட்டது.

வல்வெட்டித்துறைக் கடலோடிகள், வேறொரு வகையில் வளரத் தொடங்கினார்கள். 1850ம் ஆண்டளவில், இங்கிலாந்திலிருந்து ஆபிரிக்காவின் தென் பகுதியை கடலால் சுற்றிப் பெரிய பாய்க் கப்பல்கள், இலங்கை, இந்தியா, பர்மாவையும் கடந்து சுமாத்திரா, ஜாவா முதலிய நாடுகளுக்கும், சீனாவிலிருந்து ஜாவா முதலிய நாடுகளுக்கும் பெரிய பாய்க் கப்பல்கள் மூலம் வியாபாரங்கள் நடக்கத் தொடங்கியது. இவ் வியாபாரத்தில் முதலில் முன்னணியிலிருந்தவர்கள் ஐரோப்பாக் கண்டத்திலுள்ள ஒல்லாந்த தேசத்தினராகும். அவர்கள் போர்த்துக்கேயரிடமிருந்து இலங்கையைக் கைப்பற்றியது மட்டுமின்றி, கிழக்கிந்திய பிரதேசங்கள் என்று அழைக்கப்பெறும் பகுதியிலுள்ள பெருந் தீவுகளாகிய ஜாவா, சுமாத்திராத் தீவுகளையும் கைப்பற்றி ஆண்டு வந்தார்கள். அதன் காரணமாக இரும்பால் செய்யப்பெற்ற பெரிய நீராவிக் கப்பல்கள் வரமுன் பெரிய மூன்று பாய்மரம், நான்கு பாய்மரமுள்ள மரக் கப்பல்கள் மூலமே வியாபாரமும், போக்குவரத்தும் நடந்து வந்தன. 1869ல் செங்கடல், மத்தியதரைக் கடலை இணைக்கும் சூயெஸ் கால்வாய் திறக்கப்பட்டது நீராவிக் கப்பல்களும் மெல்ல மெல்ல அதிகமாகக் கட்டப்பெறவும் தொடங்கின.

1950ம் ஆண்டை அடுத்து இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்கு வந்த King of Atlantic ketch என்ற நாலு பாய்மரக் கப்பல் திருகோணமலைக்குப் பக்கத்தில் கடலிலுள்ள கற்பாறைகளில் மோதி, அமிழ்ந்த நிலை ஏற்பட்டது. அந்தக் கப்பல் சொந்தக்காரர்கள், அக் கப்பலை மிதத்தி எடுக்க முடியாமல் அமிழ்ந்த நிலையிலேயே அதை ஏலத்தில் விற்றுவிட முடிவு செய்தார்கள். இதை அறிந்த வல்வைப் பெரியாராகிய திருமேனியார் வெங்கடாசலம் பிள்ளை இக் கப்பலை வெந்தீசில் ஏலத்தில்) எடுத்து, மிதக்கச் செய்து, வல்வைக்குக் கொண்டு வந்து, பழுதுகள் பார்ப்பித்துச் சில வருடங்கள் கடல் கடந்த வியாபாரத்துக்காக வைத்திருந்தார்கள்.

பத்தொன்பதாம் நூற்றூண்டிற்கு முன்புள்ள காலங்களில் இலங்கையின் வட பாகத்திலேயுள்ள கடலோடிகள், வங்காள விரிகுடாவைக் கடந்து, கப்பல் மார்க்க வியாபாரஞ் செய்தார்களோ என்பதை நிர்ணயிக்க, ஆதாரபூர்வமான தடயங்களோ குறிப்புகளோ இருக்கிறதாகத் தெரியவில்லை. அவர்களுடைய போக்குவரத்தெல்லாம் தென்னிந்திய, மலையாளக் கரையோரப் பட்டினங்

களுடனேயே இருந்திருக்கிறது. கிறிஸ்து சகாப்தத்துக்கு முந்திய காலங்களிலிருந்தே இந்தத் தொடர்புண்டு. இப்போது வங்காள தேசமென்று அழைக்கப்படும் நாட்டிலிருந்து அதற்கண்மையி லுள்ள அரக்கன் தேசத்திலிருந்து செட்டிகாமத்தார் (Chittagong) கடல் வாணிபத்தை இந்தியா தெற்குக் கரையோரப் பட்டினங் களுடன் செய்து வந்திருக்கிருர்கள். ஆகவே அவர்களிற் பலர், களை காணு நடுக்கடலில் தங்கள் கப்பல்கள் எந்த இடத்திலிருக் கிறதென்பதை அறியும் கருவிகளைப் பயன்படுத்தத் தெரிந்திருக்க வேண்டும். இப்படியாகத் தெரிந்தவர்களை, இலங்கையர் "மாலின்" என்று அழைத்தார்கள் இந்த "மாலின்" அறிவைச் சட்டிகாமத் தாரிடமிருந்து, தங்கள் சமயத்தைச் சேர்ந்தவர்களாகிய தமிழ் முஸ்லீம்கள் பழகியிருக்க வேண்டும்.

இந்த விஷயம் வட இலங்கையர் அறிந்திருந்தார்கள். ஆகவே பெரிய கப்பல்களைக் கொண்டு, அரக்கன், றங்கூன் முத லிய ஊர்களுக்குப் போய் நெல் கொள்முதல் செய்துகொண்டு, வந்து, வாணிபம் செய்ய எண்ணுபவர்கள், வல்வெட்டித்துறை பருத்தித்துறைக் கப்பல்கள் நாகபட்டினம் நாகூருக்குச் சென்று மாலிமமாரை ஏற்றிப் போனுர்கள். இப்படியான கப்பலிற் சென்ற வர்கள் இந்த அறிவை செட்டிகாமம் மாலின்மாரிடம் அறிந்து கொண்டார்கள். முதலில் பழகி வந்தவர்கள் இங்கேயும் மாலின் என்றே அழைக்கப்பெற்ருர்கள். பருத்தித்துறை மாலின் கந்த சாமியும் வல்வையில் மாலின் வேலுப்பிள்ளையும் இவ்விதமாகவே முதல் பழகிவந்தார்கள். அப்பால் கப்பலில் சென்வர்களில் பலர் இந்த முறையைப் பழகியபடியால் மாலின் என்ற பெயர் மறைந்து விட்டது. பெரிய கப்பல்களில் சென்றவர்கள் முதலில் பிறநாட்டுப் பெயர்களாலே கப்பலில் உள்ள பொருட்களைக் குறிக்கின்ருர்கள். உதாரணமாக காம்பரு, குசினி, வவ்ருன், பொந்தா முதலியன. இவைகளின் தமிழ்ப் பெயர்கள் யாவும் மறைந்து விட்டன.

1860 அளவில் கெச்சுக் கப்பல் கடல் கடந்த வாணிபத்தில் தொடங்கியதும், அரக்கன், இறங்கூன் நெல் வியாபாரத்தில் நல்ல இலாபம் கிடைத்து வருகின்றது என்பதையும் அறிந்த இவ்வூரிலிருந்த பெரிய முதலாளிகளும், யாழ்ப்பாணக் குடநாட்டில் வட்டித்தொழில் பார்த்து வந்த நாட்டுக்கோட்டைச் செட்டியார் களும் நெல் வியாபாரத்தில் மும்முரமாக ஈடுபட்டார்கள். கெச்சுக் கப்பலுக்கு நா. வேலுப்பிள்ளை யென்பவர் பெரியவரால் தண்டை யலாக நியமிக்கப்பட்டார். அவர் பல வருடங்களாக அக் கப்பலில் தண்டையலாக இருந்த வகையில் அவருடைய இயற்பெயர் வழங்கு வது குறைந்து 'கெச்சுத் தண்டையல்' என்ற பெயரே அவருக்கு வழங்குவதாயிற்று.

இவ்வாருக கடல் கடந்த வியாபாரத்தில் வல்வைக் கப்பல் ஒன்று ஈடுபட்டிருப்பதைக் கண்ட வல்வைச் செல்வர்கள் அதிகம் பெரிதாயும் அதிகம் சிறிதாயும் இல்லாமல் நடுத்தரமான கப்பல்களை வல்வையிலே கட்டி முடித்து, அரக்கன் இறங்கூன் முதலிய ஊர்களுக்குச் சென்று நெல் வியாபாரத்தில் ஈடுபட்டார்கள். இவர்களுள் முதன்மையானவர்கள் குமாரசாமி முருகுப்பிள்ளையவர்களும் கந்தக்குட்டியார் மக்களாகிய வேலுப்பிள்ளை பொன்னம்பலம், கதிரிப்பிள்ளை முதலியவர்களுமாகும். பத்தொன்பதாம் நூற்ருண்டு முடிந்து இருபதாம் நூற்ருண்டு தொடங்கிய அண்மைக் காலத்தில் பலர் கப்பல் கட்டுவதிலும் கடல் கடந்த வியாபாரஞ் செய்வதிலும் ஈடுபட்டார்கள். 1910 க்குள் இவ்விதமாக முதலாளிமார்களாக வந்தவர்கள் கதிரிப்பிள்ளை அருளம்பலமும் சகோதரர்களும், வாரித்தம்பி குமாரசாமி மேத்திரியாரும் பிள்ளைகளும் வாரித்தம்பியாரின் மக்கள் கணபதிப்பிள்ளையும் தம்பையாவும் ஆவர். அதற்கடுத்து, திருமதி சரவணமுத்து சின்னத்தங்கம், திருமதி செல்லையா தெய்வானைப்பிள்ளை, கோ. வ. கந்தசாமி கோ வ. வடிவேல் தொண்டைமாஞறு சி. வீரகத்திப்பிள்ளை முதலியோராவர். முதலாவது உலக மகாயுத்தத்துடன் அநேகர் இந்த வியாபாரத்தில் ஈடுபட்டார்கள். யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள பல நாட்டுக் கோட்டை நகரத்தார்கள், தெலுங்கு நாட்டு முதலாளிமார்கள், இராமநாதபுரம் இராசா, நல்லூர்கந்தசாமி கோயிலார் முதலியவர்களும் ஈடுபட்டார்கள்.

முதலாம் உலக மகாயுத்தம் முடிவுற்ற பின்பு இந்த வாணிபம் விரிவடையத் தொடங்கியது. இவ்வூர் முதலாளிமார் பலரும் கப்பல்களைக் கட்டுவித்தும், பிற இடங்களிலிருந்து கப்பல்களை வாங்கியும் இவ் வாணிபத்தைப் பெருக்கிஞர்கள்.

தொண்டைமாஞறு வீரகத்திப்பிள்ளையவர்கள், நெல் அரிசி வியாபாரத்தைக் கவனித்ததோடு இறங்கூனிலிருந்து நல்ல தேக்கு மரங்களையும் கொள்முதல் செய்து, தம் கப்பல்கள் மூலம் கொண்டு வந்து நல்ல இலாபமும் அடைந்தார்கள். டாநாட்டிலுள்ள சகல பெரிய துறைகளிலுமுள்ள நாட்டுக் கோட்டைச் செட்டியார்களும் மும்முரமாக வியாபாரத்தில் ஈடுபட்டார்கள்.

அரக்கன் நெல் வியாபாரத்துக்காகக் கப்பல் இருமுறை தான் போய்வர முடியும். சோழகக் காற்று, வாடைக் காற்றின் உதவியைக் கொண்டே இவர்கள் போய்வர முடியும். புரட்டாதி முற் பகுதியில் இங்கிருந்து புறப்பட்டு, 10, 15 நாட்களுக்குள் அரக்கன், இறங்கூன் போய்ச் சேர்ந்து விடுவார்கள். அங்கே சில்லறை சில்லறையாக மூட்டைகளிலும், சொரியலாகவும் நெல்லை வாங்கிச் சேர்ப்பார்கள். அப்பால், அவ்விடத்தில் தங்கியிருந்து வாடைக் காற்றுப் பெயர்ந்த பின், அநேகமாகக் கார்த்திகை விளக்கீடு கழித்து மார்கழி முதற் பகுதியில் அவ்விடமிருந்து புறப்பட்டு, தைப்பொங்கல் முந்திப் பிந்தி இவ்விடம் வந்து சேர் வார்கள். நெல்லைச் சீக்கிரமாக இறக்குமதி செய்தவுடன் திரும் பவும் புறப்பட்டு விடுவார்கள். வாடைக் காற்றின் உதவியால், பிற இடங்களிற் சுணங்காமல் புறப்பட்டுப் பங்குனிக் கடைசியில் அல்லது சித்திரை முற் பகுதியில் இவ்விடம் வந்து சேர்வார்கள் அந்தக் காலத்தில் சித்திரா பௌர்ணமியில் வல்வை முத்துமாரி அம்பாள் தீர்த்தத் திருவிழாவில் பல ஊர்க் கப்பல்களுமாக 30, 40 கப்பல்கள் ஊரணிக் கடற்கரையிலிருந்து, சிவன்கோயில் கப்பல் கள் கட்டும் வான் வரையில் *கடலில் கட்டியிருந்து எல்லாக் கப்பல்களும் நிறையக் கொடியேற்றியிருந்து அம்பாள் தீர்த் தத்தைக் கொண்டாடுவார்கள். எந்த ஊர், எந்த முதலாளியின் கப்பலாயிருந்தாலும் அக் கப்பல்களைச் செலுத்துபவர் வல்வை யிலுள்ள தண்டையல்களும் கடலோடிகளுமாகவே யிருந்தார்கள். 30, 40 கப்பல்களில் பாய் மரங்கள் நிரம்பிய கொடிகள் காற்றில் அசைந்தாடிக் கொண்டிருப்பதைக் காண்பதே ஒரு கண்கொள் ளாக் காட்சியாகும்.

இலங்கைத் தேசாதிபதியாயிருந்த சேர் ஹென்றி பிளேக் (Sir Henry Blake) 1905ல் வடபகுதித் துறைமுகங்களைப் பார்க்க வந்தவர். அந்த வருடச் சித்திரா பௌர்ணமித் தினத்தில் வல் வெட்டித்துறை துறைமுகத்தில் 30 கப்பல்களுக்கு மேலாக நிறை யக் கொடிகள் பறந்தாடிக் கொண்டிருந்த காட்சியைப் பார்த்து கொழும்பு, திருகோணமலையைத் தவிர, இவ்வளவு பெருந்தொகை யான கப்பல்களைப் பார்க்கவில்லையென ரேவில் நடந்த கூட்டத் தில் வாயாரப் புகழ்ந்தாரென்னும் செய்தியை வல்வையிலுள்ள வயது வந்தோர் இன்றும் சொல்கிறார்கள். அரசாங்க அறிக்கை களிலும் அது இருக்கக்கூடும்.

கடல் கடந்த வியாபாரம் வருடத்தில் இரண்டுமுறைதான் செய்யலாம். முதலாவது புரட்டாதிச் சவர், புரட்டாதி முற்பகுதி முதல் தை முற்பகுதி வரை, இரண்டாவது லோப்புச் சவர், தை நடுப்பகுதி முதல் சித்திரை முற்பகுதி வரை. ஆனுல், வல்வை முதலாளிமாரிற் சிலர் நக்கவாரம், தேங்காய் வியாபாரமும் செய்து இலாபத்தை அதிக அளவில் பெருக்கிக் கொண்டனர். அவ்விதமான கப்பல்கள் ஆவணி நடுப்பகுதியில் இவ்விடமிருந்து ஊசி, நூல், கண்ணாடி, வீட்டுச் சிறிய பாத்திரங்கள், சேலை சிற்றுடை, சட்டைகள் முதலியவற்றை ஏற்றிக்கொண்டு, நக்கவாரஞ் சென்று இவைகளை அங்கே அதிகமாயுள்ள தேங்காய்களுக்குப் பண்டமாற்றுச் செய்வார்கள். அப்பால் இத் தேங்காய்களை அரக்கன், இறங்கூனுக்குக் கொண்டு சென்று, அங்கே நெல்லுக்காக மாற்றியும் விற்றும், இரண்டு வகையிலும் பெரும் இலாபம் சம்பாதித்தார்கள்.

## 10. 19ம் 20ம் நூற்றுண்டில் வல்வெட்டித்துறையில இருந்து தொழில் செய்த கப்பல்கள்

| | கப்பல் பெயர் | முதலாளிமார் | தண்டையல் |
|---|---|---|---|
| 1 | King of atlantic | தி வெங்கடாசலம் | நா. வேலுப்பிள்ளை<br>வே. இராமசாமி |
| 2 | அன்னபூரணி | கு. முருகுப்பிள்ளை | மு இளையபெருமாள் |
| 3 | ஆனந்தபூரணி | க. வேலுப்பிள்ளை<br>க. பொன்னம்பலம்<br><br>க. கதிரிப்பிள்ளை | இ. கதிரிப்பிள்ளை<br>க. தாமோதரம் பிள்ளை<br>கா. மாணிக்கம் |
| 4 | ஜெயலெட்சுமி | க. அருளம்பலம் | செ இரத்தினவடிவேல்<br>ஆ ஆறுமுகம்பிள்ளை |
| 5 | ஸ்ரீ மகாலட்சுமி | க. அருளம்பலம் | மு. சபாபதிப்பிள்ளை<br>சின்னத்துரை<br>பொ. துரைசாமி |
| 6 | முத்துலட்சுமி | வாரித்தம்பியார் | சி. சீனிமுத்து |
| 7 | சாரங்கபாணி | குமாரசாமி மேஸ்திரியார் | சின்னத்துரை |

| | | | |
|---|---|---|---|
| 8 | கதிரேசன் | செட்டியார் பிள்ளைகள்<br>செட்டியார் வீடு<br>குமாரசாமியும்<br>பிள்ளைகளும் | கு. மாணிக்கவாசகம்<br>கு. சின்னத்துரை |
| 9 | ஆதிபூரணி | சி. குமாரசாமி<br>பொ கணபதிப்<br>பிள்ளை | க. காத்தலிங்கம்<br>க தாமோதரம்பிள்ளை |
| 10 | சிவகங்கா புரவி | சி. வீரகத்திப்பிள்ளை<br>குட்டிப்பிள்ளை<br>கு. அப்பாத்துரை | த. சண்முகம்<br>ஐ. அருணசலம்<br>செ. சின்னமணி<br>த. செல்லத்துரை<br>(சிருப்பர்) |
| 11 | தைரியலட்சுமி | கு. சோமசுந்தரம்<br>கு. வயித்தியலிங்கம் | பொ. புண்ணிய<br>மூர்த்தி |
| 12 | நாகரித்துல்லா | ச. சின்னத்தங்கம் | கு. சுப்பிரமணியம்<br>பொ. அண்ணமலை |
| 13 | மீசைக்காறன்<br>படவு அல்லது<br>சௌபாக்கிய<br>லட்சுமி | ச. சின்னத்தங்கம்<br>ச. செல்வவிநயகம்<br>ச. சோமசுந்தரம் | கு. சுப்பிரமணியம்<br>ஆ. காத்தாமுத்து<br>சு. சண்முகம் |
| 14 | திருப்பதி<br>வெங்கடாசலபதி | ச. சின்னத்தங்கம் | ஆ ஆறுமுகம்பிள்ளை |
| 15 | பருபத பாக்கிய<br>லட்சுமி | சி வீரகத்திப்பிள்ளை<br>வீ செல்வவிநயகமும்<br>தம்பிமாரும் | வீ. துரையப்பா<br>சி. வேலுப்பிள்ளை |
| 16 | காசி விசாலாட்சி | வீ செல்வவிநயகம்<br>தம்பந் தண்டல் | சின்னர் |
| 17 | அலியார் | தம்பந் தண்டல்<br>செட்டி வீடு | வீ. துரையப்பா<br>வேலும்மயிலும் |
| 18 | அமீது | கோ. வ. கந்தசாமி<br>கோ. வ. வடிவேல் | ச. கந்தசாமி<br>இ. சிவகுரு |
| 19 | மதுரை மீனட்சி | ச. சின்னத்தங்கம் | சீ. சீனிமுத்து<br>ச நரசிம்மசாமி |
| 20 | காசி அன்னபூரணி | ச சின்னத்தங்கம்<br>மு. பொ. பருத்தித்<br>துறை | சி. ஆனந்தமயில் |
| 21 | பேரானந்தவல்லி | V. K. பொன்னுச்<br>சாமி | வ மாணிக்கவாசகம்<br>ஆ. மயில்வாகனம் |

| | | | |
|---|---|---|---|
| 22 | விஞயக சௌபாக்கிய லட்சுமி | கோ. வ. வடிவேல்<br>பிரு நா செட்டியார் | செ. சுந்தரம்<br>மு. பொன்னம்பலம் |
| 23 | பிள்ளையார் புரவி | சி. கந்தசாமி | |
| 24 | ஐ கந்தசாமி வாடா | ஐ. கந்தசாமி | மா. இராசா |
| 25 | பாம்பு வாடா | அ. மாரிமுத்து | ச. பொன்னுத்துரை<br>வே. சுப்பிரமணியம் |
| 26 | சீதாலட்சுமி | க. செல்லத்துரை<br>க பொன்னுத்துரை | செ இரத்தினவடிவேல்<br>வே. சுப்பிரமணியம் |
| 27 | சந் அப்துல் புகாரி | ச. பொன்னுத்துரை | ச. பொன்னுத்துரை<br>நா. வேலும்மயிலும் |
| 28 | பர்வதவர்த்தனி | சி. குமாரசாமி | தி. சிவசுப்பிரமணியம் |
| 29 | விஜயலட்சுமி | இ. வே. சுப்பிரமணியம்<br>சி. குமாரசாமி | அப்பாத்துரை<br>க. காத்தலிங்கம் |
| 30 | வள்ளி பங்காளன் | த. சுப்பிரமணியம் | வடிவேல்<br>தம்பர் பொன்னுச்சாமி |
| 31 | கலியாண சுந்தரி | த. சுப்பிரமணியம் | சி. மயில்வாகனம்<br>கு தாமோதரம்பிள்ளை |
| 32 | வடிவேல் முருகன் | ஆ. நாகமுத்து | சி. மயில்வாகனம்<br>பொ. வடிவேல் |
| 33 | ஆதிலட்சுமி | ஞா. சண்முகம் பிள்ளை<br>ச. பாலசுப்பிரமணியம்<br>ச. ஞானமூர்த்தி | பொ. புண்ணியமூர்த்தி<br>சாமி செல்லத்துரை<br>பொ. இராமசாமி |
| 34 | மகாலட்சுமி | வ. இராமசாமிப் பிள்ளை | வ. இரத்தினசாமி<br>க. காத்தலிங்கம் |
| 35 | நரசிம்ம சாமி | வ. இராமசாமிப் பிள்ளை | செ. சின்னமணி<br>ஆ. மயில்வாகனம் |
| 36 | திருநீல நாயகி | வ இராமசாமிப் பிள்ளை<br>ம நடராசா உபாத்தியாயர் | தி. சிவசுப்பிரமணியம்<br>க. காத்தலிங்கம் |
| 37 | சண்முகசுந்தரி | வ. இராமசாமிப் பிள்ளை | க. செல் ம்<br>கா. மாணிக்கம் |

| | | | |
|---|---|---|---|
| | | ஏரம்பமூர்த்தி | கு. தாமோதரம்பிள்ளை |
| 38 | மதுரை சொக்கலிங்கபுரவி | கு சுப்பிரமணியம் வீடு | ச. நரசிம்ம சாமி<br>கா. மாணிக்கம் |
| 39 | வத்திக் கப்பல் | V. K. பொன்னுச் சாமி | சி. அருணாசலம்<br>ஆ. அருளம்பலம் |
| 40 | சிவசுப்பிரமணிய புரவி | சி வீரகத்தி பிள்ளை | சரவணமுத்து<br>ம.சிவக்கொழுந்து<br>சுப்பிரமணியம்<br>த. பொன்னுச்சாமி |
| 41 | வள்ளிநாயகி | ,, | தா. மாணிக்கவாசகம்<br>ச. சரவணமுத்து |
| 42 | தெய்வநாயகி | ,, | ஆ. செல்லத்துரை<br>சிவசாமி |
| 43 | கோக்க நாடா | ,, | ச. ஐயாத்துரை |
| 44 | பேரானந்த வல்லி | ,, | தா. மாணிக்கவாசகம்<br>செ துரைசாமி |
| 45 | ஆனந்தவல்லி | அரு. அம்பலவாணர் | அரு. அம்பலவாணர் |
| | | மா. மார்க்கண்டு | நடராசா |
| 46 | சிவசுப்பிரமணிய புரவி | ஏரம்பமூர்த்தி<br>சிதம்பரப்பிள்ளை | ஆ. ஆறுமுகம் |
| | | ஆ. நாகமுத்து | கு. சரவணமுத்து |
| 47 | வடிவழகி | கு. சரவணமுத்து | கு. சரவணமுத்து |
| 48 | அன்னலட்சுமி | கு. சரவணமுத்து | கு. கிட்டிணசாமி<br>தி. சிவசுப்பிரமணியம் |
| 49 | வேல் புரவி | நல்லூக் கந்தசாமி கோயில் | |
| | | நா. கனகசுந்தரம் | |
| 50 | ஐதி ரேஸ் | ச. சின்னத்தங்கம் | அ. சிவசுந்தரம் |
| 51 | முசல பாத் | கோ. வ. வடிவேல் | இ. துரைசாமி |
| 52 | காட்ரூன் | கோ. வ. வடிவேல்<br>கோ. வ. கந்தசாமி | ஐ. அருணாசலம் |
| 53 | மகாலட்சுமி | சிதம்பரப்பிள்ளை | கு. சரவணமுத்து |
| | | கா. வயித்தியலிங்கம் | பெ. கந்தசாமி |
| 54 | கைலாசநாயகி | | ம. சிதம்பரநாதர் |
| 55 | தெண்டாயுத | கா. வயித்தியலிங்கம் | அ. சிவசுந்தரம் |

| | | | |
|---|---|---|---|
| | பாணி | வ. மார்க்கண்டு | க. பொன்னுச்சாமி |
| 56 | தோற்சாய்ப்பு | ,, | ச. முத்துக்குமாரு |
| 57 | மதுரை மீனாட்சி 2ம் நம்பர் | ,, | க. பொன்னுச்சாமி |
| 58 | மரக்காயன் படவு | ,, | இ. சிவகுரு<br>ந. நல்லபிள்ளை |
| 59 | சிவகுருநாதபுரவி | த. வடிவேல் மேஸ்திரியார் | |
| 60 | சண்முகநாதன் | கா வயித்தியலிங்கம் | க. நாராயணசாமி<br>பொ. ஐயாமுத்து |
| 61 | திருஞான சம்பந்தன் | | க. நாராயணசாமி |
| 62 | மகாலட்சுமி | | கு. சரவணமுத்து<br>தி. சிவசுப்பிரமணியம் |
| 63 | திருத் தங்கம் | | சிங்காரவேல்<br>பொ. இராமசாமி |
| 64 | சின்ன வெங்கடேசவரவ் | பேர்வலை முதலாளி | தா. வல்லிபுரம்<br>தா. சின்னத்தம்பி |
| 65 | சண்முக வடிவு | கந்தசாமி. பருத்தித்துறை. | கந்தசாமி |
| 66 | காங்கேச புரவி | குமாரசாமி மேஸ்திரியார் | க. துரைசாமி |
| | | மு. பொ. பருத்தித்துறை | சி. சிங்காரவேல்<br>ஆ. மயில்வாகனம் |
| 67 | சாமிநாத புரவி | ,, | நாகமுத்து |
| 68 | சின்னப் பருவதம் | ,, | பூ. கந்தசாமி |
| 69 | ம. தா. தோணி | ,, | க. நடராசா<br>நாகமுக்து |

**[illegible] செட்டியார் வீட்டுக் கப்பல்கள்**

| | | | |
|---|---|---|---|
| 70 | கொழும்பியா | அரு. சோ. ம வீடு | வே. இராமசாமி |
| 71 | சோபியா | ,, ,, ,, | பொ. சதாசிவம்<br>சின்னத்தம்பி |
| 72 | மகாராணி | ,, ,, ,, | க. வடிவேல் |
| 73 | கனக துர்க்கா | ,, ,, ,, | வ. செல்லையா<br>மு. சரவணமுத்து |
| 74 | குமரேச புரவி | ,, ,, ,, | இரத்தினசாமி |

| | | | |
|---|---|---|---|
| 75 | நித்தியகல்யாணி | பழ. சோ. ம. | செ. துரைசாமி<br>இ. கணபதிப்பிள்ளை |
| 76 | ஜெயலட்சுமி | ,, | த. செல்லமாணிக்கம்<br>கு. தாமோதரம்பிள்ளை |
| 77 | டில்லிக் கப்பல் | ,, | ஆ. அருளம்பலம்<br>ஆ. மயில்வாகனம் |
| 78 | விஜயக சௌபாக்கிய லட்சுமி | பி. கு. நா. கடை | செ. சுந்தரம்<br>கு. பொன்னம்பலம் |
| 79 | ஆஞ்சநேயர் | ,, ,, | மு. சரவணமுத்து |
| 80 | சாமிநாத புரவி | ,, ,, | மு. இளையபெருமாள்<br>சி. சீனிமுத்து |
| 81 | திருநடராச புரவி | ,, ,, | இ. கதிரிப்பிள்ளை |
| 82 | அன்னபூரணி (புதியது) | ,, ,, | க. தம்பிப்பிள்ளை<br>(அமெரிக்காவில் ஓடுகிறது) |
| 83 | பச்சைக் கப்பல் | ,, ,, | கு. சுப்பிரமணியம் |
| | மீனாட்சி | ,, ,, | கெய்ச்சர் பொன்னுச்சாமி |
| 84 | மம்மி | ,, ,, | இ. கதிரிப்பிள்ளை<br>மு. குமாரசாமி |
| 8 | தக்கியா | ,, ,, | சி. குமாரசாமி |
| 86 | ஸ்ரீ மகாலட்சுமி | ,, ,, | வே. இராமசாமி |
| 87 | லட்சுமி கோவிந்தா | அந்ரீதானிப்பிள்ளை | சி. குமாரசாமி<br>நீக்கிலாப்பிள்ளை |
| 88 | செல்வநாயகி | ,, | கா. முத்துக்குமாரு |
| 89 | மயீர விஜயன் | நல்லூர்க் கந்தசாமி கோயில் | சுப்பிரமணியம் |
| 90 | ஜான் மேரி | வேளாங்கன்னி கப்பல் | தா. கந்தசாமி |
| 9 | பெரிய வெங்கடேசவரவ் | , ,, | நா. துரைசாமி |
| 92 | வெள்ளைப் பாக்கிய லட்சுமி | ,, . | செல்லமாணிக்கம்<br>பொ அண்ணாமலை |
| 93 | வீரலெக்ஷுமி பழையது | ஏர்லக் கட்டு இறங்க நாயுடு | க. நல்லதம்பி |
| 94 | ,, புதியது | ,, ,, ,, | ஆ. சுப்பிரமணியம்<br>க. காத்தலிங்கம் |

| | | | |
|---|---|---|---|
| 95 | பாக்கியலெக்ஷ்மி | ,, ,, ,, | இ. சிவகுரு |
| 96 | இராஜலெக்ஷ்மி | ,, ,, ,, | ஆ. சுப்பிரமணியம் |
| 97 | தனலெக்ஷ்மி | ,, ,, ,, | சின்னமணி |
| | | இராமநாதபுரம் இராசா | பொன்னுத்துரை |
| 98 | தைரியலெக்ஷ்மி | ஏர்லக்கட்டு முதலாளி | ந. வேலுப்பிள்ளை |
| | | இராமநாதபுரம் இராசா | ஆ. மயில்வாகனம் |
| 99 | சீதாலெக்ஷ்மி | ஏர்லக்கட்டு முதலாளி | ச. மயில்வாகனம் |
| | | இராமநாதபுரம் இராசா | பொ. ஐயாமுத்து |
| 100 | மகாலெக்ஷ்மி | ஏர்லக்கட்டு முதலாளி | இ. கதிரிப்பிள்ளை |
| 101 | நரசிம்மசாமி | ,, ,, | இரத்தினசாமி |
| 102 | வெங்கடேசவரவ் | ,, ,, | சித்திரவேல் |
| 103 | ஞம் மூர்த்தி | ,, ,, | வ. செல்லையா |
| 104 | சுஞத்தன் | இறங்கூன் பாய் முதலாளி | மு. சபாபதிப்பிள்ளை |
| 105 | மகாபீர் | ,, ,, ,, | தா. மாணிக்கவாசகம் |
| 106 | ஆமட பாத் | ,, ,, ,, | பொ. புண்ணியமூர்த்தி |
| 107 | ஐதிர பாத் | ,, ,, ,, | நா. மயில்வாகனம் |
| 108 | சப்பிகருஸ் | ,, ,, ,, | க. த்தாமுத்து |
| 109 | கெஜலெக்ஷ்மி | சட்டிகாமம் முதலாளி | செ. தில்லையம்பலம் |
| 110 | யூன் சிலின் | இறங்கூன் கப்பல் | சி. சேது நாராயணசாமி |
| 111 | ஸ்ரார் ஒவ் கல்கத்தா | செட்டிவீடு பர்மா | நா. வேலும்மயிலும்<br>P. அப்பாத்துரை |
| 112 | எலிஸ் | செட்டிவீடு | தா. சின்னத்துரை<br>வேலும்மயிலும் |
| 113 | வெள்ளை வாடா | தோப்புத்துறை முதலாளி | கா. மாணிக்கம்<br>முத்துக்குமாரு |

இங்கே விபரிக்கப்பட்ட கப்பல்களில் அறுபது பிற ஊர் முதலாளிமாருக்குச் சொந்தமானவை. மற்றயவைகளெல்லாம் வல்வெட்டித்துறை முதலாளிமார்களுக்குச் சொந்தமானவை' ஆனால், எல்லாக் கப்பல்களிலும் வல்வெட்டித்துறை வாசிகளே

தண்டையல்களாகவும், மற்றும் கப்பல்களிலே வேலை செய்பவர்களாகிய சுக்கானிமார், கிலாசுகள். பண்டாரிமார்களாகவும் கப்பற்றொழில் பழகுவோர்களுமாய் இருந்தார்கள். மு. பொ. என்ற பொன்னுச்சாமி முதலாளி பருத்தித்துறையைச் சேர்ந்தவர். அவருடைய கப்பல்களிலே வேலை செய்வோர் முழுமையும் பருத்தித்துறையைச் சேர்ந்தவர்களே.

இக் கடல் கடந்த வாணிபம் 1935 வரையில் மும்முரமாகவே நடைபெற்றது. 1935ல் பர்மா இந்தியாவிலிருந்து பிரிக்கப்பெற்று. இங்கிலாந்திலிருந்து நேரடியாய் ஆளப்பெறத் தொடங்கியது அப்போதிருந்து பர்மா அரசாங்கம் தனிக்கொள்கை வகுத்து சில காலத்துக்குள் சகல வெளிநாட்டுத் தொடர்புகள் வாணிபங்கள் யாவுந் தனியார் துறையிலிருந்து மெல்ல மெல்ல அரசாங்கத்தால் நடாத்தப்பெறத் தொடங்கியது. அக்காலந் தொடக்கம் நம் கப்பல்களின் நெல் வியாபாரமும் குறைந்து விட்டது இரண்டாவது உலகமகாயுத்தம் தொடங்கி யப்பானுல் பர்மா முழுவதும் கைப்பற்றப்பட்டவுடன் பர்மாவின் தொடர்பு அறுந்து விட்டது.

உலக மகாயுத்தம் முடிந்ததும். வல்வை முதலாளிமார் நிலைமையை ஆராய்ந்தார்கள். அப்போது பர்மாவிலிருந்து நெல் வருவதில்லை. அரிசியாகவே நீராவிக் கப்பல்கள் மூலம் வரத் தொடங்கியது. அரிசி வியாபாரம் அரசாங்கங்களுக்கிடையே மட்டும் நடைபெற்று வந்தது. வல்வை முதலாளிமார்களெல்லாம் ஒன்று சேர்ந்து நீராவிக் கப்பல்களுக்குக் கொடுக்கும் கேள்வைத் தங்களுக்குக் கொடுத்தால் தாங்கள் தங்களுக்குச் சொந்தமான பாய்க் கப்பல்களிலே சென்று முடிந்தவரை கொண்டு வந்து கொடுப்போம். அவ்வளவு கேள்வுப் பணமும் இலங்கையிலே தங்கிவிடும். பல நூற்றுக்கணக்கான கப்பலோடிகளின் வாழ்வும் சிறக்கும் என்று அரசாங்கத்தைக் கேட்டார்கள். அப்போது அரசாங்கம் "அரிசியெல்லாம் காப்புறுதி செய்யப்பெற்று வருகிறது குறித்த காலத்தில் பாய்க் கப்பல்களிற் கொண்டுவந்து கொடுக்க முடியாது இது சாத்தியப்படாது'' என்று சொல்லிவிட்டார்கள் "அதுவுமின்றி பாய்க் கப்பல்களுக்குப் போதுமான பாதுகாப்பு இல்லை. ஏதாவது நட்டம் ஏற்பட்டால் அதனுல் அரசாங்கம் நட்டப்பட நேரிடும்'' என்று சொல்லி முடித்தார்கள்.

இதற்கு ஒரு மாற்று யோசனையாக, ''நம் கப்பல்களுக்குக் கொடுக்கும் கேள்வுப் பணத்தில், பத்திலொன்றைப் பிடித்து, ஒரு தொகையைச் சேர்க்கலாம். கப்பல்களினால் எப்போதாவது நட்டம் ஏற்பட்டால் இந்தத் தொகையிலிருந்து ஈடு செய்து கொள்ளலாம்'' என்றும் சொல்லிப் பார்த்தார்கள். ''இது ஒன்றும் சாத்தியப்படாது'' என்று முடிவாகச் சொல்லிவிட்டார்கள். ஆகவே, இந்த யோசனைகள் ஒன்றும் கைகூடாமற் போனது மட்டுமின்றி, வடபகுதிக் கடல் கடந்த வாணிபம் செய்யக்கூடிய கப்பல்கள் யாவும், கப்பல்களின் முதலாளிமார்களும் பெருந்தொகையான கப்பற்றொழில் செய்வோரும் அம்போ என்று கைவிடப்பட்டார்கள்

அப்பால் இலங்கையில் உணவுப் பஞ்சமும் உடைப் பஞ்சமும் தாண்டவமாடியது. வல்வைத் தொழிலாளிகள் பெருந்தொகையானோர் வேறு தங்களுக்குத் தெரிந்த தொழில் இல்லாமையால் இந்த உணவு உடைப் பஞ்சத்தைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, இரவிரவாக இந்தியாக் கரைக்குப் போய் பெருந் தொகையான அரிசி மூடைகளையும் பெருந் தொகையான உடுதுணி வகைகளையும் கொண்டுவரத் தொடங்கினார்கள். அப்பால் இலங்கையில் என்ன என்ன பொருட்கள் தட்டுப்பாடு உள்ளனவோ அவைகளையும் கொண்டு வந்தார்கள். இப் பொருட்களுக்குரிய பணம் அனுப்ப முடியாமையினால் இங்கிருந்து பாக்கு ஏலம், கராம்பு முதலிய பொருட்களைக் கொண்டு சென்றார்கள் இந்த வகையில் நல்ல இலாபம் கிடைத்து வந்தது. இந்தியாவிலும் சரி இலங்கையிலும் சரி இரண்டு நாடுகளுக்கும் தேவையான பொருட்கள் கிடைத்து வந்தபடியால் இந்த பண்டமாற்று வியாபாரத்திற்குப் பெருந் தடைகள் இருக்கவில்லை. அப்படி ஏதாவது தடைகள் இருந்தாலும், அரசாங்க ஊழியர்களையும் சரிக்கட்டிக் கொண்டு இவ் வியாபாரம் பரவலாக நாலைந்து வருடங்கள் நடந்து வந்தது.

இரண்டு நாட்டு அரசாங்கங்களும் ஒருவிதமான ஒப்பந்தம் செய்து கொண்டிருந்தால் இரண்டு நாடுகளும் நன்மையடைந்திருக்கலாம். சுகமாக சட்டரீதியான பொருட்களைப் பண்டமாற்றுச் செய்து கொண்டிருக்கலாம். ஆனால், அதைவிட்டு, தங்கள் நாடு மட்டும் நட்டம் அடைகின்றதெனா அபிப்பிராயப்பட்டதில், இலங்கையரசு பெருந்தொகையான ரோந்து நடவடிக்கைகளைக் கைக்கொண்டதில் இப்பண்டமாற்று வியாபாரமும் ஓரளவு படுத்து

விட்டது. 1956—57ல் இலங்கையில் ஏற்பட்ட அரசாங்க மாற்றம் அதன் பின் ஏற்பட்ட கடும் ரோந்து நடவடிக்கைகளாலும் இப் பண்டமாற்று வியாபாரத்துக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டது.

அரசியலில் புகுந்து நாம் குட்டை குழப்ப விரும்பவில்லை. நாம் எடுத்துக் கொண்ட விஷயம், வல்வெட்டித்துறை என்ற ஊரும் அதன் குடிமக்களும். அவர்களின் பழக்க வழக்கங்களும் அவர்களின் பண்பாடு, கடவுட் பக்தியும், அவர்களின் வாழ்வும், தாழ்வும், வளர்ச்சியும், தளர்ச்சியும், வாழும் வகைகளுமே ஆகையால் இவைகளை இவ்வளவில் நிறுத்தி, அடுத்த விஷயங் களிற் கவனஞ் செலுத்துவோமாக.

## 11. பழக்க வழக்கங்கள்.

இரண்டு உலக மகாயுத்தங்களினுலே வல்வை வாசிகளின் பழக்க வழக்கங்களிலே, பெரும் மாறுதல்கள் ஏற்பட்டன. இதற் குரிய காரணங்களாவன, வல்வைவாசிகளில் பலர் பிற நாடு களுக்குப் போய் வந்ததால் உண்டான அறிவு கல்வி வளர்ச்சி யினுலே உண்டான அறிவு முதலானவையாகும். ஆகவே பத்தொன் பதாம் நூற்ருண்டும் முடிந்து இருபதாம் நூற்ருண்டின் முற் பகுதிவரையுள்ளவைகளை முதலிலே சொல்லி, அப்பால் தற் போதுள்ளவைகளைச் சொல்லுவாம்.

**பிறப்பு:**

முன்னை நாட்களிலே பிரசவ மருத்துவ மனைகள் கிடையா. பயிற்றப்பட்ட பிரசவம் பார்க்கும் பெண்களும் இலர். ஆகவே பிரசவங்கள் யாவும், அவரவர்கள் வீட்டிலேயே, ஒரு பகுதியில் நிகழ்ந்தன. பேறுகாலநோ ஏற்பட்டவுடன் அதைக் கவனிப்பதற்காக, அந்த வேளையில், கைதேர்ந்த நளப் பெண் வீட்டிற்கு அழைக்கப்படுவாள். அவள் வந்து மற்றும் பெண்களு டன் சேர்ந்து, காலகாலங்களாக நடந்து வந்த சில்லறை வைத்திய முறைகளைக் கையாண்டு கொண்டிருப்பார்கள். குழந்தை பிறந் ததும் ஆணுயிருந்தால் வெளிக் கூரையைத் தட்டுவார்கள். இதனுல் வெளிக் கூரையில் காத்திருந்த பிதிர்கள் அதாவது காலஞ்சென்ற முற் சந்ததியார்கள். தங்களுக்குப் பிதிர் காரியஞ் செய்ய ஆண் வாரிசு வந்துவிட்டதென அறிந்து கொள்வார்கள். பெண்ணுயிருந் தால் வீட்டுச் சமையல் அம்மியிலே குழவியால் தட்டுவார்கள்.

பிதிர்கள் வீட்டு வேலைகளைக் கவனிக்கப் பெண் வாரிசு வந்து விட்டதெனத் தெரிந்து கொள்வார்களாம். அப்பால் பிள்ளைப் பேறு நடந்த இடத்தை முடிந்தவரை சுத்தப்படுத்தி, தாய்க்கு வெந்நீர் வார்த்துப் படுக்கவைத்த பின் குழந்தையையும் கழுவிச் சுத்த மாக்கிய பின், வாழ்த்து நடைபெறும். ஒரு சுளகில் அரிசி, கறிச் சாமான்கள் முதலியவற்றைக் கூறு கூருக வைத்து, பிள்ளையையும் பக்கத்தில் வைத்துக்கொண்டு, மருத்துவ நளப் பெண் வாழ்த்தத் தொடங்குவாள். ஆண் குழந்தையாக இருந்தால், கொஞ்சம் இயல்பு கூடிய இடமாக இருந்தால், இனத்தவர் கூடிய இடமாக விருந்தால், இந்த வாழ்த்துப் பலமாயும், நீடித்ததாயுமிருக்கும் இயல்பு குறைந்த இடமாகவிருந்தாலும் நாலாறு சாமான்களாவது சுளகில் பொருட்களாக இருக்கும்.

அரிசிப் பொதியோடும் வந்தீரோ தம்பி
அரிசி மலை நாடும் கண்டீரோ தம்பி
தாயார் தகப்பனர் வாழவே
மாமனர் மாமியார் வாழவே.

எனப் பலவகைப் பொருட்களும், பலவகை இனத்தவர்களும் வந்து வாழ்த்து நீண்டுகொண்டே போகும். இந்தப் பொருட்கள் யாவும், காசும் ஒரு சிறிய, பெரிய தொகையும் மருத்துவப் பெண் ணுக்குச் சன்மானங்களாகும்.

குழந்தை பெற்ற பெண்ணுக்கு, சாப்பாட்டுக்கு முன் "காயம்" என்று சொல்லப்பெறும் ஒரு மருந்து ஒவ்வொரு நாளும் கொடுப்பார்கள். வேர்க்கொம்பை அரைத்தும், வேறு சில சரக் குகளைச் சிறிய அளவில் சேர்த்தும் கட்டிக் கூழாகக் காய்ச்சிக் கொடு பார்கள். அப்பால் வேம்பு, நொச்சி ஆமணக்கு, பாவட்டை முதலிய இலைகளைத் தண்ணீரில் நன்கு அவித்து, அந்த வெந் நீரால் குளிப்பாட்டுவார்கள். வேறு மருந்துகள் கொடுப்பதாகத் தெரியவில்லை.

இந்தச் சரக்கு வகைகளெல்லாம் இரண்டு மாதத்துக்கு முன்னரே வாங்கிச் சேகரிக்கப்பட்டுவிடும். ஆண்கள் மனைவி கெர்ப்பவதியான நாட்களிலிருந்து மயிர் களைய மாட்டார்கள்.

குழந்தை பிறந்த ஒரு மாதத்துக்குப் பின் வீட்டில் உபயோகித்த பாண்டங்களை யெல்லாம் ஒதுக்கிவிட்டு, வீட்டைக் கழுவி மெழுகித் துப்பரவு செய்த பின் ஐயரை வீட்டிற்கு அழைத்து புண்ணியா வாசகஞ் செய்வார்கள். இயல்பு குறைந்தவர்கள் கோவிலில் ஐயரிடம் சிறிய தொகை கொடுத்து, பஞ்சகௌவியம் வாங்கி வந்து வீடு, கிணறு, அடுக்களையெல்லாம் தெளிப்பார்கள் அடுத்த நாள் தாம் வழிபடும் கோவிலுக்குச் சென்று, ஐயரைக்கொண்டு தாங்கள் நினைத்த பெயரைச் சூட்டுவார்கள். சில குடும்பங்களில் கோவிலுக்குச் சென்று, குழந்தைக்கு மயிர் களைந்து, கோயில் தீர்த்தத்தால் குழந்தையை நீராட்டி, பின் நாமகரணமிடப்பெறும்.

**கல்வி:**

ஒரு குழந்தை நான்கு வயதைத் தாண்டிய பின் வரும் சரஸ்வதி பூசை முடிவில் விஜயதசமியன்று வித்தியாரம்பம் நடைபெறும் ஒவ்வொரு கோயிலிலும் விஜயதசமியன்று வித்தியாரம்பம் என்னும் ஏடு தொடங்கும் வைபவம் நிகழும். அன்று பெற்ருேர் தம் குழந்தையைக் கூட்டிச் சென்று கோயில் பூசை முடிந்ததும் குருக்களைக் கொண்டு வித்தியாரம்பம் செய்விப்பர்.

குருக்கள் ஒவ்வொரு குழந்தைக்கும் தனி உயிரெழுத்துக்களையும், மெய்யெழுத்துக்களையும் சொல்லிக் கொடுத்து, அவை எழுதப் பெற்ற ஏட்டையும் கொடுப்பார். முற் காலங்களில் கடதாசியில் எழுதப் பழகும் பழக்கம் இருந்ததில்லை. ஏட்டைப் பார்த்துப் படித்ததும், நிலத்தில் எழுதிப் பழகியுமே கற்றுக் கொண்டார்கள். ஆகவே பத்தொன்பதாம் நூற்ருண்டு முடியும் வரைக்கும் பிள்ளைகள் எழுத்தாணியால் ஏட்டில் எழுதவும் கற்றுக் கொண்டார்கள். ஆகையால், பிள்ளைகள் பாடஞ் சொல்லும் ஆசிரியர் வீட்டுக்குச் சென்று, அவர்கள் வீட்டுத் திண்ணைகளிலிருந்தே கற்றுக் கொண்டார்கள். இத் திண்ணைப் பள்ளிக் கூடங்களில் படிப்பதெல்லாம் தமிழ் மொழியும், ஆரம்ப கணிதமுமே. கணிதம் ஒன்று முதல் நூறுவரை எண்ணவும் எழுதவும் பழகுவதோடு சரி. கொஞ்சம் வசதியுள்ளவர்கள் ஆத்திசூடி, கொன்றை வேந்தனையும் எட்டுவார்கள். சிலர் வெற்றிவேற்கையையும் முடிப்பார்கள். கணிதத்தில் இலக்கங்களைத் தமிழிலே எழுதிப் படிப்பார்கள். கொஞ்சம் கூடப் படிப்போர் வாய்ப்பாடுகளையும், கீழ் வாயிலக்கங்களையும் மாகாணி வரையிலும் படிப்பார்கள்.

இவ்வளவும் படித்துத் தேற இரண்டு மூன்று வருடங்கள் செல்லும். அப்போது படிப்பு முடிந்துவிடும். கடற்றொழில் செய்பவர்கள்தகப்பனோடு தமையனோடு,மச்சானோடுகடற்றொழிலுக்குப் போய்விடுவார்கள். கப்பலோடிகள் சோற்றுத் தீனுக்காகச் சம்பளம் ஏதுமில்லாமல் கப்பல்களிற் செல்லத் தொடங்கி விடுவார்கள்.

**ஆங்கிலேய அரசின் கல்விப் பணி.**

ஆங்கிலேய அரசு இலங்கையில் கல்விப் பணியைச் செய்யத் தொடங்கிய காலத்தில், ஒரு சிறு தொகையை மாத்திரம் கல்வி வளர்ச்சிக்காக ஒதுக்கியது. கல்விக்கென ஒரு புறம்பான திணைக்களம் கூட இருக்கவில்லை. கல்வியை வளருங்கள் என கிறீத்தவ முதன்மை ஆயர் வசம் அரசாங்கம் பணத்தைக் கொடுத்தது. அவர்கள் பல ஊர்களிலும் ஆரம்பப் பாடசாலைகளை நிறுவினர்கள். கிறீத்தவ மதத்தின் பல பிரிவுகளிலுள்ள மதப் பிரசாரகர்கள் எங்கெங்கெல்லாம் பாடசாலைகளை நிறுவினர்களோ அங்கங்கெல்லாம் தங்கள் மதத்தவர்களையே, இவ்விதம் நிறுவப் பெற்ற பாடசாலைகளில் ஆசிரியர்களாக அமைத்து, மறைமுகமாக மதப் பிரசாரத்தையும் செய்து வந்தார்கள். இந்த வகையில் ஏற்பட்ட பாடசாலைகள் இரண்டு, வல்வெட்டித்துறைக்கு 1890ம் ஆண்டளவில் வந்து சேர்ந்தன. அவை இரண்டும், இன்றளவில், அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையாகவும், றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையாகவும் ஆரம்பப் பாடசாலைகளாக நிலவி வருகின்றன. இந்த விதமாக, மறைமுக கிறீத்தவ மதப் பிரசாரம் நடந்து வருவதைக் கவனித்த பௌத்த மத இந்து மதப் பெரியார்கள் தாங்களும் முதலிலே ஆரம்பப் பாடசாலைகளை நிறுவி, காலா காலத்தில் அப் பாடசாலைகள் வித்தியாலயங்கள், மகா வித்தியாலயங்கள், கல்லூரிகளாக வளர்ந்து வந்திருக்கின்றன. இப்படி நிறுவப் பெற்ற பாடசாலைகளே இன்று வல்வையில் சிதம்பராக் கல்லூரியாகவும், சிவகுரு வித்தியாசாலையாகவும், மகளிர் மகா வித்தியாலயமாகவும் விளங்குகின்றன.

**பிள்ளைகளின் விளையாட்டுக்கள்.**

ஆண்கள்: கிந்தியடித்தல், கிட்டியடித்தல், வாரோடுதல், பந்தடித்தல், கிளித்தட்டு விளையாடல் குடுகுடு விளையாடல், சில்லு விளையாடல் முதலியன.

பெண்கள்: மூலைக் கப்புப் பாய்தல், பாண்டி விளையாடுதல், கொக் கான் வெட்டுதல், ஓடிப்பிடித்தல் முதலியன.

சிறுவர்: கயங்குண்டு சுண்டுதல், இலுப்பைக் கொட்டையடித் தல், குதிரைச் சில்லுப் போடுதல், ஓரங்கோடு போடு தல் முதலியன.

இவையெல்லாம் முதலாம் உலகப்போர் முடியும் வரையில் விளையாடப்பட்டன. தற்காலம் உதைபந்து, கைப்பந்து (வொல்லி போல்), பேஸ்போல், கிறிக்கற் முதலியன.

**திருமணம்:**

முதலாவது உலக மகாயுத்தம் முடியும் வரையில் இவ்வூர்த் திருமணங்கள் யாவும் மிகவும் சுருக்கமான முறையிலே நடை பெற்றன. ஆதி வல்வையார் யாவரும் ஒரே சமூகத்தைச் சேர்ந் தவர்கள். முன்னே கூறப் பெற்றபடி இரண்டு மூன்று தலை முறைகளைக் கவனித்துப் பார்த்தால் யாவரும் கிட்டிய உறவோ எட்டிய உறவோ உள்ளவர்களாக இருப்பார்கள். வெளியூர்களில் சம்பந்தம் செய்யும் வழக்கம் மிக மிகக் குறைவு. நூற்றுக்கு ஒரு விழுக்காடு தானும் இருக்குமோ என்பது சந்தேகமே. அதுவும் பருத்தித்துறை தொண்டைமானாறு ஆகிய இரண்டு ஊர்களுக் கிடையே மட்டும் நடந்திருக்கின்றன.

திருமணத்திற்கான செலவுகளும் மிகக் குறைவு. இருபதாம் நூற்றுண்டு தொடக்க வருடங்களில் ஒரு திருமணத்திற்கான செலவு, கிட்டத்தட்டப் பின்வருமாறே யிருந்தது.

மணமகன்:

| | | | | |
|---|---|---|---|---|
| 1703ம் நம்பர் மல்வேட்டி | 2 | — 3 00 | | |
| சரிகைச் சால்வை | | — 2 50 | | |
| ஆரணியம் சால்வை | | — 2 50 | – 11 50 | |

மணமகள்:

| | | | | |
|---|---|---|---|---|
| கூறை: மஞ்சட்கரை மான்புள்ளி | 1 | — 5 00 | | |
| மான்புள்ளி தாழம்பூங் சேலை | 1 | — 5 00 | | |
| சட்டை | 1 | — 1 50 | – 11 50 | |
| வீட்டுச் செலவு ஏறக்குறைய | | | | 21 00 |
| கல்யாணப் பணியாரங்கள் | | | | 10 00 |

வீட்டைக் கழுவி மெழுகிக் கோலம் போடுவார்கள். நெருங்கிய உறவு முறையாருக்குச் சொல்லி அழைப்பார்கள். சொல்லாதவர்கள் கலந்து கொள்ள மாட்டார்கள். பெண் வீட்டுக்கார ஆண்களில் இரண்டு நாலுபேர் மாப்பிள்ளை வீட்டுக்கு வேட்டி, சால்வையுடன் போய் அவைகளை உடுக்கச்செய்து, பெண் வீட்டுக்குக் கூட்டிவருவார்கள். இரண்டு வீட்டு ஆண்கள் பெண்கள் சேர்ந்தாலும் 10, 15, 20 பேருக்கு மேல் சேருவதில்லை. மாப்பிள்ளை பெண் வீட்டுக்கு அழைத்து வரப்பட்டதும், இருக்கச் செய்து, விளக்கடிக்குக் கூட்டிச் சென்று, அவர் உட்கார்ந்ததும் மணப்பெண், மாப்பிள்ளை கொண்டுவந்த உடுப்புக்களை அணிந்து கொண்டு வந்து மாப்பிள்ளைக்கு வெற்றிலை பாக்குக் கொடுத்ததும் திருமணம் நிறைவுற்றுவிடும். அப்பால் மாப்பிள்ளைக்கும் புதுக்கல உணவு (அதாவது பெண் வீட்டில் மூன்று சுமங்கலிகளாற் சமைக்கப் பெற்ற சோறும், மூன்று நான்கு கறி வகைகளும்) கொடுத்து அவர் சாப்பிட்டதும், அவர் சாப்பிட்ட இலையிலேயே பெண்ணும் சாப்பிடுவாள். இவ்வளவு எளிமையான திருமணமாக இருந்தாலும் பேச்சுக்கும். சிரிப்புக்கும், மகிழ்ச்சிக்கும் குறைவிராது சீதனம் என்ற பேச்சே கிடையாது. பெண் வீட்டார் தங்கள் இயல்பிற்குத் தகுந்த வகையில், பெண்ணின் காதை மூக்கைக் கழுத்தை நிரப்பி விடுவார்கள். அவர்கள் புறம்பாய் வாழ்வதற்கு ஒரு வீடு, அநேகமாகக் கொடுப்பார்கள். நகைகள் கழுத்திற்கு கீச்சி, காதிற்குத் தோடு, மூக்கிற்கு மின்னி முதலானவை மட்டும் நகைகளும் எல்லாம் பொன் ஆபரணங்கள் தான். தங்கம் 10, 20 வருடங்களுக்குப் பின்தான் வந்தது. கைக்கு அந்தக் காலத்தில் வளையல் தான் உண்டு.

ஏதோ கல்யாணம் செய்யத்தான் போகிறோமே என நினைத்தோ என்னவோ வாலிப வயதிலேயே முடிந்துவிடும். பெண் 16 18 வயதிற்குள்ளும் ஆண் 20-25 வயதிற்குள்ளும் திருமணம் முடிந்துவிடும். கல்யாணம் முடிந்து மூன்றுவது நாள் மாப்பிள்ளை வீட்டிற்குக் கால்மாறிச் சென்று, அங்கே இரண்டு மூன்று தினங்கள் தங்கிவிட்டு. பெண் வீட்டிற்கு வந்துவிடுவார்கள். அப்பால் உள்ளூர்க் கோயில்களுக்கும் வல்லிபுரக் கோயிலுக்கும் போய் வருவதோடு அது ஒரு பழைய குடும்பமாகிவிடும்.

இயல்புள்ள இடங்களில், பட்டும், பருத்தியும், கழுத்திற்கு கடுகுமணி உட்கட்டு, கைக்குக் காப்பு, தோட்டுக்குச் சிமிக்கி காலுக்கு வெள்ளிக் காப்பு பாதசரம், மங்கல அணியென்ற தாலி முதலானவை அணிவர். தாலியைப் பொன் சரட்டால் கழுத்தைச் சுற்றியே அக்காலம் அணிவது வழக்கம்.

கப்பல் முதலாளிமார், தண்டையல்கள், வீடுகளில் ஆபரணங்கள் பொன்னுக்குப் பதில் தங்கத்தில் இருக்கும். தாலியும் மாலையாக மார்பளவிருக்கும். கைக்கும் தங்கக் காப்பு, கழுத்திற்கு அட்டிகை, சங்கிலி முதலானவைகளும், கூறைக்குப் பட்டும், மாப்பிள்ளை வேட்டி சால்வை பட்டாயும், அவருக்கொரு பட்டுச் சட்டையும், உண்டு. சில செல்வர்கள் வீட்டில் மார்புப் பதக்கம், கல் அட்டிகை முதலானவைகளும் உண்டு. 1950ம் ஆண்டு வரையில் ஒரு பவுணின் விலை 13 ரூபா முதல் 20 ரூபாவுக்குட்டானிருந்தது.

அப்படி இருந்தும் தங்கத்தில் தாலியும், கொடியும் செய்ய முடியாத நிலையே வல்வையில் பெரும்பாலான குடும்பங்களில் இருந்தது. இந்தியாவுடன் செய்து வந்த உணவு, உடுப்பு வியாபாரங்களினாலே தான் வல்வை, பொருளாதாரத்தில் வளர்ச்சியும், சிறப்பும் பெற்றுத் திகழ்ந்தது.

**இறப்பு:**

ஒரு வீட்டில் ஓர் அமங்கல நிகழ்ச்சி ஏற்பட்டால் அவ் வீட்டுப் பெண்கள், பெருங் குரலில் அழத் தொடங்குவார்கள். இதைக் கேட்ட அண்டை அயல் பெண்களும் சற்று நேரத்தில் வந்து விடுவார்கள். பெண்கள் இவ்வாறு ஒப்பாரி வைத்து அழுவது முற்காலங்களில் வழக்கமாயிருந்தது.

ஆண்களும் சிறுகச் சிறுக வந்து ஒரு கூட்டமாய்விடும். இறந்தது கைக் குழந்தையானாலும். சிறு வயதுள்ள தானாலும், நாலாறு மணித்தியாலங்களில் பூதவுடலைக் குளிப்பாட்டி, சுத்தமான உடை உடுத்தி, இடுகாட்டிற்கு எடுத்துச் சென்று புதைத்து விடுவார்கள். வயது வந்த, அல்லது வளர்ந்த பிள்ளைகளானாலும், பெரியவர்களானாலும் மூடிய பாடை ஒன்று கட்டி, எடுத்துச் சென்று, சுடுகாட்டில் எரித்துவிடுவார்கள்.

அப்போதெல்லாம், ஏன் இப்போது தானும் வல்வையில் பறையடிப்போர் கிடையாது. பருத்தித்துறை கற்கோவளப் பகுதியை வசிப்பிடமாகக் கொண்டுள்ள பறையடிப்போர்க்கு ஆளனுப்பி வரவழைக்க வேண்டும். பொருளாதாரம் குறைவுள்ள முற்காலங்களில் இது சாத்தியப்பட்டிருக்காது. ஆகவே இடுகாட்டிற்கோ சுடுகாட்டிற்கோ புறப்படும்போது, குடிமகன் சங்கை ஒலித்துக்கொண்டு போவான். சீனவெடிகளை கொழுத்திக்கொண்டு

போவார்கள். வீட்டில் ஐயரை அழைத்து கிரியைகள் செய்வது, இப்போது 30, 40 ஆண்டுகளுக்கு முற்பட்டதேயாம். அதற்கு முன் கோயில் குருக்கள் பகுதியில் இவைகளுக்காக உள்ளவரிடம் சொல்லி சிவாக்கினி மட்டும் மூட்டி எடுத்துச் செல்வார்கள். கொள்ளி வைக்கும் கடமையுள்ளவர் அதை எடுத்துக்கொண்டு முன் செல்வார் ஆனால் சுடுகாட்டிலே சிதையில் இறந்தவர் உடல் வைக்கப்பட்ட பின், குடிமகன் வாய்க்கரிசிப் பெட்டியுடன் பக்கத்தில் நிற்பான். பத்து மித்திரர்கள் வாய்க்கரிசி போட்டபின், கையில் நெருப்புக் கொள்ளியுடன் நிறைகுட நீரையும் கொண்டு சிதையை இடமாகச் சுற்றி வரும் பொழுது, குடிமகன் ஒவ்வொரு முறையும் குடத்தில் கத்தியால் கொத்துவான். மூன்று முறை இவ்வாறு செய்த துவாரத்தால் தண்ணீர் கிட்டத்தட்ட முடிந்து விடும். அப்போது குடத்தைத் தலைமாட்டில் போட்டு உடைத்து விட்டு, புகைந்து கொண்டிருக்கும் கொள்ளியையும் தலைமாட்டில் சொருகிவிட்டு சுடுகாட்டிற்கு வெளியே போக வேண்டும். அப்போது "சிதையைப் பாராமலே போ" என்று முதியவரில் ஒருவர் சொல்லுவார்.

**காடாற்றுதல்:**

முற்காலங்களில் எட்டாவது நாளிலும், தற்போது வசதிக்குத் தக்கபடி 2ம் 3ம் நாட்களிலும் இனசனமாகியோருடன் சுடுகாட்டிற்குச் சென்று, சிதைச் சாம்பர், என்புகளைக் கடலில் சங்கமிக்கச் செய்துவிடுவார்கள். அப்பால் சுடலைக் காவற் தெய்வத்துக்கு ஒரு படையல் போட்டு வணங்கிய பின், காட்டை ஆற்றி நவதானியம் விதைப்பார்கள்.

**ஆசூசக் கழிவு:**

ஒரு மாதத்தின் பின் வீட்டைத் துப்புரவு செய்து, புண்ணிய வாசகம் செய்யப்பெறும். இனத்தார் சனத்தாரும் சேர்ந்து கொள்வார்கள். இது முன்னே 31 நாளிலே செய்யப்பெற்றது. தற்காலம் பதினைருவது நாளிலே செய்யும் பழக்கம் ஏற்பட்டுவருகிறது. முற்காலங்களில் இயல்புள்ளவர்கள் குருக்களை வீட்டில் அழைத்து

இதைச் செய்வார்கள். இயல்பு குறைந்தோர் குருக்களிடமிருந்து பஞ்சகௌவியம் பெற்று வந்து வீடு, கிணறு முதலிய சகல இடங்களிலும் தெளித்து விடுவார்கள். அந்தியேட்டி செய்பவர்களும் இந்த நாளிலே செய்து முடிப்பார்கள் தற்காலத்தில் பொருளாதார வசதியுள்ளவர்கள் கிரியை என்றும் 16, 31 என்றும், அந்தியேட்டி என்றும் விரிவான முறையில் இவைகளைச் செய்கிருர்கள்.

## தற்காலச் சீதன முறை:

முற்காலத் திருமணங்களின் முறைகளைப் பற்றி மகிழ்ச்சியுடன் எழுதிய நாம் இக்கால கட்டத்தில் நடக்கும் முறைகளையும் எழுத வேண்டும். ஆனல் இதை வெட்கத்துடனும், மனவேதனையுடனுமே எழுதுகின்றேன். வல்வை நடுத்தர வகுப்பினர் பொருளாதாரத்தில் ஓரளவு வளர்ந்திருப்பதால் பணமென்றும், வீடென்றும், நகையென்றும் இரண்டு மூன்று இலட்சங்கள் கொடுக்கக்கூடிய நிலையிலிருக்கிருர்கள். மி॰ந்த மகிழ்ச்சியுடன் கொடுக்கவும் செய்கிருர்கள். இப்பொழுது வல்வையில் ஆங்கிலக் கல்வி கற்று, ஒரு வைத்தியக் கலாநிதியாகவோ, பொறியியலாளராகவோ, பட்டயக் கணக்காளராகவோ இருந்து விட்டால் கல்யாணப் பேச்சையெடுத்தவுடன் ரொக்கம் எத்தனை லட்சம் கொடுப்பீர்களென்பதே முதற் கேள்வியாயிருக்கிறது. பெண்ணின் கல்வி குணம் அழகு உடை நடை பாவனையைப்பற்றி கேட்பாரில்லை. மேலும் அவர்கள் இவ்வளவு கொடுப்பார்களாம் என்பதாகச் சொல்லி ஏலம் போடுவது போல் தொகையை உயர்த்தும் படியாக தூண்டுகிருர்கள். இதுமட்டுமல்ல ஒருப॰தி கல்யாணம் கேட்டால் அந்தப் பேச்சைத் தொடர்ந்து முடிவுசெய்வதில்லை. வேறு பகுதியார் வருவார்களோ என பேச்சை இழுத்துக்கொண்டே போகிருர்கள். இந்த வகையில் நடுத்தரக் ॰டும்பங்களில், பெண்கள் குமாரகவே இருந்து வருகிருர்கள்.

ஆனால் நடுத்தரத்திலும் குறைந்த குடும்பங்களும் சாதாணக் குடும்பங்களும் கல்யாணம் நடக்கும் போது இவ்வளவு கெடுபிடியில்லை. ஏதோ உள்ளவைகளைக் கேட்டும் கொடுத்தும் திருமணங்கள் நடந்தேறுகின்றன.

## கொண்டாட்டங்கள்

### 1. போர்த்தேங்காய் போட்டி

முற்காலத்தில் வழக்கமாக நடந்து தற்காலத்திலே மறைந்து போன, பங்குனி மாதமெல்லாம் நடந்து வருடப்பிறப்பன்று கடைசியாட்டம். இது ஒருவர் ஒரு தேங்காயை நிலத்தில் வைத்தால், இன்னொருவர் தன் தேங்காயால் ஓங்கிக் குத்தி அதை உடைக்கவேண்டும். ஒரு மாதம் இரண்டு மாதங்களுக்கு முன்பிருந்தே, காலி மட்டக்களப்புப் பகுதிகளிலிருந்து வயிர ஓடுள்ள தேங்காய்களைத் தேடிச் சேர்ப்பார்கள். வாலிபர்கள் இவ்விதமாக ஆடுவார்கள். பெரியவர்கள் சிறிது தூரமிருந்து தேங்காயை உருட்ட ஒருவர் குறிபார்த்து தன் கைவசமுள்ள தேங்காயால் அடித்து உடைக்க வேண்டும். இவ்வண்ணம் உடைத்தால் உடையல் அடித்தவருக்குச் சேரும். உடையாவிட்டால் அவர் ஒரு தேங்காய் கொடுக்கவேண்டும். இத்தப் போட்டி இக் காலத்தில் அடியோடு மறைந்துவிட்டது.

### 2. பட்டம் விடுதல்

முன்னெல்லாம் கட்டுக் கொடிகள் தான் கட்டி ஏற்றுவார்கள். இவை பல அளவுகள் உள்ளவையாய் இருக்கும். நான்கு ஐந்து ஆறுமுழக் கட்டுக் கொடிகள். அவைகள் கூவிக்கொண்டேயிருக்கும். மழையின்மையைக் கவனித்து. இரவு முழுமையும் பறந்து கூவிக்கொண்டேயிருக்கும்.

இவைகளை விட நூதனமான கொக்கு பருந்து மனிதன், கப்பல் பின்னிய பாம்புக் கொடிகளும் பல வண்ணங்களிலும் உண்டு.

இவைகளெல்லாம் வாடைக்காற்றுக் காலத்தில் தான் விடப்படும். காற்று இளகிய காலமாகிய தை பிற்பகுதியில், வெளவால் எனப்படும், பின்னால் வால் கட்டாத கொடிகள் சில நாட்களுக்குப் பறக்கும். தைமாதத்தோடு எல்லாம் முடிந்துவிடும். தற்காலத்

தில் கட்டுக்கொடி மனப்பாங்கு போய் எல்லாம் நாலு மூலைப் பட்டங்களே விடப்படுகின்றன. மேலும் வயதேறியவர்களும் பட்டங்களில் நாட்டமுடையவர்களாய் தென்படவில்லை.

### 5. பொழுதுபோக்கு

வல்வையில் இரண்டு படமாளிகைகள் இருக்கின்றன. இவைகளில் திரைப்படக் காட்சிகளைப் பார்ப்பதிலும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் 5-30 முதல் 23–15 வரையில் பரப்பும் பாட்டு நாடகம், கதை விமரிசனம் முதலியவைகளைக் கேட்டும், தொலைக்காட்சியைப் பார்த்தும் பொழுதைப் போக்குகிறார்கள்.

மற்றும் இவ்வூரிலும், மிகவும் அண்மையிலுள்ள கோயில்களிலும் நடக்கும் நாதசுர மேளக் கச்சேரிகள், நடன நாட்டிய சதுர்க் கச்சேரிகள், சங்கீத கதாப் பிரசங்கங்களைப் பார்த்தும் கேட்டும் நுண் கலைகளை வளர்க்கவும் சுவைக்கவும் வழிகளை வகுக்கின்றன.

## 12. வல்வையின் சுகாதாரம்

### பட்டினசபை, நகரசபை.

1947ல் உள்ளூர் ஆட்சிமன்றமான பட்டினசபை வரமுன், ஊரின் சுகாதாரம் யாழ்ப்பாண அதிபரின், அதிகாரத்தின் கீழ் நடைபெற்றது. பருத்தித்துறை, வல்வெட்டித்துறை போன்ற பெரிய ஊர்களிலிருந்து ஒவ்வொரு அங்கத்தினரை அதிபரே ஏற்படுத்திச் சுகாதாரத்தைக் கவனித்து வந்தார்கள். ஊரிலுள்ள குப்பை கூழங்களை அப்புறப்படுத்துதலும், பொது மலகூடங்களை அமைத்தலும் பரிபாலித்தலும் வீடுகளிற் கட்டப்பெற்ற மலகூடங்களைத் துப்பரவு செய்யும் வேலையாட்களை நியமித்தலும் ஆகியவையே இவர்களின் முக்கிய வேலைகளாகும்.

### பட்டினசபை

வல்வையில் 1—1—1947ல் பட்டினசபை ஏற்படுத்தப்பெற்றது. இச் சபையின் எல்லைகள் வகுக்கப்பெற்று இவைகளை ஐந்து வட்டாரங்களாகப் பிரித்து, ஒவ்வொரு வட்டாரத்திலிருந்தும், ஒவ்வோர் அங்கத்தவர் அவ் வட்டார மக்களால் வாக்காளர் பட்டியல் மூலமாகத் தெரிவு செய்யப்பெற்று ஐந்து அங்கத்தவர்களும்

தங்களுக்குள் ஒருவரைத் தலைவராகத் தெரிந்து, பட்டினசபை வேலைகளைக் கவனித்து வந்தார்கள். இச் சபையின் முக்கிய பணிகளாவன:-

1 ஊர்ச் சுகாதாரத்தைக் கவனித்தல்
2. ஊர்ப் பொதுச் சந்தைகளை ஏற்படுத்திப் பரிபாலித்தல்
3. ஊரிலே தொடங்கி, ஊரிலே முடியும் தெருக்கள் ஒழுங்கைகள் முதலானவற்றைப் பரிபாலித்தல்.

இச் சபையினர் தங்கள் சேவைகளை இலவசமாகவே செய்து வந்தார்கள். வல்வைக்கு மின்சாரத் தொடர்பு, இதற்கு முன்னே, பருத்தித்துறையிலிருந்து கிடைத்து வந்தது. இச் சேவையை பட்டினசபை ஏற்று நடத்தத் தொடங்கியது இச் சபையின் தலைவர்களின் விபரமாவது.

| | |
|---|---|
| திரு. ஐ. திருப்பதி | 1947 |
| திரு. ச. நடனசிகாமணி | 1954 |
| திரு. சோ. சுந்தரலிங்கம் | 1956 |
| திரு இ. அப்புக்குட்டியாபிள்ளை | 1959 |
| திரு. க. சபாரத்தினம் | 1962 |

1962 க்கும் 1970 க்குமிடையில் ஒரு வருடம் திரு க. ஸ்ரீரங்கம் தலைவராயிருந்தார்.

## நகரசபை

1—1 1970ல் வல்வைப் பட்டினசபை, வல்வை நகரசபையாகி திரு. வி. இரத்தினவடிவேல் தலைவராகத் தெரிவு செய்யப் பெற்றார். நகரசபை எல்லைகளாவன:-

**கிழக்கு:** கந்தவனக் கோயிலுக்கு மேற்கேயுள்ள கற்பெரும் பாதை.

**மேற்கு:** தொண்டமனாறுக் கிராமச் செல்வச்சந்நிதி கோயிலையும் உள்ளடக்கிய பகுதி.

**வடக்கு:** பாக்கு நீரிணைக் கடல்.

**தெற்கு:** பொலிகண்டி மேற்குப் பகுதி, வல்வெட்டிக் குறிச்சி, ஊரிக்காடு, மயிலியதனைக் குறிச்சி, கெருடாவில் குறிச்சி, தவிர ஆக நீளம் கிட்டத்தட்ட மூன்றரைக் கல் தூரம் அகலம் காலே அரைக்கால் கல்லிலிருந்து சில இடங்களில் முக்காற் கல்வரை இந்த எல்லையை அரசாங்கம் நிர்ணயித்தபோது பொலிகண்டி மேற்குக் குறிச்சியாகும். மயிலியதனைப் பக்கமுள்ள சிலரும் தாங்கள் வல்வையுடன் இணைய விரும்பவில்லையென அரசாங்கத்தையும் தமிழ் பாரளுமன்றப் பிரதிநிதிகள் மூலம் கேட்டுப் பிடிவாதம் பிடித்த போதிலும் சாதி அடிப்படையில் எல்லைகள் வகுப்பது முறையில்லையென அவர்களின் கோரிக்கை தள்ளுபடி செய்யப்பட்டு முன் நிர்ணயித்த எல்லைகளே உறுதிப்படுத்தப்பட்டன.

வல்வை பட்டினசபை நகரசபையான போது. பட்டின சபை வட்டாரங்கள் சிறிய மாற்றங்களுடன் ஆறு வட்டாரங்களாகவும் புதிதாகச் சேர்க்கப்பெற்ற பொலிகண்டி ஒரு வட்டாரமாகவும் மயிலியதனை ஒரு வட்டாரமாகவும் தொண்டைமனாறு ஒரு வட்டாரமாகவும் ஆக ஒன்பது அங்கத்தவர்கள் கொண்ட சபையாயிற்று. இவர்கள்கொண்ட கூட்டத்தில் திரு. து நவரத்தினம் அவர்கள் தலைவராகத் தெரிவு செய்யப்பெற்று வல்வை நகரசபையின் முதல் தலைவராக வந்தார்கள்.

1—1—1947 தொடக்கம் இன்றைய வரையில் பட்டினசபையிலோ நகரசபையிலோ வல்வை ஊரவர்களில் ஒருவரே தலைவராயிருந்தாலும் வெள்ளாளப் பதிகுயிலுள்ள ஒருவரே உப தலைவராக இருக்கவேண்டும் என்னும் முறையைப் பின்பற்றியே வந்திருக்கிறார்கள். அதன்வழக்கப்படி திரு. மகாலிங்கம் அவர்களே நகர உப தலைவராக தேர்ந்தெடுக்கப் பெற்றார்கள்.

1977ம் ஆண்டு தொடக்கம் இரண்டு ஆண்டுகள் நகரசபை அதன் காரியதரிசியும் விசேட கொமிஷனருமான திரு. கோ கந்தசாமி அவர்களால் நடாத்தப்பெற்றது. பணம் பலவகையில் கரைந்து போனதன்றி இக் காலத்தில் உருப்படியான ஒன்றும் நடைபெறவில்லை.

அப்பால் தேர்தல் முறை இலங்கை முழுமையிலும் மாற்றப் பட்டது. அதன்படி இவ்வூர் நகரசபைக்கும் தேர்தல்கள் நடை பெற்றது. இதில் திருவாளர் ச. ஞானமூர்த்தி அவர்களைத் தலைவ ராகக் கொண்ட தமிழர் விடுதலைக் கூட்டணி நகரசபையைக் கைப்பற்றியது இந்த ஒழுங்கின்படி தலைவருக்கு மாதம் ஆயிரம் ரூபாவும் மற்றும் எட்டு உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் மாதம் ரூபாய் முன்னூறும் படிகள் உண்டு. 1979ம் ஆண்டு தொடக்கம் இவர்கள் வல்வை நகரை ஆட்சிசெய்து வருகிறார்கள். பின்வரும் அபிவிருத்தி வேலைகள், பொருளாதார வசதிகளைப் பொறுத்து மந்தகதியில் நடைபெற்று வருகின்றன. 1982ம் ஆண்டு முடியு முன் இவ்வேலைகள் முடிவுபெறுமென்றே நம்பிக்கையுடன் இருந்து வருகிறார்கள்.

### வேலைகளின் விபரமானது

1. நவீன சந்தை
2. நகரசபை அலுவலகக் கட்டிடமும், பொது நூல் நிலையமும்
3. ஊரணி சுடுகாட்டின் இரு பகுதிகளையும் ஒன்றிணைத்தல்.
4. ஊரணி அந்தியேட்டி மடத்துக்குப் பக்கத்திலேயுள்ள நீர் ஊற்றைப் புனரமைத்தல்.
5. குழாய் நன்னீர் திட்ட வேலைகள்.
6. தொண்டமானாற்றில் கப்பல் கட்டும் தளம் அமைத்தல்.

## 13. வல்வையின் தற்கால நிலை

## 31—12—81

வல்வை மக்களுக்கு வேலைவாய்ப்பைக் கொடுத்துக்கொண் டிருந்த கப்பல் கட்டும் வேலைகள் அநேகமாக இப்போ இல்லாமல் போய்விட்டது.

பெருங் கப்பல்கள் கட்டக்கூடிய வசதிகளுள்ள சிவன் கோயிலடிவான் இப்போ வெறிச்சோடிக் கிடக்கிறது. சிறு கப்பல் கட்டக்கூடிய கொத்தியால் வானும் இப்போ சிறு சிறு கொட்டில்களாக குடியேற்றப் பகுதியாக மாறிக்கொண்டிருக்கிறது கப்பல் மேஸ்திரிமாரும் ஒவ்வொருவராக மறைந்துபோய்க் கொண் டிருக்கிறார்கள். நெடியகாட்டிலும் ஊரணியிலுமுள்ள சிறு மச்சு வாய்கள் கட்டும் இடங்களும் டீசல் விலையேற்றத்தால் வள்ளங்கள் கட்டுவோரின்றி மறைந்து போகின்றன.

வல்வை மக்கள் அரசாங்க வேலையில் சேர்வது அபூர்வமாகி விட்டது என்பது முன்னமே விளக்கப்பெற்றிருக்கிறது. நாங்கள் யாவரும் கடலோடிகள் கடற்தொழில், கடல் கடந்த கப்பற்தொழில் மட்டும் வல்வையாருக்கு நன்கு தெரிந்த தொழில்கள். தோட்டத் தொழில் செய்வதற்கு வல்வையாருக்கு நிலமே கிடையாது. வெளியூர்களில் வயல் நிலங்களை வாங்கி வயல் செய்வதற்கு இதுவரையில் அவர்கள் பழக்கம் பெறவில்லை. ஆகையினாலேதான் அவர்கள் வெளியூர்க் கப்பல்களில் வேலை தேடினார்கள். இந்த வேலைகளை அவர்கள் தேடும்போது முகவர் நிலையங்களுக்கு இரண்டாயிரம் நாலாயிரம் கமிஷனாகக் கொடுத்துச் சேர்ந்தார்கள். மற்றும் சாதியார்களோ சிங்கள மக்களோ முதலில் ஆர்வம் காட்டவில்லை.

இவ்வண்ணம் வெளியூர்க் கப்பல்களிற் சேர்ந்து இவர்கள் நல்லாய்ச் சம்பாதித்து வருகிறார்கள் என்பதையறிந்த கடலோடிகளின் தொழிலில் சிறப்பையும் பொருளாதார வருவாய்களையும் கப்பலோடிகளின் பாரம்பரியங்களையும் உணர்ந்து பிறரும் இத் தொழிலில் ஈடுபடத் தொடங்கி பிறநாட்டுக் கப்பல்களில் தொழிலுக்குப் புறப்பட்டார்கள். இவ்வாறாக சகலரும் நான்முந்தி நீமுந்தியென்று எத்தனித்த வகையில் கொழும்பில் புற்றீசல்போல்முகவர் நிலையங்கள் தொடங்கி, கமிஷன் பணம் ஏறத் தொடங்கிவிட்டது. தற்போது கப்பற்தொழிலில் சேர்த்துவிடுகிறோம் என்று ஏற்பட்ட முகவர் நிலையங்கள் நானூறுக்கும் மேலாக கமிஷனும் தற்போது 50000/ரூபா வரையில் ஏறிவிட்டது. அரசாங்கமும் கப்பல்தொழில் பழக்கும் ஏற்பாடுகளைச் செய்து ஆறுமாதப் பயிற்சி கொடுத்து அதற்கான சான்றிதழ்களும் கொடுக்கத் தொடங்கிவிட்டது. அரசாங்கப் பயிற்சிப் பள்ளிக்கூடங்களும் சனவிகிதாசாரப்படியே ஆட்களைத் தெரிவுசெய்வதில் தமிழ் மக்கள் அருகியே சேர்க்கப்படுகிறார்கள்

முகவர் நிலையங்கள் இவ்வாறாக பெரும் பணம் ஒரு வேலையும் செய்யாமல் தொழிலுக்குப் போகிறவர்களின் சம்பாத்தியத்தில் அரைப்பங்கிற்கு மேல் முக்கால் பங்களவில் தாங்களே கபளீகரம் செய்வது அரசாங்கத்திற்கு தெரிந்ததும் இம்முகவர் நிலையங்களைக் கட்டுப்படுத்தச் சட்டங்கள் கட்டளைகள் பிறப்பித்தார்கள். இக் கட்டளைக்கு அமைவாக ஐம்பதிற்குட்பட்ட முகவர் நிலையங்கள்

பதிவு செய்துகொண்டார்கள். மற்றும் முன்னூற்றிச் சொச்ச முகவர் நிலையங்களில் 40000/, 50000/ ரூபாய் கொடுத்து மாதக் கணக்காய் தொழிலுக்குப் போவதற்கு காத்துக்கொண்டிருக்கும் ஆயிரக்கணக்கானவர்களில் பெரும்பான்மையோர் தமிழ் மக்களே இவ் வகையாகக் கோடிக்கணக்கான பெருந்தொகைப் பணம் முகவர் நிலையங்களில் முடங்கி அவர்களுக்கு வட்டி சம்பாதித்துக் கொண்டிருக்கிறது.

இம் முகவர் நிலையங்களில் மிகப்பெரும்பாலானவை ஏமாற்றுப் பேர்வழிகளால் நடத்தப்பெறுகின்றது. பெரும்பாலான முகவர் நிலையங்கள் இருந்த இடம்தெரியாமல் மறைந்தும் விடுகின்றன. முகவர்களாகயுள்ளவர்களே கொழும்பை விட்டு மறைந்து போனுர்களேயானுல் திரும்பவும் அவர்களைக் கண்டுபிடிக்க முடியாது. அவர்களிடம் பெருந் தொகைகளைக் கொடுத்து ஏமாந்தவர்கள் அதோ கதிதான் சம்பாதித்துக் கொள்ளலாமென நம்பி நகைகளையோ காணிகளையோ விற்றுக் கொடுத்துவிட்டு, முழுமையும் ஏமாற்றப்பட்டு அழுது முடங்கித் துன்பப்படுவார்கள் கதியும் அதேகதிதான். சிலமுகவர்கள் இலங்கையிலிருந்து கப்பலேறுவது சுலபமல்ல வாருங்கள் சிங்கப்பூரிலும் பாகிஸ்தானிலும் கிறேக்க நாட்டிலும் கப்பலில் சேர்வது சுலபம் என கூட்டம் கூட்டமாய் பெரும் பணம் கொடுத்தவர்களை அழைத்துச் சென்று சிங்கப்பூரிலும்; இந்தியாவிலும், பாகிஸ்தானிலும் இவர்களை அம்போ என்று தவிக்கவிட்டு தாங்கள் தலைமறைவாகி விடவே கூட்டிச் செல்லப்பட்டவர்கள் பிறநாடுகளில் தவித்துக் கொண்டிருப்பவர்கள் ஒரு பக்கம் திரும்பி ஊர்வர மேலும் பணச்செலவு செய்து அவலப்படுவார்கள் வேருெரு பக்கம்.

சில முகவர்கள் நிலையங்கள் இரண்டு வருடச் சேவைக்கு கப்பல்களில் அனுப்புகிறேம் எனச் சொல்லி சில சந்தர்ப்பங்களில் மேலும் தொகைகளை வாங்கிக்கொண்டு கப்பலில் சேர்த்துவிட்டால் சில கப்பல்கள், தங்கள் ஒப்பந்த காலம் முடிந்துவிட்டதெனச் சொல்லி ஒரு மாதம் இரண்டு மாதத்திற்குள்ளாகவே அவர்களைத் திருப்பி அனுப்பிவிடுகிருர்கள். இவ்வகையில் பெரும் நட்டத்திற்குள்ளானவர்களும் உண்டு இவ்வாருக பல வகைகளிலும் வல்வைக் கடலோடி மக்கள் பெரும் நட்டங்களுக்கும் அதனுல் பெருந் துன்பத்திற்கும் உள்ளாகிக் கொண்டு வருகிருர்கள்.

## இன்று வல்வையின் நிலையை மொத்தமாகச் சொல்வதானல்

1. அரசாங்க வேலையில் சேர்வது மிக மிக அருகிவிட்டது.
2. தோட்டங்களிலே வயல்களிலே வேலை செய்யலாமென்ருல் முதலாவது வல்வை மக்களுக்கு நிலமே கிடையாது, இரண்டாவதாக இவைகளை வாங்கலாமென்ருல், விலை குதிரைவிலை ஆனை விலையாக உயர்ந்துவிட்டது. இதில் அவர்களுக்கு பழக்கமில்லை.
3. பிறநாட்டுக் கப்பல்களிற் சென்று பிழைக்கலாமென்ருல் அதுவும் காட்டப்பெற்ற காரணங்களினுல் பெரும் போட்டியும் பண நெருக்கடியும் சேர்ந்து இந்தத் தொழிலும் பெரும் பாதிப்பு ஏற்பட்டுவிட்டது. கிட்டத்தட்ட நின்றே போய்விட்டதெனலாம்.
4. அரபு நாடுகளில் வேலைக்குச் செல்லலாமென்ருலோ கடும் போட்டியும் விகிதாசார முறையும் பெருந் தடங்கல்களை உண்டாக்கி விட்டது.

இவைகளால் வல்வையின் இளவயதுள்ள பெரும்பாலோர் வேலையின்றியும் எதிர்காலமின்றியும் தெருக்களிலும் சந்திகளிலும் திண்டாட்டத்தில் அலைந்து கொண்டிருக்கிருர்கள்.

இப்போது வல்வையை சூழ்ந்திருக்கும் இருள் தற்காலிகமானது. ஒளி பிறக்கும், முன்னேறுவோம் என்ற நம்பிக்கையில் வாழ்வோமாக.

# 14. சில முக்கிய குறிப்புகள்

## 1

இயற்றமிழ்ப் போதகாசிரியர்:

## சங்கரப்பிள்ளை வயித்தியலிங்கம்பிள்ளை (1845—1900)

இவர் உடுப்பிட்டி சிவசம்புப் புலவரின் மாணுக்கர். பாரதி நிலைய முத்திராட்சரசாலையை நிறுவியதோடு, ஒரு பாடசாலையையும் நடாத்திஞர். தமிழ் நாட்டிற்குஞ் சென்று, சில நூல்களைப் பதிப்பித்து, அங்குங் கௌரவிக்கப்பெற்ருர்.

1876-77ல் சிந்தாமணி நிகண்டு இயற்றி வெளியிட்டார். 1878ல் நம்பியகப் பொருள் என்ற இலக்கண நூலுக்கு ஒரு விளக்க உரையெழுதி வெளியிட்டார். 1878ல் கந்தரலங்காரத்திற்கு உரையெழுதி வெளியிட்டார். கந்தபுராணம் அண்டகோசப் படலத்திற்கு கந்தரோடை வி. சுப்பிரமணிய ஐயர் எழுதிய உரையைத் திருத்தி வெளியிட்டார். கந்தபுராணம் தெய்வானையம்மை திருமணப் படலத்திற்கும், வள்ளியம்மை திருமணப் படலத்திற்கும், நல்ல சிறந்த ஆராய்ச்சி உரைகள் எழுதி வெளியிட்டார். கந்தபுராணம் சூரபன்மன் வதைப் படலத்திற்கும் உரையெழுதி வந்தார்கள்.

பேராசிரியர் கலாநிதி கா. சிவத்தம்பி அவர்கள் இவ்வுரைகளின் தன்மையை ஆராய்ந்து கூறியதாவது வள்ளியம்மை, தெய்வானையம்மை திருமணப் படலங்கட்கு, இவரது உரையினை நோக்கும்போது, இவரது ஆழ்ந்த இலக்கிய ஞானம் நன்கு புலனாகின்றன. சிறப்பாக வள்ளியம்மை திருமணப் படலத்திற்கான உரை, அகப்பொருள் மரபை நுண்ணியதாக உணர்ந்து எழுதப் பெற்றது தெரியவரும். நாட்டுச் சிறப்பிக் கூறும் முதற் பாடலுக்கான உரையே, உரைச் சிறப்பினையறிந்து கொள்வதற்கு வாய்ப்பான கோபுர வாயிலாக அமைந்துள்ளது. 122ம் பாடலான "நாற்றமும் தோற்றமும்" எனத் தொடங்கும் பாடலுக்கும் 164ம் பாடலான 'தாய் துயிலறிந்து' எனத் தொடங்கும் பாடலுக்கும் எழுதப்பெற்றிருக்கும் உரைகள் போதகாசிரியரது ஆழ்ந்த தமிழிலக்கிய அறிவுக்கான "பதச்சோறு" ஆக அமைந்துள்ளதெனலாம். நம்பியகப் பொருள் விளக்கவுரையும் இவராற் செய்யப்பட்டது என்பதை மணங்கொள்ளின் அகப்பொருள் மரபுபற்றி அவரிடத்திருந்த ஆழ்ந்த இலக்கியப் புலமை நன்கு தெரியவரும்.

பத்தொன்பதாம் நூற்றுண்டின் பிற்பகுதியிலே இலங்கை அரசாங்கம் கல்வி வளர்ச்சிக்கு ஒதுக்கிய தொகை சிறிதேயாகும். இந்தத் தொகையைக் கொண்டும் அரசாங்கம் நேரடியாய் ஈடுபடவில்லை. கிறீத்தவ உயர் பாதிரிமார்களிடமே கொடுத்ததில் பாதிரிமார் அங்கங்கெல்லாம் ஆரம்பப் பாடசாலைகளை ஏற்படுத்தி தங்கள் மதப்பிரசாரத்தை மும்முரமாக நடத்தத் தொடங்கினர்கள். புரட்டஸ்தாந்துப் பிரிவினருக்கும், நாவலரவர்களுக்கு மிடையில், கண்டனங்களும், மறுப்புகளும், மும்முரமாக நடந்தன. நம் போதகாசிரியர், கத்தோலிக்கருக்கு எதிராகவே, தம் கண்டனங்களைத் தொடர்ந்தார்கள். இவைகள் முடிவில்லாமல் சில ஆண்டுகள் நடந்தன.

இவை ஒருபுறமிருக்க, இவர் செய்த உரைகளின் சிறப்பைத் தாங்க முடியாதவர்கள், சாதிப் பகுப்பைக் கொண்டு இவரை எதிர்த்தார்கள். இதன் காரணமாக இவர் 'சாதி நிர்ணய புராணம்' என்ற நூலை இயற்றி வெளியிட்டார்கள். இன்னும் எவ்வளவோ எழுதலாம்.

போதகாசிரியர் அவர்கள் விஷேட தீட்சை பெற்ற ஆசார சீலராய், தமிழ் ஆசிரியராய், இலக்கியப் படைப்பாளராய், பத்திரிகையாளராய், பதிப்பாசிரியராய், உரை ஆசிரியராய், சமூக சீர்திருத்தவாதியாய் வாழ்ந்து இறைவனடி சேர்ந்தார்கள்.

**2**

திரு. மு. நவரத்தினசாமியவர்கள் வல்வெட்டித்துறையில் இருந்து, தமிழ்நாடு கோடிக்கரைக்கு நீந்திச் சென்று, கிட்டத் தட்ட 35 மைல் அகலமுள்ள பாக்குநீரிணையை நீந்திச் சென்ற தாகிய உலக சாதனையை 1954ல் செய்து முடித்தார். இவர் ஓர் அரசாங்க உத்தியோகத்தவராயிருந்தவர். இவருக்கு அப்போ வயது 45 ஆகும்.

**3**

ஆழிக்குமரன் ஆனந்தன் என்ற செல்வகுமார ஆனந்தன் 1963ல் தமது 19ம் வயதில் வல்வெட்டித்துறையிலிருந்து கோடிக் கரைக்கு நீந்திச் சென்று ஓர் உலகசாதனையை நிலை நாட்டினர். மேலும் 1975ல் தலைமன்னாரிலிருந்து கிட்டத்தட்ட 23 மைல் அகல முள்ள தனுக்கோடிக்கு நீந்திச் சென்று அங்கு தாமதியாமல் உடனே அவ்விடமிருந்து திரும்பி தலைமன்னாருக்கே நீந்திவந்த உலக சாதனையை நிறுவினர்.

இவர் வேறுசில உலக சாதனைகளை நாட்டினரென்றும் அவைகளெல்லாம் ''கின்னஸ்'' என்ற உலக சாதனைப் புத்தகத்தில் பதியப்பெற்றிருக்கின்றன என்றும் தெரியவருகிறது இவர் ஒரு பட்டதாரியும் சட்டத்தரணியுமாவர்.

**4**

செல்வி றங்கமணி விவேகானந்தன் பரதநாட்டியக் கலை யிலும் கூச்சுப்பிடி நடனக் கலையிலும் இன்னும் பலவிதமான ஐரோப்பிய அமெரிக்க நாட்டிய நடனக் கலைகளிலும் திறமைச் சித்தியெய்தியவர். இந் நுண்ணிய கலைகளில் இந்தியாவிலும் ஐரோப்பிய அமெரிக்க நாடுகளிலும் பெயரும் புகழும் பெற்றவர். ஜெர்மனியிலுள்ள **Bonu** நகரிலே நடைபெற்ற **International Bonu Festival of Dance**ல் கிழக்கு ஆசியாவால் தெரிவு செய்யப்பெற்று அந்த ஐந்து கண்டங்களிலிருந்தும் தெரிவுசெய்யப்பெற்று வந்த லளித கலையினரோடு சரிசமமாக நாட்டியம் நடனங்கள் ஆடி தனது தனித்தன்மையை நிறுவியவர் இவர் ஆழிக்குமரனின் சகோதரியாவார்.

5

சங்கீத கதாப்பிரசங்கி திரு இராசாங்கம் சிவஅன்பு இவர் வல்வை சிதம்பராக் கல்லூரியில் படிக்கும் காலத்தில் திருமுருக கிருபானந்தவாரியார் அவர்கள் சிவன்கோயில் திருவிழாக்களில் தொடர்ச்சியாகச் சங்கீத கதாப்பிரசங்கங்கள் நடத்தி வந்தார்கள். கடவுள் அருளாலும் சிவஅன்பு அவர்களின் மனோ திடத்தாலும் இவர்கள் திருமுருக கிருபானந்தவாரியார் அவர்களின் பாணியிலே காளைப் பருவத்திலேயே பிரசங்கம் செய்யத் தொடங்கினார்கள். பின்னால் பல புராணக் கதைகளையும், இவைகளை நூதன பாணியிலே சொல்லும் முறைகளையும் விதங்களையும் தாமாகவே கற்றுக் கொண்டார்கள். தம்முடைய சங்கீத ஞானத்தையும் நன்கு வளர்த்துக் கொண்டார்கள். பொது ஜனரஞ்சகமான மிகவும் சரளமான தமிழில் நகைச்சுவையையும் இடையிடையே அள்ளிவீசிப் பேசவும் தம்மை நன்கு பயிற்றிக் கொண்டார்கள்.

இன்றைக்கு இலங்கையெங்கணும் சங்கீத கதாப்பிரசங்கம் செய்வதில் ஈடும் எடுப்பும் இல்லாதவராக திகழ்ந்து வருகிறார்கள். இவர் அரசாங்க சுகாதார இலாகாவில் ஒரு உதவி வைத்திய அதிகாரியாகப் பணியாற்றி வருகிறார்கள்.

6

வல்வை துரைராசா யோகாத்தினராசா அவர்கள் கை, கால்கள் கட்டுப்பட்டவண்ணம் வல்வை ரேகுத் துறைமுகத்தில் 200 யார் தூரத்தில் கடலில் 20 அடி ஆழமுள்ள இடத்தில் 28—3—1980ம் திகதி மாலை 4-46 தொடக்கம் 31—3—80 அதிகாலை 2-15 வரை மொத்தம் 57 மணித்தியாலங்கள் 27 நிமிடங்கள் முகம் தெரியக் கூடிய விதமாய் கடலில் மிதந்து கிடந்து ஒரு உலக சாதனையை நிலைநாட்டினார். அப்போது இவருக்கு வயது 36

7

வல்வையார் புதுவிதமான தொழில்களில் ஈடுபடும் நோக்கங் கொண்டவர்கள். ஒரே குடும்பத்தில் இருந்து மூன்று ஆண் பிள்ளைகள் தொடங்கிய தொழில்களாவன செல்த்துரைத் தண்டையலின் மூத்த மகன் திரு. தங்கவடிவேலு அவர்கள் இங்கிலாந்திலிருந்து ஒரு மீன்பிடிக் கப்பலாகிய "M. V. Howesloft Lady" என்ற கப்பலை வாங்கி கொழும்புக் - கொண்டுவந்து தொழில் நடத்தினார் இரண்டாவது மகன் திரு. குமரகுரு அவர்கள் தனியாகவே ஓர் ஐஸ்கட்டித் தொழிற்சாலையை ஊரிலேயே அமைத்தார் மூன்றாவது மகன் திரு. யோககுரு அவர்கள் வல்வைக் கொத்தியால் வானிலே மரத்தினால் ஒரு மீன்பிடிக்கப்பல் கட்டித் தொழில் தொடங்கினார்.

இந்தத் தொழில்களின் நுட்பங்களும் நெளிவு சுளிவுகளும் தெரியாதவர்களை வைத்து இவைகளை நடத்தியதில் விருத்தியடையவில்லை. நட்டப்பட நேர்ந்தது.

## 'அன்னபூரணியம்மாள்' அமெரிக்கா சென்ற கதை

அன்னபூரணியம்மாள் வல்வெட்டித்துறையில் சுந்தர மேத்திரியார் அவர்களால் 1930-ம் ஆண்டு கட்டப்பெற்றது-இக்கப்பல் இந்தியாவின் இரு கரையோரப் பட்டினங்களுடன் வியாபாரஞ் செய்து வரலாயிற்று. பர்மாவின் அரக்கன் மாகாணத்திலுள்ள "அக்கியாப்" என்ற பட்டணத்திற்கும் ஆண்டுதோறும் போய் நெல், அரிசி வியாபாரமும் செய்து வந்தது.

இவ்வகையாக அக்கியாப்பிலிருந்து பல யாழ்ப்பாணக் கப்பல்கள் இலங்கை நோக்கி வரும்போது உலகத்தை ஒரு சின்ன வள்ளத்தில் உல்லாசப் பிரயாணத்தை மேற்கொண்டு வந்த திரு. றெபின்சன் என்ற அமெரிக்க செல்வப் பிரபு பார்க்க நேர்ந்தது. இக்கப்பல்கள் யாவும் காற்றின் உதவியை மட்டுமே கொண்டு மிக லாவகமாகவும் அழகாகவும் பிரயாணஞ் செய்ததைக் கவனித்த அப் பிரபு தன்தேசம் போய்ச் சேர்ந்தவுடன், இவ்வகையான ஒரு கப்பலை அமெரிக்கா கொண்டு சென்றால் அது ஒரு காட்சிப் பொருளாகவும் நூதனமாகவும் இருக்குமெனமனங்கொண்டார்.

அவர் இலங்கைக்கு திரும்பி வந்து அன்னபூரணியம்மாளை விலைக்கு வாங்கி, கொழும்பு உவாக்கர் அன்சன்ஸ் கம்பனிமூலம் ஒரு வெள்ளைக்கார குடும்பம் வசிக்கக்கூடிய விதமாக நவீனமுறை அடைப்புகள், அறைகள், குளியல் அறைகள் முதலியவைகளை நன்கு அமைப்பித்தார்கள்.

அப்பால் இக் கப்பலை அமெரிக்காவிற்கு பாய்கள் மூலம் செலுத்திச் செல்லக்கூடியவர்களாகிய வல்வை வாசிகளையே சேர்த்துக் கொண்டார்கள். இவ்வண்ணம் சேர்ந்தவர்கள் (1) க. தம்பிப்பிள்ளை (**Master**) (2) தா. சபாரத்தினம் (**Mate No-1**) (3) ஐ. இரத்தினம் (**Mate No-2**) (4 & 5) சி. சிதம்பரப்பிள்ளை, பூ. சுப்பிரமணியம் (**Sailors**)

கப்பலின் பெயரும் அச்செல்வந்தரின் மனைவி பெயரான "**Florence C. Robinson**" என மாற்றப்பெற்றது. மேலும் **Aden** வரை செல்லக்கூடிய என்னும் இரண்டு **Sailors** ஐயும் சேர்த்துக் கொண்டு அமெரிக்காவிற்கு 3-3-1937 ல் புறப்பட்டது.

மேலே குறிப்பிட்ட ஐவரும் இன்னும் இருவரைச் சேர்த்துக் கொண்டு மத்தியதரைக் கடல் ஜிபிரேல்ரர் ( **Gibraltor** ) ஊடாக அத்லாண்டிக் சமுத்திரத்தைக் கடந்து அமெரிக்கா வடகோடியி லுள்ள மசாச்சுசெற்ஸ் மகாணத்திலுள்ள குளோசெஸ்டர் பட்டிணத்திற்கு (**Gloucester Massasusetts State in U. S. A.**) 31-8-1938ல் போய்ச் சேர்ந்தார்கள்.

அங்கு இவர்களுக்கு பெரும் வரவேற்புகள் நடந்தன. அப்பால் சிலமாதங்கள் அவடம் தங்கியிருந்து விட்டு 3-1-1939 கொழும்பு வந்து சேர்ந்தார்கள். அன்னபூரணியம்மாள் அமெரிக்கா சென்றதைப்பற்றியும் வல்வைவாசிகளான இக்கப்பலோட்டிகளைப் பற்றியும் இலங்கைப் பத்திரிகைகளும் மிகவும் சிலாகித்து கட்டுரை எழுதினர்கள்.

இதன் மேல் விபரங்களை வல்வை சேவா சங்கத்தினரால் பிரசுரிக்கப்பெற்ற **Re Opening of a North Ceylon Port** என்ற ஆங்கிலக் கையேட்டில் கண்டுகொள்க.

இக் கப்பலோட்டிகளில் தா. சபாரத்தினம் ஜ இரத்தினசாமி பூ. சுப்பிரமணியம் ஆகிய மூவரும் சீவந்தர்களாயிருக்கிருர்கள்.

## வல்வை "இந்திரவிழா ஊரெடுத்த காதை"

வல்வை முத்துமாரியம்மன் கோவிலில் திருவிழா தொடங்கி விட்டால் வல்வெட்டித்துறை முழுமையும் திருவிழாக்கோலம் பூண்டுவிடும். ஊரிலுள்ள சகல தெருக்களுமே கூட்டித் துப்பரவு செய்து தண்ணீர் தெளித்து அழகாக்கப்பட்டுவிடும். ஏன் வீடுகள் யாவையுமே அழகுக்கோலம் பூண்டுவிடும் ஊரிலுள்ள சின்னஞ் சிறிசுகள் வயோதிபர் உடம்புச்சுகம் குறைந்தவர்களைத் தவிர, மற்ருேர் எல்லாருமே விரதமிருப்பார்கள். ஒருநேரம் உண்ணுபவர் கள் அம்பாள் பகல் திருவிழா முடிந்த பின்பே விரதத்தை முடிப் பார்கள். ஆகக் குறைந்தபட்சம் மச்சம் மாமிச உணவை நீக்கி விடுவரர்கள். இப்போ சில காலமாக பகல் திருவிழாவில் விபூதி தீர்த்தம் சந்தனகுங்குமம் மலர்கள் பிரசாதத்துடன் சித்திரான்ன வகைகளாகிய தயிர்ச்சாதம், வெண்சாதம், புளிச்சாதம், சர்க்கரைச் சாதம் முதலியவைகளும் விநியோகப்படுகின்றன. இவைகளை விட அன்னதானங்களும் நடந்து வருகின்றன.

முத்துமாரியம்மை எங்கள் காவற்தெய்வம், ஊர்த்தேவதை இங்கு குடிவந்த காலந்தொட்டு இவ்வூருக்கு வரும் இடர்கள் யாவற்றையும் களைந்து ஊரை வளர்த்து செழிக்கச்செய்து பரிபாலித்து வருகிறார்கள். ஊர்வளர வளர கோவிலும் சிறப்புற்று வருகின்றது.

அம்மையின் பெருந்திருவிழாவும் வசந்தகாலத்திலே நடந்து சித்திரைமாத முழுமதி நாளன்று முடிவுறுகிறது பத்தொன்பதாம் நூற்றாண்டு நடுப்பகுதியிலிருந்து அம்மன்கோவில் தீர்த்தத் திருவிழா பிராபல்யம் அடைந்துவிட்டது.

வங்காள விரிகுடாவின் வடகிழக்குப் பகுதியாகிய சட்டிகாமம் அரக்கன் பகுதியில் வடகிழக்குப் பெயர்ச்சிக்காற்று **(North East Monsoon)** தொடங்கும் காலமாகிய ஐப்பசிப் பிற்பகுதி, கார்த்திகை, மார்கழி முற்பகுதிக் காலங்களில் பெருஞ் சூறுவளிகள் ஏற்படும். இச் சூறுவளிகள் பாய்க் கப்பல்களுக்கு பெரும் அபாயங்களை ஏற்படுத்தும்.

இவைகளையெல்லாம் கடந்து இரண்டு அரக்கன் **( Trips )** சவர்களையும் முடித்துக்கொண்டு சித்திரை வருடப்பிறப்பை அண்ணிவரும் வல்வைக் கடலோடிகள் சித்திரை முழுமதி அம்மன் தீர்த்தத்தை பக்திசிரத்தையுடன் விமரிசையாகக் கொண்டாடுவார்கள். பலர் அம்மன் நேர்த்தியை முடித்து கரகங்கள் எடுப்பார்கள் மாலை 7, 8 மணியளவில் கரகத்தை எடுத்தால் அம்பாள் அம்மன் கோவில்சேரும் நேரமாகிய அதிகாலை 3, 4 மணியளவில் அம்பாள் விமானத்தைத் தொடர்ந்தே இக் கரகங்கள் எடுத்தாடும் வழக்கம் தலைமுறை தலைமுறையாகவே நூற்றாண்டு நூற்றாண்டாய் நடந்து வருகிறது.

அரக்கன் சவர்கள் மறைந்து வல்வையார் வேறு தொழில்களைப் பார்க்கும்போது இப்போ சிலபல ஆண்டுகளாக இக்கரகத் தீர்த்தத் திருவிழா, இந்திரவிழாவென்றும் வசந்தத் திருவிழாவென்றும் பரிணமித்து முத்துமாரியம்மையின் தீர்த்தத் திருவிழாவோடு சம்பந்தப்பட்டு பெருங் கொண்டாட்டத் திருவிழாவாக நடைபெற்று வருகிறது.

தீர்த்தத் தினத்தன்று காலையில் ஒரு விமானத்தில் அம்பாள் முன்னும் மூத்த பிள்ளையாரும் இளைய பிள்ளையாரும் பின்னுமாக கோவிலிலிருந்து புறப்பட்டு நெடியகாடு மோர்மடத்தில் சிறிது நேரம் தங்கியபின் நேரே தீர்த்தக் கடற்கரைக்கு செல்வார்கள். அங்கு அம்பாள் சமுத்திர தீர்த்தம் அத்திரதேவிமூலம் ஆடியபின் தங்கு மண்டபத்தில் தங்கியிருந்து பக்தகோடிகளுக்கு அருள் பாலிப்பார்கள். கடலில் வல்வையிலுள்ள சகல கட்டுமரங்களும் வள்ளங்களும் கூடி கடல் விளையாட்டுகள் நடந்து கொண்டிருக்கும். சிறிதும் பெரிதுமாக பல புகைக்கூண்டுகள் ஆகாயத்தில் பறக்கவிடுவார்கள் இப்புகைக்கூண்டுகள் புத்தூர் ஆவரங்கால் வரையில் பறந்து செல்லும். இப் புகைக்கூண்டு பறக்கவிடுதல் யாழ்ப்பாணக் குடாநாட்டிலோ மற்றும் இலங்கையில் எவ்விடத்திலோ நிகழ்வதில்லை 11 மணியளவில் சுவாமிகள் திரும்பிவந்து நெடியகாட்டுப் பிள்ளையார் கோவிலில் தங்கும்.

மாலை 8 மணியளவில் சுவாமிகளுக்குப் பூசைகள் முடிந்து பிரசாதம் வழங்கியபின் அம்பாள் வர்ண மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பெற்ற விமானத்தில் எழுந்தருளிவந்து அலங்காரஞ் செய்யப்பெற்ற பந்தர்க்கீழ் தங்குவார்கள். பிள்ளையார் முருகையாவும் சற்றே சிறிய விமானத்தில் எழுந்தருளிவந்து பந்தர்க்கீழ் தங்குவார்கள். பந்தர்க்கும் மோர் மடத்துக்கும் இடைத்தூரம் போதியளவானது.

இப்போ தொடக்கம் மோர்மட முன்றலில் கச்சேரிகளும் கேளிக்கைகளும் தொடங்கிவிடும் முதன்முதலாக நாதசுரக் கச்சேரிகளும் ஆரம்பமாகும் அப்பால் பாட்டுக் கச்சேரிகள் வில்லுப்பாட்டுகள், விகடக் கச்சேரிகள், பரதநாட்டியக் கச்சேரிகள் முதலாயின ஒவ்வொரு மணித்தியாலம் மாறி மாறி நடந்து கொண்டேயிருக்கும். பேர்பெற்ற பல பாட்டுக் கச்சேரிக் குழுக்களும் நடனக் கச்சேரிக் குழுக்கள் சேர்ந்து இசைவெள்ளத்தில் பக்தர்களை மூழ்கடித்துக்கொண்டேயிருக்கும். இடையில் எல்லாம் புகைக்கூண்டுகள் சிறிதும் பெரிதுமாக பல வர்ணங்களில் பறக்க விட்டுக்கொண்டேயிருப்பார்கள். முன்னெல்லாம் பலவித வாணங்கள் கொழுத்திக்கொண்டேயிருப்பார்கள் அவிட்டுகள் பூம்பொலிவு ஆகாய வாணங்கள், எலி வாணங்கள், குருவி வாணங்கள் இடையீடில்லாமல் கொழுத்திக்கொண்டேயிருப்பார்

கள் பக்கத்திலேயுள்ள குளத்தில் இயந்திர சாதனங்களைப் பொருத்தி சுழன்றும் சீறியும் தண்ணீருக்குள் வர்ண ஜாலங்களைக் காட்டிக்கொண்டேயிருக்கும். இதற்கிடையில் கரக ஆட்டங்கள் பழனிக் கரக ஆட்டங்கள் நெருப்புக் காவடிகள் ஒருபுறம் நடந்து கொண்டேயிருக்கும்.

நெடியகாடு தொடங்கி சிதம்பராக் கல்லூரிவரை கிட்டத் தட்ட ஒருகட்டைக்கு மேல். எத்தனை அலங்கார வளைவுகள். சித்திர வளைவுகள். வெளிச்சவீடு வளைவுகள் தெருச் சந்திகளி லெல்லாம் நிறைந்திருக்கும். தெருச் சந்திகளிலெல்லாம் பாட்டுக் கச்சேரிகளும் வீடியோ படக்காட்சிகள் வர்ணத் தொலைக்காட்சிகள் ஆங்காங்கே நடந்துகொண்டிருக்கும் பல நாடுகளிலிருந்து கொண்டுவந்த பல்பொருட்காட்சிகள், பல்சுவைக் காட்சிகள் இடையிடையே நடந்துகொண்டேயிருக்கும். மெத்தைப் பந்தல் கள் வேறு தெருவெல்லாம் குலைவாழைகள் வர்ண மின் விளக்கு கள் பெரும் மூங்கில்களில் வர்ண விளக்கு ஜாலங்கள் பிள்ளையார் கோவிலிலிருந்து அம்மன் கோவில்வரை இடையீறின்றி நிறைந் திருக்கும்

தெருவெல்லாம் போவோரும் வருவோரும் நிறைந்திருப் பார்கள் இப் பல்லாயிரக்கணக்கான பார்வையாளர்கள் களைப்புரு வண்ணம் பல விடங்களில் சுடச்சுட தேனீர் வழங்குவாரும் கோப்பி வழங்குவாரும் நெஸ்கபே வழங்குவாரும் சோர்வில்லாது கொடுத்துக்கொண்டேயிருப்பார்கள் ஊரெங்கணும் சந்தனமும் பன்னீரும் பரிமளித்துக்கொண்டேயிருக்கும் காலமோ மல்லிகைப் பூக்காலம் ஆகவே எங்கணும் மல்லிகை வாசனை பரிமளித்துக் கொண்டேயிருக்கும்

இனி இப்பெருவிழாவில் பங்குகொள்பவர்களின் உடையலங் காரங்கள் சொல்லில் அடங்கா. தமிழ்ப் பெண்மணிகளின் மோடி கள் வண்ண வண்ணச் சேலைகள், வண்ண வண்ண நிறங்கள் பட்டுகள் பருத்திகள் நூதனமான புதுப்பாணியில் புதுப் புது விதமான நூல் வகைகளால் நெய்யப்பெற்றவை. எத்தனை நூதன மான கொண்டையலங்காரங்கள் இளங் கன்னியர்களின் விதம் விதமான சட்டைகள். பாவாடைகள், தாவணிகள் கண்கொள்ளாக் காட்சி ஜாலங்கள் ஆண்கள் காளையர்கள் உடைகள் வேட்டிகள்

சட்டைகள் எவ்வகையிலும் பெண்மணிகளின் அலங்காரங்களுக்கு ஈடுகொடுக்கக் கூடியவை. காண்பவைகளெல்லாம் இன்பம் கேட்பவைகளெல்லாம் இன்பம், மோப்பவைகளெல்லாம் இன்பம், நுகர்பவைகளெல்லாம் இன்பம் பிள்ளையார் கோவிலிலிருந்து அம்மன் கோவில் வரையுள்ள கிட்டத்தட்ட முக்கால்கட்டை தூர வீதிகள் நெருங்கி நிறைந்த மக்கள்வெள்ளம் கண்கொள்ளாக் காட்சி கண்கொள்ளாக்காட்சி

அதிகாலை இரண்டு மணியளவில் சுவாமிகள் புறப்பட்டால் வீதிகளிலெல்லாம் நிறைகுடங்கள் பட்டுகள் சாத்தி அர்ச்சனைகள் நடைபெறும். அநேகமான இடங்களில் சிதறு தேங்காய்கள் அர்ச்சனைகள் ஒவ்வொரு வீதி முனையிலும் அவ் வீதியில் உள்ள குடும்பங்கள் நிறைகுடங்கள் வைத்திருப்பார்கள். பாக்கு வெற்றிலை விநியோகங்கள் கடலை விநியோகங்கள் இவ் வீதிகளெல்லாம் தாமதித்து சுவாமி செல்வதால் அம்பாள் கோவிலை அடைய நாலு மணிக்குமேல் செல்லும் அதுவரை நாதசுரக் கச்சேரிகளும் கரக ஆட்டங்களும் நடைபெற்றுக்கொண்டே யிருக்கும்.

இவ்வாறுக பக்திசிரத்தையுடன் அம்பாளின் தீர்த்தோற்சவத் திருவிழாவும் அதோடு சம்பந்தப்பட்ட வல்வை நகரின் வசந்த விழாவாகிய இந்திர விழாவும் முடிவுபெறும்.

# 15. வல்வையின் வருங்காலத்திற்கான சில யோசனைகள்.

வல்வை மக்கள் நூற்றாண்டு நூற்றாண்டாய் கடலையே நம்பி வாழ்ந்தவர்கள். ஒரு பகுதியார் கடற்தொழிலைச் செய்தார்கள். இன்னொரு பகுதியார் கடல் வாணிபத்தைச் செய்தார்கள். 19-ம் நூற்றாண்டு பிற்பகுதியிலும் 20-ம் நூற்றாண்டு முற்பகுதியிலும் கடல் வாணிபஞ் செய்தவர்கள் கடல் கடந்த வாணிபத்தையும் மேற்கொண்டு செல்வநிலையில் வளர்ந்தார்கள். இரண்டாம் உலகமகாயுத்தத்தின் பின்பு, பெரும் மாற்றங்கள் ஏற்பட்டு, கடற்தொழில் செய்பவர்களும் செல்வத்தில் செழித்தார்கள்.

ஆங்கிலக் கல்வி வளர்ந்தது 1935—1960ம் ஆண்டுகளில் ஒரு பகுதியினர்கள் அரசாங்க உத்தியோகங்களில் சேர்ந்தார்கள். 1960-ம் ஆண்டுக்குப் பின் விகிதாசாரமுறை வந்து, அநேகமாக உத்தியோகங்கள் கிடைப்பது அபூர்வமாகிவிட்டது. அப்பால் கப்பல்களிற் சென்றும் வெளிநாடுகளுக்குச் சென்றும் சிலர் சம்பாதிக்கத் தொடங்கினார்கள். அவ்வழிகளும் இப்போ அடைபட்டுவிட்டன.

சிலர் போதைப் பொருட்கள் வியாபாரஞ் செய்தார்கள். பொலிசிற்குப் பயந்தும் ரேவு உத்தியோகத்தர்களுக்குப் பயந்தும் கலால் உத்தியோகத்தர்களுக்குப் பயந்தும், படைவீரர்களுக்குப் பயந்தும், ஒளித்து மறைந்து, இவர்களிற் பலவகையினருக்குக் கொடுத்ததிலும், பாக்குநீரிணைக் கடலுக்குக் கொடுத்ததிலும், வியாபாரத்தில் ஏமாற்றப்பட்டதிலும், அபராதங்கள் கட்டியதில் பெரும்பகுதியை இழந்துவிட்டு பாவத்தையும் நோயையும் நொடியையும் ஏற்றுக்கொண்டு அவலப்பட்டார்கள்.

இன்றைய நிலையில் அநேகமாக எல்லாவழிகளும் அடைபட்டுவிட்டன. வல்வையாருக்கு மிஞ்சியுள்ளது எங்களை வளர்த்த கடலும் எங்கள் விடாமுயற்சியும், ஊக்கமுமே. இனிமேல் வல்வை மக்கள் இவைகளையே மூலதனமாக வைத்து எம் வாழ்வை வளம் பெறச் செய்யவேண்டும் என் எண்ணத்தில் தோன்றிய சிலவழிகளைக் கூறவிரும்புகிறேன்

அவையாவன:

(1) வத்தைகள் கட்டுதல்
(2) கட்டிநீர் வாடியமைத்தல்
(3) மீன் பதனிடல்
(4) மீன் இறால் வளர்த்தல்
(5) சிறு கப்பல்கள் கட்டல்
(6) கைத்தறி நெசவாலைகள் அமைத்தல்
(7) குடிசைக் கைத்தொழில்கள்
(8) கோழிப்பண்ணை வைத்தல்
(9) வள்ளங்கள் கப்பல்கள்மூலம் இந்தியத்தொடர்பு
(10) பெரிய கப்பல்கள் கட்டுதல்

## (1) வத்தைகள் கட்டுதல்

எண்ணெய்வள நாடுகள் விலையை ஏற்றிக்கொண்டே போகின்றன கடந்த பத்து ஆண்டுகளுக்கு முன்னிருந்த நிலையிலும் பார்க்க இன்றைய விலை எட்டுமடங்காகிவிட்டது. இதே விதமாக விலை ஏறிக்கொண்டு போனால் இந்நூற்றாண்டு முடிவில் எண்ணெய்விலை எவ்வளவாகும் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவும். அப்போ கிளிநொச்சி, மாங்குளம் முல்லைத்தீவுப் பகுதிகளுக்குப்போய் வைக்கோல் தானியங்கள் முதலியன ஏற்றிவர லொறிகளுக்குக் கட்டுப்படியாகாது 30, 40 ஆண்டுகளுக்கு முன் எவ்விதமாகக் கிழக்குக் கரையோரப் பகுதியெல்லாம் வத்தைகள் போய் சாமான்களைக்கொண்டு வந்ததுபோல், வத்தைகள்தான் பயன்படும் ஆகவே வத்தைகளை இப்போதிருந்தே கட்டிக்கொள்ள வேண்டும் நீராவிக் கப்பல்களிலிருந்து சாமான்களை ஏற்றி இறக்கிக் கொள்ளவும் இவ் வத்தைகள் பயன்படும்.

## (2) கட்டிநீர் (ஐஸ்) வாடியமைத்தல்

தொண்டைமானாற்றில் ஒன்றும் பொலிகண்டியில் ஒன்றுமாக, இரண்டு கட்டிநீர் வாடிகள் அமைக்கலாம். இவைகள் சிறு கடைக்காரர்களுக்கும் மீன்பிடிகாரருக்கும் பயன்படும்.

## (3) மீன் பதனிடல்

இப்போ நடைமுறையில் இருக்கும் வழக்கம் யாதெனில் பிடிக்கும் மீன் எல்லாவற்றையும் பெட்டிபோட்டு கொழும்பிற்கு அனுப்பிவிட்டு, அவ்வூர் வியாபாரிகள் விலைபோட்டனுப்பும் பணத்தை எதிர்பார்த்து நிற்கிறோம் இனிமேல் இம் மீன்லொறிகள் கொழும்பிற்குப் போய்சேருவது ஒரு கண்டம். பிடிக்கிற மீனை நாமே பக்குவப்படுத்தி சந்தைப்படுத்திவதில் கொள்ளைக் கூட்டத்தினரிடமிருந்து தப்புவதுமல்லாமல் கூடிய இலாபமும் அடையலாம்.

### (4) மீன் இறால் வளர்த்தல்

முன்பெல்லாம் வல்வைக் கடல் வட்டி வட்டியாய் பிரிக்கப் பெற்று இந்த இந்தப் பகுதியாருக்கு இந்த இந்த வட்டியென்ற நியதி இருந்தது. அந்த வழக்கத்தை இப்போ நடைமுறைக்குக் கொண்டுவரலாம். அது மட்டுமன்றி எங்கெங்கெல்லாம் மீன் கூட்டங்களை, இறால்களை வளர்க்கலாமென்பதை யறிந்து அவ் வண்ணம் வளர்க்கலாம். இதற்கான தொழில் நுட்பப் பயிற்சியை அறிந்தவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

### (5) சிறு கப்பல்கள் கட்டுதல்

முற்காலங்களில் வாணிபஞ் செய்தது போன்று மலையாளம், தமிழ்நாடு கரையோரப் பட்டினங்களுடனும் வட மாகாணம், கீழ்மாகாணம் பட்டினங்களுடனும், வாணிபஞ் செய்ய லாம். எங்கள் கடலோடிகளின் பழக்கவழக்கங்களும், மறந்து போகாமலுமிருக்கும்.

### (6) கைத்தறி நெசவாலையமைத்தல்

வீட்டுப் பாவிப்பிற்கான உடைகள் துணிமணிகளை உள் ளூரிலேயே, ஒரு கைத்தறி நெசவாலையை ஏற்படுத்தி நெய்து கொள்ளலாம். வல்வையிலுள்ள அநேகம் பெண்மணிகளும் யுவதி களும் இதில் சேர்ந்து, நல்ல வருமானத்தையும் பெறலாம். எக் காலமும் பகட்டு உடைகளை வாங்க வருமானமும் குறையைக் கூடுமல்லவா? அல்லாமலும் இப்போ கைத்தறி நெசவும் மிகவும் திருந்திவிட்டதல்லவா?

### (7) குடிசைக் கைத்தொழில்கள்

(அ) ஊறுகாய் போடுதல்: இந்தவகையில் எலுமிச்சங்காய் ஊறு காய் என்பது மட்டுமல்ல, மாங்காய், மிளகாய், கத்தரிக்காய், நெல்லிக்காய், பலவகை அவரைக்காய்கள், இன்னும் பல பொருட் களைப் பயன்படுத்தக்கூடும்.

(ஆ) அப்பளம், வடகங்கள், வறுவல் முதலியன செய்தல்

(இ) திடீர் ரசம், திடீர் சாம்பாறு, திடீர் தோசை, திடீர் வடை முதலியன செய்தல்

(ஈ) மாம்பழம், தக்காளிப்பழம், மாதுளம்பழம், விளாம்பழம், முந்திரிகைப்பழம் முதலியவற்றில் கட்டிப் பழச்சாறு செய்தல்.

(உ) கர்ப்பூரம், ஊதுவத்தி முதலியன செய்தல்.

(ஊ) வல்வையின் பெயர்பெற்ற பிண்ணுக்குப் பாகு முதலியன செய்தல்.

### (8) கோழிப்பண்ணை வைத்தல்

இது ஒன்று மாத்திரம் இப்பவும் நடக்கிறது. இதைப் பரவலாக்கி விருத்தியும் செய்தல் வேண்டும்.

### (9) கப்பற் தொழில்

தற்போது தலைமன்னருக்கும் இராமேச்சரத்திற்கும் இடையில் ஓடிக்கொண்டிருக்கும் க்ப்பற் சேவைபோல், காங்கேசன் துறைக்கும் நாகபட்டினத்திற்கும் இடையில் ஒரு கப்பற் சேவை நடத்தப்போகும் பேச்சுக்கள் அடிபட்டுக் கொண்டிருக்கின்றன. வல்வையார் முழுமையுமே கடலோடிகள். இதை மனதிற்கொண்டு இச் சேவையில் ஆள் சேர்க்கும்போது வல்வையாரையும் விகிதார முறையில், சேர்க்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். காலக்கிரமத்தில் வல்வையிலிருந்தும் இந்திய கரையோரப் பட்டினங்களுக்கு வள்ளங்கள் வத்தைகள் மூலம் போக்குவரவு செய்ய வழி வகுக்கப்பட வேண்டும்.

முக்கியமாக இலங்கை அரசினுல் பல இடங்களுக்கும் நடத்தப்பெறும் நீராவிக்கப்பற் சேவையில் வல்வையார் போதியளவு சேர்க்கப்பெறுகிறுர்களா என்பதைக் கவனித்து கடலோடிகளின் விகிதாசாரமுறையில் வல்வையாரை சேர்க்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும்.

### (10) பெரிய கப்பல்கள் கட்டுதல்

இங்கே நான் ஒரு கனவு காண்கிறேன். இக் கனவு இரண்டு காரணங்கள் என் சிந்தையை நிறைத்திருப்பதால் ஏற்பட்டிருக்கலாம். ஒன்று அயராத பெருமுயற்சி, இரண்டாவது உலக மகாயுத்தம் 1945ம் ஆண்டில் முடிவடைந்தபோது கிழக்கே ஜப்பானும் மேற்கே ஜேர்மனியும் பெரும் அழிவுகளுக்குள்ளாகியிருந்தன. அந்த இருநாட்டு மக்களின் பெருமுயற்சியும் தங்கள் நாடு விரைவில் முன்னேற வேண்டுமென்ற உந்தலாலும் பத்தாண்டுகளுக்குள் முன்னேற்றமடைந்து, மேலும் தொடர்ந்த தளராத

முயற்சியால் இன்று வெகு முன்னேற்றமடைந்த நாடுகளின் முன்னணியில் நிற்கின்றன. இரண்டாவது காரணம் சிறந்த நேர்மையான கூட்டுறவு நிலவுவதால் சிறிய தேசங்களாகிய டென்மார்க், ஒல்லாந்து முதலிய தேசங்கள் பணம் பொருள் பண்டங்கள் நிறைந்த முன்னணி நாடுகளாயிருக்கின்றன. தைவான் தென்கொறியா நாடுகளும் கடின உழைப்பால் முன்னணியில் நிற்கின்றன. இத்தனையூண்டு சிறியநாடாகிய சிங்கப்பூர் மிகச் சிறந்த உதாரணம்

நம் வளர்ச்சிக்கு அரசாங்கத்தையோ, அல்லது பாராளுமன்ற உறுப்பினர்களையோ, அல்லது மற்றும் எவரையோ நம்பியிருக்கக் கூடாது வல்வை மக்கள் ஒவ்வொருவரும் முக்கியமாக ஒவ்வொரு இளைஞனும் ஒவ்வொரு யுவதியும் வல்வையின் வளர்ச்சி தன்னிலேயே தங்கியிருக்கின்றது என்ற எண்ணங்கொண்டு நாள் முழுமையும் அயராது உழைக்க வேண்டும். இவ்வாறாக இரவும் பகலும் ஏதாவது ஒரு தொழிலில் ஈடுபட்டு கடின உழைப்பை மேற்கொண்டால் வல்வைக்குக் கட்டாயம் விடிவுண்டு. பொருளாதாரம் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாய் செழித்து வளரும்

# 16. முடிவுரை.

இக் கையேடு வல்வெட்டித்துறை பற்றியேயுள்ளதாகையால், பட்டினசபை நகரசபையானபோது சேர்க்கப்பெற்ற பொலிகண்டி, மயிலியதனை, தொண்டைமானாறு முதலிய குறிச்சிகளைப்பற்றி எழுதப்பெறவில்லை. இருந்தும் வல்வை எல்லையின் கிழக்கேயுள்ள ஆறுமுகசுவாமி எழுந்தருளியிருக்கும் பெருமையையும் மேற்கே எழுந்தருளியிருக்கும் செல்வச்சந்நிதி வேலைப் பற்றியும் மனமொழி மெய்களால் பாடிப்பராவி பணிந்துவந்தித்து வாழ்த்தி வணங்கி முடிவுறுகிறது.

❋

# பின்னுரை

"வல்வெட்டித்துறை ஊரின்னிசை" என்ற இந்நால் எழுதி முடிந்து ஓராண்டு மேலாகிவிட்டது. சில பகுதிகளைச் சுருக்கி மாற்றியபின் அச்சிற் பதிப்பிக்கக் கொடுத்தும், எட்டுமாதங்களாகி விட்டது. இத் தாமதத்திற்கு முக்கிய காரணம், எங்கள் இருவரின் உடல் நலமின்மையே.

இதற்கிடையில் வல்வையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருவாளர் சூசைப்பிள்ளை பென்ஜமின் அருமைநாயகம் அவர்கள், (B. Sc., C. Eng., m. g Chem. E., Coustltant Engineer.) இப்படியாக ஒரு நூல் நாங்கள் எழுதிப் பதிப்பிக்கிறோம் என்பதைக் கேள்வியுற்று, இத் தொண்டில் தாமும் பங்குகொள்ள வேண்டுமென தாமாகவே முன்வந்து, கவனிக்கத் தகுந்த, ஒரு தொகையை எங்களிடம் கொடுத்தார்கள் பணம் பெரிதல்ல மப்பும் மந்தாரமும் வல்வையைச் சூழ்ந்திருப்பது தெரிந்தும் இத் தொண்டில் பங்கு கொள்ள வேண்டும் என்ற எண்ணம் இருக்கிறதே. அதை இந் நூலின் ஆசியர்களான நாம் இருவரும் மதிக்கிறோம் போற்றுகிறோம்.

❋

அச்சுப்பதிவு:
குமரர் அச்சகம்
பருத்தித்துறை